# திட்டம்

மாத இதழ்

மலர் 50

இதழ் 12

ஆகஸ்ட் 2018

ஷ்ரவண - பாத்ரபத 1939



முதன்மை ஆசிரியர்

**தீபிகா கச்சல்**

இணை ஆசிரியர்

**ஆ. இளங்கோவன்**

துணை ஆசிரியர்

**சஞ்சய் கோஷ்**



கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டங்களால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.



**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| சிறப்பிதழ் | ... | ரூ. 30.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |

**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**

உதவி இயக்குநர்

**திட்டம்**

வெளியீட்டுப்பிரிவு

A Wing இராஜாஜி பவன்

பெசன்ட் நகர்

சென்னை -600 090

தொலைபேசி : 044-2446 5382


## உள்ளடக்கம்


- தலையங்கம்
- நலிவடைந்தப் பிரிவினருக்கு நிதி உள்ளடக்கத்தின் மூலமாக அதிகாரம் அளித்தல் மற்றும் வளர்ச்சி வாய்ப்புகளை அதிகரித்தல் - எஸ்.பி.முனிராஜு
- சமூக நீதியும் அதிகாரம் அளித்தலும் - நீலம் சாஹினி
- மாற்றுத்திறனாளிகளுக்கு சமூக அதிகாரம் அளித்தல் - டாக்டர். சந்தியா லிமாயி
- விளிம்பு நிலை மக்களிடம் தொழில்முனைவை வளர்த்தெடுப்பதற்கான உத்திகள் - சுனில் சுக்லா
- உள்ளாட்சி அமைப்புகளில் விளிம்புநிலை சமுதாயத்தினருக்கு அதிகாரம் அளித்தல் - டாக்டர் டி.பிரம்மானந்தம், டாக்டர் கே.வி.ஸ்ரீநிவாஸ்
- உயர்கல்வி மூலம் அதிகாரம் அளித்தல்: பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினரிடையே சமூகமாற்றம் - எஸ்.சீனிவாசராவ், டி.எஸ்.சுந்தரேஷா
- தமிழ்நாட்டில் பெண் குழந்தைகளுக்கான திட்டங்கள் - செனிட்டா ரோசலின்
- மாற்றுத்திறனாளிகள் மையம் - ஹிமாங்ஷுதாஸ்
- பிளாஸ்டிக் மாசு ஒரு பார்வை - ந.கோதண்டராமன்
- சரக்கு மற்றும் சேவை வரி ஒரு மீள் பார்வை - அ. கோவிந்தராஜ்
- உங்களுக்குத் தெரியுமா?



Log on to **http://publicationsdivision.nic.in/**

*in collaboration with* **bharatkosh.gov.in**

# ஒன்றாக அணிவகுப்போம்

ஒருவன் ஒரு தனி மனிதனாக தனது வாழ்க்கை மீது கட்டுப்பாடு கொண்டிருத்தலே சக்திபெறுதல் அல்லது அதிகாரம் பெறுதல் எனப்படுகிறது. சமூகத்தில் உள்ள அனைத்துப்பிரிவுகளும் தங்களின் வாழ்க்கையிலும், தங்களுக்கு இருக்கும் வாய்ப்புகளிலும் முக்கியமான முடிவுகளை எடுப்பதில் மற்றவர்களுக்கு சமமான கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பது சமூக அதிகாரம் எனப்படும். ஒவ்வொருவருக்கும் இது வேறுபட்ட தாத்பரியத்தை அளிக்கிறது. சமூகப்பழக்கங்கள், சமூக விதிமுறைகள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் தங்கள் விரும்பியதைச் செய்வதே சுதந்திரம் என இளைஞர்களுக்கு பொருள்படுகிறது. வயதானவர்களுக்கு தங்கள் வாழ்வின் அந்திப்பொழுதில் கண்ணியத்துடனும், சுயமரியாதையுடனும் வாழ்வதே சுதந்திரம் என பொருள்படும். ஆண்களுக்கு பொருளாதார சுதந்திரமும், பெண்களுக்கு பாலின அடிப்படையில் பாகுபாடு இல்லாத நிலையும் சுதந்திரம் என்பதாகப்படும்.

ஒரு தேசம் வளர்வதற்கு அதில் வசிக்கும் அனைத்து சமூகப்பிரிவினரும் சமமான வகையில் அதிகாரம் பெறுவது முக்கியமான முதல் தேவையாகும். வெவ்வேறு வகையான கொள்கைகளும், செயல்திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு சரிசமமான வளர்ச்சி வாய்ப்புகள் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்வதன் மூலமே இதனை சாதிக்கமுடியும். சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் அதிகாரம் பெறச் செய்வதற்கு அரசாங்கம் பல்முனை அணுகுமுறையை மேற்கொண்டுவருகிறது.




தேசத்தின் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு பெண்கள் மிக முக்கியமான கருவிகளாவர். பிரதமர் நரேந்திரமோதி அவர்களின் வார்த்தைகளில் சொல்வதானால் "பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் என்பது ஒரு குடும்பதிற்கே அதிகாரம் அளித்தலுக்கு ஒப்பானதாகும்." இந்தியாவில், பெண்களுக்கு அதிகாரம் பெறுவதற்கான போராட்டம் பிறப்பு முதற்கொண்டே தொடங்கிவிடுகிறது. பிறப்பதற்குள்ள தனது உரிமைக்காகவே கூட போராட வேண்டிய நிலை பெண்குழந்தைக்கு இருக்கிறது. இதனைப் புரிந்துகொண்டு பெண்களுக்கு அதிகாரம்

அளிப்பதற்கு அரசாங்கம் பல முன்முயற்சிகளை எடுத்துவருகிறது. பெண்குழந்தைகளைப் படிக்கவைப்போம், பெண்குழந்தைகளைப் பாதுகாப்போம் (Beti Bachao Beti Padhao), பெண் குழந்தைகளுக்கான சேமிப்புத்திட்டம் (Sukanya Samridhi Yojana), பிரதமமந்திரி மகப்பேறு திட்டம் ( Pradhan Mantri Matri Vandana Yojana) போன்ற பல முன்முயற்சிகள் சமூகத்தில் பெண்களின் நிலையை உயர்த்துவதில் பெரும் பங்காற்றும்.

தாழ்த்தப்பட்டோர், மலைவாழ்மக்கள், பிற்படுத்தப்பட்டோர் போன்ற ஏழைகள், விளிம்புநிலை மக்களுக்கு அதிகாரமளித்தல் என்பது பலவற்றையும் அவர்கள் எளிதில் அணுகக்கூடிய வாய்ப்பு நிலையைப் பொறுத்து அமைந்திருக்கிறது. பிரதமரின் ஜன் தன் யோஜனா, முத்ரா திட்டம், தொழில் முயற்சிகளுக்கான மூலதனத்திட்டம், தொழில் தொடங்கிடும் இந்தியா (Start Up India), நிமிர்ந்து நிற்கும் இந்தியா (Stand Up India), திறன் இந்தியா (Skill India), கல்வி உதவித்தொகைத் திட்டங்கள், வேலைகளில் இட ஒதுக்கீடு போன்றவை இத்தகைய பிரிவினரையும் உள்ளடக்கிய வாய்ப்புகளையும், வளர்ச்சிக்கான வளங்களைப் பெறுவதில் சமமான அணுகலும் கிடைக்கச் செய்கின்றன.

மூத்த குடிமக்கள் அனுபவமும், அறிவாற்றலும் மிக்கவர்கள். அவர்கள் தங்களது அந்திமக்காலத்தில் புறக்கணிக்கப் பட்டவர்களாகவும், தேவையற்றவர்களாகவும் உணர்கின்றனர். ராஷ்டிரிய வயோஷ்ரி யோஜனா, அடல் ஓய்வூதியத்திட்டம், வய வந்தன யோஜனா ஆகிய திட்டங்கள் மூத்த குடிமக்கள் பொருளாதார சுதந்திரத்துடன் கௌரவமான வாழ்க்கை வாழ்வதற்குத் துணைபுரிகின்றன.

மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைக் கதை முற்றிலும் வித்தியாசமானது. இயலாமை காரணமாக அவர்கள் தங்களை ஒரு சமூகச்சுமையாக உணர்கின்றனர். அவர்களுக்கு அதிகாரம் கிடைக்கச்செய்வது என்பது அவர்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு வித்தியாசமான வகையில் நிறைவேற்றப்பட வேண்டியது. தொழில்நுட்ப வளர்ச்சித் திட்டங்கள், குறைபாடு உள்ளவர்கள் உட்பட அனைவருக்கும் கல்வி, எளிதில் அணுகக் கூடிய இந்தியா பிரசாரம், தீன் தயாள் மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வுத்திட்டங்கள் போன்ற திட்டங்கள் மாற்றுத்திறன் கொண்டவர்கள் தரமான வாழ்க்கையைப் பெறுவதற்கு உற்சாகமளித்து உதவி வருகின்றன.

மலைவாழ் மக்களுக்கு அதிகாரம் அளித்தல் என்பது அவர்களின் இன அடையாளத்துடன் தொடங்குகிறது. பல சமயங்களில் அரசுத்திட்டங்களும், கொள்கைகளும் அவர்களை அந்நியப்பட்டவர்களாக, முதன்மை நீரோட்டத்திலிருந்து விலகி நிற்பவர்களாக, தனிமைப்படுத்தப்பட்டவர்களாக உணரச்செய்கின்றன. உயர்கல்விக்கு தேசிய உதவித்தொகை, தொழிற்பயிற்சித் திட்டங்கள், சிறு சிறு வன உற்பத்திப் பொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை, பாதிக்கப்படும் நிலையில் உள்ள மலைவாழ்மக்களுக்கு வளர்ச்சிக்கான திட்டங்கள், வன உரிமைச் சட்டம் போன்ற அரசாங்கத்தின் அண்மைக்கால முன்முயற்சிகள் மலைவாழ் மக்கள் சமூக, பொருளாதார அதிகாரம் பெறுவதற்கு பங்களிப்பு செய்திருக்கின்றன.

வளர்ச்சிப்பாதையில் முன்னேறிச் செல்லவேண்டுமாயின் வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களையும் உடன் அழைத்துச் செல்லவேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. முயற்சிகளை மேற்கொள்ளும்போது ஒவ்வொரு நபரும் மாற்றத்தைக் கொண்டுவரமுடியும். அரசாங்கம் தனது கொள்கைத்திட்டங்களின் மூலம் அனைவரையும் உள்ளடக்கிக்கொண்டு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை ஏற்கனவே தொடங்கிவிட்டது.

**- ஆசிரியர்**

# நலிவடைந்தப் பிரிவினருக்கு நிதி உள்ளடக்கத்தின் மூலமாக அதிகாரம் அளித்தல் மற்றும் வளர்ச்சி வாய்ப்புகளை அதிகரித்தல்

- எஸ்.பி.முனிராஜு

சமுதாயத்தில் உள்ள நலிவடைந்த பிரிவினர் அனைவருக்கும் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் நீதி வழங்குதல், சமத்துவமான அந்தஸ்து கிடைப்பதை உறுதி செய்தல், சமூகப் பாதுகாப்பும் பொருளாதார / நிதிப்பாதுகாப்பும் வழங்குதல் ஆகியவை வழங்கப்படுவதற்குத் தேவையான பிரிவுகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்படவேண்டும் என்பதை அதை உருவாக்கியவர்கள் முன்கூட்டியே சிந்தித்ததுடன், அவை அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்படுவதையும் உறுதி செய்தனர். மத்தியில் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அனைத்து அரசுகளும் பரவலான பொருளாதார உள்ளடக்கத்தை உறுதி செய்வதற்கான சமூக மற்றும் பொருளாதாரத் தேவைகளை அங்கீகரித்ததுடன், ஏழைகளை சமுதாயத்தின் மற்ற பிரிவினருக்கு இணையாக உயர்த்துவதற்குத் தேவையான புதுமையான வழிகளை அவ்வப்போது கண்டுபிடித்து அதற்குத் தேவையான கொள்கை மாற்றங்களையும் நடைமுறைப்படுத்தினார்கள். சமுதாயத்தின் கடைநிலையில் உள்ள மக்களுக்கு சமூக மற்றும் பொருளாதாரப் பாதுகாப்புகளை உறுதி செய்வதற்குத் தேவையான அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்கள் மற்றும் புதிய சட்டங்களையும் மத்திய ஆட்சியாளர்கள் மேற்கொண்டனர்.

இதற்கான நடவடிக்கைகளின் தொடக்கமாக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. முதன்மைத் துறைத் தேவைகளுக்குக் கடன் வழங்குவதற்காக வங்கி விதிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டன. அரசின் கொள்கை முடிவுகள் செயல்வடிவம் பெறுவதை உறுதி செய்வதற்காக முதன்மை வங்கித்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. ஊரகப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு, அவர்களின் வீடு தேடி வந்து வங்கிச்சேவை வழங்குவதற்காக மண்டல ஊரக வங்கிகள் தொடங்கப்பட்டன. வங்கிகளுக்கான சேவைப் பகுதி அணுகுமுறை என்ற தத்துவமும் அறிமுகம் செய்யப்பட்டது. வணிகம் மற்றும் புதுமையான யோசனைகளுடன் வரும் மக்கள் பொருளாதார செயல்பாடுகளில் நீடித்து நிற்கவும், இலாபமடையும் வகையில் தொழில் செய்யவும் வசதியாக, சுயஉதவிக் குழுக்களுக்கும், வங்கிகளுக்கும் இடையிலான இணைப்புத் திட்டங்களும் அறிமுகம் செய்யப்பட்டன. சமுதாயத்தில் பொருளாதார அடிப்படையில் நலிவடைந்த பிரிவினர் வங்கிச் சேவை பெறுவதை அதிகரிக்கும் வகையில், இந்திய ரிசர்வ் வங்கி ஏராளமான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது.

நிதி உள்ளடக்கம் என்பது அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சரியான நேரத்தில் நிதிச்சேவை கிடைப்பதையும், நலிவடைந்த பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய்ப்பிரிவினருக்கு கட்டுபடியாகும் வட்டி விகிதத்தில் தேவையான கடன் கிடைப்பதையும் உறுதி செய்வதற்கான நடைமுறையாகும். உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் என்ற கோணத்தில் பார்க்கும்போது, நிதி உள்ளடக்கம் என்பது மிக முக்கியமான அம்சமாகத் திகழ்கிறது. உள்ளடக்கிய வளர்ச்சியை மேம்படுத்துதல், நிதி உள்ளடக்கம் சார்ந்த தேவை மற்றும் வழங்கல் நடைமுறையில் உள்ள சவால்களையும், தடைகளையும் போக்குதல் ஆகியவற்றில் மத்திய அரசு, இந்திய ரிசர்வ் வங்கி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், அட்டவணை வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள் மற்றும் நுண் நிதி நிறுவனங்கள் ஆகியவை ஆற்றும் பணிகள் பாராட்டத்தக்கவையாகும்.

உலக அளவில் பார்த்தால், பெரும்பான்மையான நாடுகள் விரிவான வளர்ச்சிக்கான கருவியாக நிதி உள்ளடக்கத்தைப் பார்க்கின்றன. விரிவான வளர்ச்சி என்பது நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் தங்களது வருவாயை எதிர்கால நிதிநிலை அந்தஸ்தை மேம்படுத்துவதற்காகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி செய்வதற்காகவும் பயன்படுத்த

வகை செய்வதாகும். இந்திய மக்களில் கணிசமானவர்கள் பொருளாதாரப் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்கிறார்கள் என்பதால், சமத்துவமான சமுதாயம் ஏற்படுவதை உறுதி செய்வதற்காக நிதி உள்ளடக்கத்தை முக்கியக் கொள்கையாக மத்திய அரசு பயன்படுத்தி வருகிறது. இந்தியாவில் உள்ள 6 இலட்சத்து 49 ஆயிரத்து 481 கிராமங்களுக்கும் வங்கிச்சேவை வழங்குதல் என்ற இலக்கை அடைவதற்கு கணிசமான மக்களுக்கு நிதிச்சேவை என்பது சாத்தியமான வணிக வாய்ப்பாக மாறவேண்டும். இது நிதி நிறுவனங்களின் நிலைத்தன்மைக்கும் வழிவகுக்கும்.

### இந்தியாவில் நிதி உள்ளடக் கத்திற்குத் தடைகள்

இந்தியாவில் முழுமையான நிதி உள்ளடக்கத்தை உறுதி செய்வதற்காக தேவையான அளவு சட்டங்களை நிறைவேற்றுதல், கொள்கை வகுப்பாளர்களின் உணர்வுப்பூர்வமான செயல்பாடுகள், இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டு விதிமுறைகள், முன்னணி வங்கித்திட்டம், நிதித் தகராறுகளை தீர்ப்பதற்காக வங்கி நடுவரை நியமித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பிறகும், இலக்கை எட்டுவதில் சில தடைகள் நிலவுவதை, சில ஆராய்ச்சி முடிவுகள் தெரிவித்துள்ளன.

பொருளாதார வல்லுநர் டி.பி.பாரதி எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையில், மக்களின் குறைந்த வருமானம், வறுமை, கல்வி அறிவின்மை, விழிப்புணர்வின்மை ஆகியவைதான் மக்களிடையே நிதி உள்ளடக்கத்தை ஏற்படுத்த முடியாததற்கான மக்கள் தரப்பு காரணங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். அரசுத் தரப்புக் காரணங்களை பொறுத்தவரை, மக்கள் வாழும் பகுதிகளுக்கு அருகில் வங்கிகள் இல்லாதது, வங்கிகளின் பணி நேரம், மிகவும் சிக்கலான ஆவணமயமாக்கல் மற்றும் நடைமுறைகள், வங்கிப்பணியாளர்களின் அணுகுமுறை மற்றும் மொழி ஆகியவைதான் முக்கியமானவை என்று டி.பி.பாரதி கூறியிருக்கிறார்.

ரஞ்சனி மற்றும் பாப்பட் எழுதிய பொருளாதார ஆய்வுக் கட்டுரையில், "வங்கிக் கடன் வழங்குவதற்கான நடைமுறைகள், அதற்கான ஆவணமயமாக்கல் தேவைகள், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான நெகிழ்வுத் தன்மையற்ற விதிமுறைகள், தேவைகளை மற்றவர்களுக்குத் தெரிவிக்க முடியாத தன்மை, சிறிய அளவிலான கடன்களுக்கு



வங்கிகளை அணுகுவதில் காணப்படும் தயக்கம் ஆகியவைதான் நிதி உள்ளடக்கத்தை எட்டுவதற்கான பாதையில் காணப்படும் முக்கிய தடைகள்" என்று கூறப்பட்டிருக்கிறது.

மற்றொரு பொருளாதார ஆய்வாளர் சரண்சிங் எழுதியுள்ள ஆராய்ச்சிக் கட்டுரையில், நிதி உள்ளடக்கத்தை எட்டுவதற்காக இந்திய ரிசர்வ் வங்கியும், மத்திய அரசும் ஏராளமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதிலும், இன்னும் சாதகமான முடிவுகள் கிடைக்கவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. நிதி உள்ளடக்கத்தை எட்டுவதில் உள்ள சவால்களை வாடிக்கையாளர் சார்ந்த பிரச்சினைகள், தொழில்நுட்பம் சார்ந்த பிரச்சினைகள் என இரு பிரிவாக சரண்சிங் பகுத்துள்ளார். பொதுமக்களுக்கு நிதி சார்ந்த விழிப்புணர்வு போதிய அளவு இல்லாததும், செல்பேசி எண்ணை பதிவு செய்தல், கடவு எண்ணை உருவாக்குவதில் உள்ள சிக்கல்களும்தான் நிதி உள்ளடக்கத்தை அடைவதில் உள்ள பெரும் தடைகள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அணுகுவதற்கான வழிமுறைகள், செல்பேசி சேவை வழங்குவோருடனான ஒருங்கிணைப்பு, ஆகியவைதான் வங்கிகள் தரப்பில் எதிர்கொள்ளப்படும் பெரும் தடைகளாகும். நிதிச்சேவைகள் போதிய அளவில் விரிவுபடுத்தப்படாதது, வங்கிகளின் வணிகத் தொடர்பாளர்களுக்கு போதிய திறமை இல்லாதது ஆகியவையும் நிதி உள்ளடக்கம் வெற்றி பெறுவதற்குத் தடையாக உள்ளன.

ராஜீவ் குப்தா, ஜி.ஆர். ஜஜின்த்ரா ஆகியோர் நிதி உள்ளடக்கம் குறித்து எழுதியுள்ள கட்டுரையில், குறுவிவசாயிகள், நிலமற்ற தொழிலாளர்கள், நிலங்களை வாய்மொழி ஒப்பந்தப்படி குத்தகைக்கு எடுத்து பயிர் செய்பவர்கள், சுய வேலை செய்பவர்கள் மற்றும் அமைப்புசாரா துறை நிறுவனங்கள், நகர்ப்புற குடிசை வாசிகள், இடம் பெயர்ந்தவர்கள் அல்லது இனச் சிறுபான்மையினர் மற்றும் சமூக ரீதியாக புறக்கணிக்கப்பட்ட பிரிவினர், மூத்த குடிமக்கள் மற்றும் பெண்கள் ஆகியோர் நிதி உள்ளடக்கத்தின் வரம்பிற்குள் வரவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அனைவருக்கும் நிதி உள்ளடக்கம் வழங்குவதில் உள்ள சவால்களையும் அவர் பட்டியலிட்டுள்ளார். 1. முகவர், வணிகர்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்புகள், 2. நுகர்வு சார்ந்த செலவுப் போக்குகள், 3. பரிமாற்றம் இல்லாமல் முடங்கிய வங்கிக் கணக்குகள், 4. போதுமான விழிப்புணர்வு இல்லாமை, 5. போதிய கட்டமைப்பு வசதியில்லாமை, 6. குறைவான எழுத்தறிவு விகிதம், 7. சேமிக்கும் பழக்கம் குறைவாக இருத்தல், 8. கொடுத்த கடனை வசூலிப்பதில் உள்ள சிக்கல்கள், 9. சிறிய தொகைக்கான பரிமாற்றத்திற்குக்கூட அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுதல், 10. நிலைத்து நிற்கும் தன்மை ஆகியவைதான் அவர்கள் குறிப்பிட்ட 10 சவால்களாகும்.

2014ஆம் ஆண்டு ஆசு என்பவர், இதுதொடர்பாக ஆய்வு செய்து கட்டுரை எழுதியுள்ளார். அவற்றில் பரிமாற்றச் செலவுகள் மிகவும் அதிகமாக இருப்பதால், வங்கிகளின் கிளைகளை ஊரகப்பகுதிகளில் திறப்பது இயலாதது என்று அந்தக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வணிகத் தொடர்பாளர்கள் மூலம் வங்கிச் சேவை வழங்குவது என்பது, ஊரகப்பகுதிகளில் மட்டுமே நடைமுறையில் உள்ள ஒன்றாகும். நிதி சார்ந்த அறிவு போதிய அளவு இல்லாமை, நிதிச் சேவைகள் போதிய அளவில் சந்தைப்படுத்தப்படாதது ஆகியவைதான் நகர்ப்புறங்களில் தங்களது வசதிக்கு ஏற்ற வகையில், கடன் வழங்கும் தனியார் அமைப்புகளைச் சார்ந்திருக்கும் நகர்ப்புற ஏழைகளிடையே நிதிஉள்ளடக்கம் குறித்து போதிய அளவில் விழிப்புணர்வு ஏற்படாததற்குக் காரணமாகும். மக்களுக்கு அவர்களின் வசதிக்கேற்ப கடன் வழங்கும் ஆதாரங்கள் அதிக அளவில் இருப்பதால் ஏழை மக்கள் வங்கிச் சேவையை பெறுவதிலிருந்து தங்களைத் தாங்களே விலக்கிக் கொண்டிருக்கின்றனர். நிதிச் சேவை சந்தைகள் மக்களுக்கு பலவிதமான வணிகச் சேவைகளை வழங்குகின்றன. எனினும், அது குறித்து விழிப்புணர்வு இல்லாததால், பெரும்பான்மையான மக்கள் அவற்றைப் பயன்படுத்துவதில்லை.

உள்ளடக்கிய வளர்ச்சி என்பது 1969ஆம் ஆண்டில் வங்கிகளை தேசிய மயமாக்கியதால் ஏற்பட்ட சாதனை என்று 2010ஆம் ஆண்டில் எஸ்.கே. ராவ் எழுதிய ஆராய்ச்சிக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. இதுதொடர்பாக ஆய்வு மேற்கொள்வதற்காக இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட புள்ளி விவரங்களை அவர் விரிவாக ஆய்வு செய்தார். அதன் முடிவில், தேசிய மயமாக்கப்பட்ட பிறகு

வங்கிச் சேவையில் ஏற்பட்ட முன்னேற்றம்தான் அதுவரை வங்கிச் சேவை வழங்கப்படாத பகுதிகளுக்கும், ஊரகப் பகுதிகளுக்கும் வங்கிச் சேவையை கொண்டு சென்று சேர்த்தது என்பதை ரிசர்வ் வங்கி வெளியிட்ட புள்ளி விவரங்களை வைத்தே எஸ்.கே.ராவ் நிரூபித்திருக்கிறார். அதே நேரத்தில், வங்கிகள் மிக அதிக எண்ணிக்கையில் கிளைகளை விரிவுபடுத்திய போதிலும், வங்கித்துறை எதிர்கொண்டு வரும் சவால்களை சமாளிக்க முடியவில்லை என்றும், இந்தியாவில் முழுமையான உள்ளடக்கிய வளர்ச்சியை சாதிக்க புதிய வழிமுறைகளை அங்கீகரிக்க வேண்டிய தேவை உள்ளது என்றும் எஸ்.கே.ராவ் தமது ஆராய்ச்சிக்கட்டுரையில் எழுதியிருக்கிறார்.

2010ஆம் ஆண்டில் எஸ்.என். பதஜேனா, பேராசிரியர் ஹெச்.குண்டிமேடா ஆகியோர் 2008ஆம் ஆண்டு வாக்கில் நாட்டின் 16 மாநிலங்களில் நிதி உள்ளடக்கத்தை எட்டுவதற்காக வங்கிகளுடன் சுயஉதவிக் குழுக்கள் இணைக்கப்பட்டதால் ஏற்பட்ட தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். முறைசார்ந்த வங்கிச்சேவை பெருமளவில் வழங்கப்பட்ட போதிலும், சமுதாயத்தில் உள்ள பெரும்பான்மையினருக்கு அடிப்படையான நிதிச் சேவைகள் இன்றுவரை கிடைக்கவில்லை என்று அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நிதி உள்ளடக்கம்: இப்போதைய நிலைமை

இந்தியாவில் நிதி உள்ளடக்கத்தை எட்டுவதற்காக இந்திய அரசு பல்வேறு வழிமுறைகளை வெற்றிகரமாக ஆராய்ந்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் சமூக மற்றும் பொருளாதார அதிகாரமளித்தலில் வியக்கத்தக்க வகையிலான மாற்றம் ஏற்பட்டு வருவதை நாம் பார்த்து வருகிறோம். நமது கவனம் பங்கேற்பு மற்றும் குடிமக்களை ஈடுபடுத்தும் வளர்ச்சி மாதிரியை நோக்கி திரும்பியுள்ளது. நிதி உள்ளடக்கம் தொடர்பாக பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள், பல்வேறு தருணங்களில் மக்களுக்கு அளித்த உறுதிமொழி நமது பொருளாதார அமைப்பில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

### நிதி உள்ளடக்கம் மற்றும் அரசு:

### தேசியபட்டியலின நிதி மற்றும் வளர்ச்சிக்கழகம்

தேசியபட்டியலின நிதி மற்றும் வளர்ச்சிக்கழகம் 1956ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின் 25வது பிரிவின் கீழ் இலாப நோக்கமற்ற அரசு நிறுவனமாக 1989ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இந்தக் கழகத்தின் முதன்மை நோக்கம் என்பது இரட்டை வறுமை கோட்டிற்கும் கீழ் வாழும் பட்டியலின மக்களின் பொருளாதார அதிகாரம் அளித்தலுக்காக நிதியுதவி செய்தல், நிதியைத் திரட்டித் தருதல் ஆகியவை ஆகும். இந்தக் கழகம் மண்டல ஊரக வங்கிகள் மற்றும் அரசு சார்ந்த முகமைகள் மூலம் இரட்டை வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பட்டியலின மக்களுக்கு குறைந்த வட்டியில் பருவ காலக் கடன்கள், நுண் கடன், கல்வி / தொழில் கல்வி மற்றும் பயிற்சிக்கான கடன் ஆகியவற்றை வழங்கிவருகிறது. அதுமட்டுமின்றி, பயனாளிகளுக்கு திறன்மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்துவதற்கான உதவிகளையும் தேசியப் பட்டியலின நிதி மற்றும் வளர்ச்சிக்கழகம் வழங்கிவருகிறது.

இந்தக் கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்து 31.03.2015 வரை, இரட்டை வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 9,41,034 பட்டியலின மக்களுக்கு அரசு சார்ந்த முகமைகள் மூலம் கடன் வழங்கியிருக்கிறது.

### தேசிய பழங்குடியின நிதி மற்றும் வளர்ச்சிக்கழகம்:

தேசிய பழங்குடியின நிதி மற்றும் வளர்ச்சிக்கழகம் கடந்த 2001ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது 1956ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின் 25வது பிரிவின் கீழ் இலாபநோக்கமற்ற அரசு நிறுவனமாக பதிவு செய்யப் பட்டுள்ளது. பட்டியலின மக்களின் பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டுக்காக சலுகை வட்டியில் கடன் வழங்குவதுதான் இந்த நிறுவனத்தின் நோக்கமாகும்.

இந்த நிறுவனம் ஒவ்வொரு சுயஉதவிக்குழுவுக்கும் 25 இலட்சம் ரூபாய் வரையிலான திட்டங்களைச் செயல்படுத்த நிதியுதவி வழங்குகிறது. அதேபோல், சுயஉதவிக் குழுக்களில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் ஏதேனும் திட்டத்தை செயல்படுத்தும்போது ரூ.50 ஆயிரத்திற்கு மிகாத வகையில், அவர்கள் செயல்படுத்தவுள்ள திட்டத்தின் மதிப்பில் 90% வரை கடன் வழங்குகிறது. 5 இலட்சம் ரூபாய் வரையிலான கடனுக்கு 6 விழுக்காடும், 10 இலட்சம் ரூபாய் வரையிலான கடனுக்கு 8 விழுக்காடும், 10 இலட்சம் ரூபாய்க்கும் கூடுதலான கடனுக்கு




10 விழுக்காடும் ஆண்டு வட்டியாக வசூலிக்கப்படுகிறது. இதுதவிர, பழங்குடியினப் பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் ஆதிவாசி மகளிர் அதிகாரம் அளித்தல் திட்டத்தின்கீழ் பழங்குடியினப் பெண்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரையிலான திட்டங்களைச் செயல்படுத்த 90% வரை கடன் வழங்குகிறது. இந்தக் கடனுக்கு ஆண்டுக்கு 4% மட்டுமே வட்டி வசூலிக்கப்படுகிறது.

31.03.2017 வரையிலான 12 ஆண்டு காலத்தில் தேசிய பழங்குடியின நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் ரூ.1654.92 கோடி கடனை வழங்கியுள்ளது. அண்மைக்காலத்தில் ஆதிவாசி கல்விக் கடன்திட்டம், விழிப்புணர்வு உருவாக்கத்திட்டம் போன்ற பழங்குடியின மக்களின் கல்வித்திறன் மேம்பாட்டிற்கான புதிய திட்டங்களை தேசிய பழங்குடியின நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் அறிமுகப் படுத்தியுள்ளது.

**தேசிய துப்புரவுத் தொழிலாளர்கள் நிதி மற்றும் வளர்ச்சிக்கழகம்:**

1997ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் தேதி தேசிய துப்புரவுத் தொழிலாளர்கள் நிதி மற்றும் வளர்ச்சிக்கழகம் தொடங்கப்பட்டது. இந்த நிறுவனம் 1956ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் 25ஆவது பிரிவின்கீழ் இலாப நோக்கமற்ற நிறுவனமாக தொடங்கப்பட்டது. இது முழுக்க முழுக்க இந்திய அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகும். இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் 600 கோடிகளாகும்.

துப்புரவுத் தொழிலாளர் களுக்கு கடன் வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் / யூனியன் பிரதேச அரசுகள் ஆகியவற்றால் பரிந்துரைக்கப்பட்ட மாநில அரசு நிதி முகமைகள், மண்டல ஊரக வங்கிகள் / தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவற்றுக்கு தேசிய துப்புரவுத் தொழிலாளர்கள் நிதி மற்றும் வளர்ச்சிக்கழகம் பணம் கொடுக்கிறது. மாநில அரசு நிதி முகமைகள், மாவட்ட சமூக நலத்துறையுடன் இணைந்து தேவையான பயனாளிகளுக்கு இந்த நிதியை பகிர்ந்து வழங்குகிறது. பொதுத் திட்டங்களுக்கு 15 இலட்சம் வரையிலும், தூய்மை தொழில்முனைவோர் திட்டத்தின்கீழ் 25 இலட்சம் ரூபாய் வரையிலும் இந்த நிறுவனம் சார்பில் நிதியுதவி வழங்கப்படுகிறது.

**தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம்:**

தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் துறை சார்பில் நடத்தப்படும் நிறுவனமாகும். இது 1992ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் தேதி 1956ஆம் ஆண்டு கம்பெனிகள்

சட்டத்தின் 25வது பிரிவின் கீழ் இலாப நோக்கமற்ற நிறுவனமாக தொடங்கப்பட்டது. இதற்கான அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் 1500 கோடி ரூபாய் ஆகும். 2017ஆம் ஆண்டு இறுதிவரை இந்த நிறுவனத்திற்கு இந்திய அரசு 1124 கோடி ரூபாயை மூலதனமாக வழங்கியுள்ளது. பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்கான பொருளாதார மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவது, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் வறுமையில் வாடும் மக்களின் திறன்மேம்பாடு மற்றும் சுயவேலைவாய்ப்பு முயற்சிகளுக்கு உதவுவது ஆகியவைதான் இந்த இலாப நோக்கமற்ற நிறுவனத்தின் நோக்கமாகும். இந்த நிறுவனம் பல்வேறு மாநிலங்களில் உள்ள 46 மாநில நிதி வழங்கல் முகமைகள் மூலம் அதன் நிதிச்செயல்பாடுகளை மேற்கொண்டுவருகிறது. 31.03.2017 வரை இந்த நிறுவனம் ரூ.3575.52 கோடி கடன் வழங்கியுள்ளது. இதன் மூலம், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த 23,00,366 பேர் பயனடைந்துள்ளனர்.

### தேசிய சிறுபான்மையினர் நிதி மற்றும் வளர்ச்சிக்கழகம்:

தேசிய சிறுபான்மையினர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் 1994ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் தேதி தொடங்கப்பட்டது. இந்த நிறுவனமும் 1956ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின் 25வது பிரிவின் கீழ் இலாப நோக்கமற்ற நிறுவனமாக தொடங்கப்பட்டதாகும். சிறுபான்மையினரின் சுயவேலைவாய்ப்பு மற்றும் வருவாய் உருவாக்க நடவடிக்கைகளுக்காக சலுகை வட்டியில் கடன் வழங்குவதுதான் இந்த நிறுவனத்தின் முதன்மைப் பணியாகும். 1992ஆம் ஆண்டின் தேசிய சிறுபான்மையினர் ஆணைய சட்டத்தின் படி, இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர், பார்சிகள் ஆகியோர் சிறுபான்மையினராக அறிவிக்கப்பட்டுள்ளனர். அதன் பின்னர் 2014ஆம் ஆண்டில் சிறுபான்மையின சமுதாயங்கள் பட்டியலில் ஜெயின் சமுதாயமும் சேர்க்கப்பட்டது. தேசிய சிறுபான்மையினர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் கைவினைக் கலைஞர்கள் மற்றும் பெண்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கடன் வழங்கப்படுகிறது.

1994ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் தொடங்கப்பட்டது முதல், 30.06.2018 வரை 14,26,308 பயனாளிகளுக்கு ரூ.4,680.16 கோடியை கடனாக வழங்கியுள்ளது. 2017-18 ஆம் ஆண்டில் மட்டும் 1,29,489 பயனாளிகளுக்கு ரூ.570.83 கோடி கடன் வழங்கப்பட்டிருக்கிறது. நடப்பு நிதியாண்டான 2018-19இல் 30.06.2018 வரை 10,800 பயனாளிகளுக்கு ரூ.112 கோடியை இந்த நிறுவனம் கடனாக வழங்கியுள்ளது.

### தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம்:

தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் உடல் ஊனமுற்ற மக்களுக்கு பொருளாதார அதிகாரம் அளிப்பதில் முக்கியப் பங்காற்றும் நோக்குடன் இந்திய அரசால் 1997ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் தேதி தொடங்கப்பட்டது. இந்த நிறுவனமும் 1956ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின் 25வது பிரிவின் கீழ் இலாப நோக்கமற்ற நிறுவனமாகத் தொடங்கப்பட்டதாகும். இந்த நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.400 கோடியாகும். இந்நிறுவனம் மாற்றுத் திறனாளிகளின் நலனுக்கான முதன்மை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்காகவும், அவர்கள் சமூக, பொருளாதார ஏணியில் ஏறி உயர்நிலையை அடைவதற்கு உதவுவதற்காக நிதியுதவியை செய்துவருகிறது. மாற்றுத்திறனாளிகள் தொழில் செய்வதற்காகவும், ஏற்கெனவே செய்து வரும் தொழிலை விரிவுபடுத்துவதற்காகவும் குறைந்த வட்டியில் கடனுதவி வழங்குகிறது. மாற்றுத் திறனாளிகளின் உயர் கல்விக்காகவும் இந்த நிறுவனம் குறைந்த வட்டியில் கடனுதவி வழங்குகிறது. தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் 31.03.2017 வரை 1,42,349 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.801.66 கோடி கடன் வழங்கியுள்ளது.

### தேசிய மகளிர் நிதியம்:

தேசிய மகளிர் நிதியம் என்பது மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தன்னாட்சி அமைப்பாகும். இது 1860ஆம் ஆண்டு சொசைட்டிகள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சொசைட்டி ஆகும். இது மகளிருக்கு நிதியுதவி வழங்குவதற்கான தலைமை நுண் நிதி அமைப்பாகத் திகழ்கிறது. ஏழைப்பெண்களின் சமூக , பொருளாதார முன்னேற்றத் திற்கான பல்வேறு வாழ்வாதார

ஆதரவுத் திட்டங்கள், வருவாய் உருவாக்க நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு குறைந்த வட்டியிலும், வாடிக்கையாளர்களுக்குச் சாதகமான நடைமுறையைப் பயன்படுத்தியும் கடன் வழங்குவதுதான் இந்த நிதியத்தின் முதன்மை நோக்கமாகும். பரம ஏழைகளுக்கும், சொத்து இல்லாத பெண்களுக்கும் தொழில் முனைவுக்கான கடன் வழங்குவதற்காக இடைத்தரகு அமைப்புகளுக்கு ஆண்டுக்கு 6% வட்டி விகிதத்தில் கடன் வழங்குகின்றன. அந்தக் கடனைக் கொண்டு இந்த அமைப்புகள் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ஆண்டுக்கு 14% வரையிலான வட்டிவிகிதத்தில் கடன் கொடுக்கின்றன.

**முத்ரா திட்டம்:**

இந்தியாவில் முத்ரா வங்கி தொடங்குவதற்கான அறிவிப்பை 2015-16ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அருண்ஜெட்லி வெளியிட்டார். அதைத் தொடர்ந்து கார்ப்பரேட் அல்லாத, விவசாயம் சாராத, சிறு, குறு தொழில் நிறுவனங்கள் தொடங்குவதற்காக 10 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்கும் நோக்குடன் முத்ரா வங்கியை 08.04.2015 அன்று பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார். வணிக வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள், சிறு நிதி வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், நுண் நிதி நிறுவனங்கள், வங்கி சாரா நிதி நிறுவனங்கள் ஆகியவை மூலம் இந்தக் கடன் வழங்கப்படுகிறது.

இத்தகைய கடன் பெற விரும்புவோர் கடன் வழங்கும் நிறுவனங்களை நேரடியாக அணுகலாம் அல்லது முத்ரா இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பம் செய்யலாம். பிரதம மந்திரியின் முத்ரா திட்டத்தின் கீழ் முத்ரா வங்கி மூன்று கடன் திட்டங்களை உருவாக்கியுள்ளது.

**ஸ்டேன்ட் அப் இந்தியா திட்டம்:**

புதிய தொழில் நிறுவனங்களை தொடங்குவதற்காக ஒவ்வொரு வங்கிக் கிளை சார்பிலும் குறைந்தபட்சம் ஒரு பட்டியலினத்தவர் அல்லது பழங்குடியினருக்கும், ஒரு பெண்ணுக்கும் ரூ.10 இலட்சம் முதல் ரூ.1 கோடி வரை கடன் வழங்க ஸ்டேன்ட் அப் இந்தியா திட்டம் வகை செய்கிறது. அவர்கள் புதிதாக தொடங்கவுள்ள தொழில் உற்பத்தி சார்ந்ததாகவோ, சேவை வழங்குவதாகவோ, வணிகமாகவோ இருக்கலாம். இந்தக் கடனுக்காக வசூலிக்கப்படும் வட்டி சம்பந்தப்பட்ட தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்படும் வட்டி விகிதங்களில் மிகவும் குறைவானதாக இருக்கவேண்டும். அடிப்படை குறைந்தபட்ச கடன் வட்டி விகிதத்துடன் 3% வட்டி, பாலிசி கால காப்பீட்டுத் தொகை ஆகியவற்றுக்கும் கூடுதலாக இருக்கக்கூடாது என்பது விதியாகும். தொழில் தொடங்குவதற்கான மத்திய / மாநில அரசுத் திட்டங்களுடன் 25% தொழில் தொடங்குவோர் பங்கு நிதியை இணைத்து வழங்க இத்திட்டம் வகை செய்கிறது.

ஸ்டேன்ட் அப் இந்தியா திட்டத்தின்கீழ் பொதுத்துறை, தனியார் துறை மற்றும் மண்டல வங்கிகள் சார்பில் இத்திட்டம்

**பிரதம மந்திரியின் முத்ரா திட்டத்தின்கீழ் 08.04.2015 முதல் 29.06.2018 வரை சமூகப் பிரிவு வாரியாக வழங்கப்பட்ட கடன்களின் விவரம்:**

(ரூ. கோடிகளில்)

| வ. எண் | பிரிவுகள் | கணக்கு எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை | பிரிவு வாரியான கடனாளிகள் சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பொதுப்பிரிவு | 59233552 | 395056.94 | 45.20% |
| 2 | பட்டியலினத்தினர் | 23357466 | 62982.95 | 17.82% |
| 3 | பழங்குடியினர் | 6620737 | 20035.25 | 5.05% |
| 4 | பிற பிற்படுத்தப்பட்டோர் | 41834204 | 137084.29 | 31.92% |
| 5 | மொத்தம் | 131045959 | 615159.43 | |

ஆதாரம்: முத்ரா இயக்கம்

தொடங்கப்பட்டது முதல் 07.03.2018 வரை வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை முறையே 51,888 மற்றும் 2,445 மற்றும் 1,009 ஆகும். இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் 07.03.2018 வரை மண்டல ஊரக வங்கிகளின் சார்பில் பட்டியலினத்தைச் சேர்ந்த 180 பேருக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**தொடக்கநிலை மூலதன நிதித் திட்டம் :**

தொழில் தொடங்குவதற்கு தேவைப்படும் நிதியை வழங்குவதற்காக தொடக்க நிலை மூலதன நிதித்திட்டம் இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்தின் சார்பில் தொடங்கப்பட்டுள்ளது. பட்டியலினத்தைச் சேர்ந்தவர்களிடையே தொழில் முனைவை ஊக்குவிப்பதற்காக குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதற்காக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

**கடன் விரிவாக்க உத்தரவாதத் திட்டம்:**

நாடாளுமன்றத்தில் 2014ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2014-15ஆம் ஆண்டுக்கான மத்திய நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த நிதியமைச்சர், பட்டியலினத்தைச் சேர்ந்த புதிதாக தொழில் தொடங்க விரும்பும் இளைஞர்களுக்குக் கடன் வழங்கும் நோக்குடனான கடன் விரிவாக்க உத்தரவாதத் திட்டத்திற்கு ரூ.200 கோடி நிதி வழங்கப்படும் என்று அறிவித்தார். பட்டியலின மக்களிடையே நம்பிக்கையை உருவாக்குவது மட்டுமின்றி சமுதாயத்தின் கடைநிலையில் உள்ள மக்களிடையே தொழில் முனைவை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் துறை அதன் சமூகம் சார்ந்த முயற்சிகளின் ஓர் அங்கமாக பட்டியலினத் தவருக்கான கடன் விரிவாக்கத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

**கடன்பெறத் தகுதியானவர்கள் மற்றும் உத்தரவாதம்:**

31.12.2017 வரை இத்திட்டத்தின் அங்கமாக உள்ள கடன் வழங்கும் நிறுவனங்களின் மூலம் ரூ.21.27 கோடி மதிப்புள்ள கடன்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதில் ரூ.14.40 கோடிக்கான கடன் உத்தரவாதத்தை இந்தியத் தொழில் நிதிக்கழகம் வழங்கியுள்ளது. தலித் வணிக சபைகளின் பல்வேறு பிரிவுகளுடன் இணைந்து கருத்தரங்குகள், மாநாடுகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடத்துவதன் மூலமும், மாநில அளவிலான வங்கியாளர் குழுக் கூட்டங்களில் பங்கேற்பதன் மூலமும் இந்தக் கடன் விரிவாக்க உத்தரவாதத் திட்டம் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. இத்திட்டம் குறித்து நாடு முழுவதும் உள்ள பொதுத்துறை வங்கிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

**பிரதம மந்திரியின் வங்கிக் கணக்குத் திட்டம்:**

பிரதம மந்திரியின் ஜன் தன் யோஜனா என்றப் பெயரிலான வங்கிக் கணக்குத் திட்டத்தை 15.08.2014 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தொடங்கி வைத்தார்கள். சமுதாயத்தின் நலிவடைந்த மக்களுக்கு வங்கிச் சேவை, ஓய்வூதியம் மற்றும் காப்பீடு ஆகியவற்றை வழங்கி அவர்களுக்கு நிதிச் சுதந்திரம் மற்றும் நிலைத்தன்மையை வழங்கும் நோக்குடன் அவர்களுக்கான நிதி உள்ளடக்கத்தை உறுதி செய்வதற்காக இந்தத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் 1.5 கோடி வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன.

சமுதாயத்தின் நலிவடைந்த நிலையில் உள்ள மக்களுக்கு உள்ளடக்கிய அதிகாரம் அளிக்க இந்திய அரசு உறுதி பூண்டிருக்கிறது என்பதை மேற்கூறிய திட்டங்கள் தெளிவாக உணர்த்துகின்றன. ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போன்று சமுதாயத்தின் நலிவடைந்த மக்களின் வறுமையைப் போக்கி, அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு திட்டங்களை இப்போதுள்ள மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்திக்கொள்ளலாம்.

---

- **முனைவர் எஸ்.பி.முனிராஜு,** துணை ஆலோசகர், சமூகநீதி, அதிகாரமளித்தல் பிரிவு, நிதி ஆயோக், புதுதில்லி.

# சமூக நீதியும் அதிகாரம் அளித்தலும்

- நீலம் சாஹினி

**அறிமுகம்**

சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் துறையின் தொலைநோக்குப் பார்வை என்பது நமது அரசியல் அமைப்பு முறைக்கு ஒத்திசைந்ததாக இருக்கிறது. நமது மக்கள் தொகையில் மிகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும் பின்தங்கி உள்ளவர்களாகவும் இருக்கின்ற பிரிவினர்களையும் உள்ளடக்கிய ஒரு சமுதாயத்தை உருவாக்கி அவர்களை கண்ணியமாகவும் மதிப்புடனும் வாழச்செய்வதும் தேசத்தின் மனிதவள மூலதனத்திற்கு அவர்களை ஆக்கப்பூர்வமாகப் பங்களிப்பு செய்யவைப்பதுமே இத்துறையின் தொலைநோக்குப் பார்வையாகும். சமூகநீதி மற்றும் அதிகாரம் அளித்தல் துறையின் கட்டாயப்பணி என்பது தாழ்த்தப்பட்டோர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சமூகத்தில் பாதிப்புக்கு ஆளாகும் ஏனைய பிரிவினர்களுக்கு பொருளாதாரம், கல்வி மற்றும் சமூகம் சார்ந்த அதிகாரம் அளித்தல் என்பதே ஆகும். இந்தத்துறையின் முதன்மைச் செயல்பாடுகளில் ஒன்றாக விளிம்புநிலையில் உள்ளவர்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்துவதும் அவர்களின் மீதான அக்கறையை அரசாங்கத்தின் அனைத்து கொள்கைகளிலும் செயல் திட்டங்களிலும் இணைப்பதுவும் ஆகும்.

மக்கள் தொகையில் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்களுக்கான முக்கிய இலக்குக் குழுவினராக இந்தப் பிரிவினர் உள்ளனர். இந்த அக்கறையானது நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் கிராம சுயராஜ்ஜிய இயக்கம், அந்த்யோதயா இயக்கம், பின்தங்கிய மாவட்டங்களை முன்னேறிய மாவட்டங்களாக மாற்றும் திட்டம் போன்ற திட்டங்களில் இணைக்கப்பட்டுள்ளது.

**இலக்கு மக்கள் தொகை பிரிவினர் குறித்த புள்ளிவிவரம் - கட்டத்திற்குள் தரப்பட வேண்டிய விவரம்:**

- 2011ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி நாட்டின் மக்கள்தொகையில் தாழ்த்தப்பட்ட மக்களின் பங்கு 16.6% ஆகும்.
- நாடு முழுவதும் 522 மாவட்டங்களில் உள்ள 46859 கிராமங்களில் தாழ்த்தப்பட்டோர் மக்கள் தொகை 50%க்கும் அதிகமானதாக உள்ளது.
- சுதந்திரத்திற்குப் பிறகு இதர பிற்படுத்தப்பட்ட சாதிகள் குறித்த கணக்கெடுப்பு ஏதும் இதுவரை நடத்தப்படவில்லை. மண்டல் கமிஷன் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 52% என்றும் தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு (NSSO) - 2009-10 41.7% என்றும் கணக்கிட்டு உள்ளது.
- மூத்த குடிமக்கள் எண்ணிக்கை 10.36 கோடி ஆகும்.
- மொத்த மக்கள் தொகையில் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு அடிமையானவர்களாக 1% நபர்கள் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

**தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மேம்பாடு**

எஸ்.சி (தாழ்த்தப்பட்ட வகுப்பினர்) மக்கள் பிரிவினர் கல்வி ரீதியாக அதிகாரம் பெற வேண்டும் என்ற இலக்கை அடைவதற்காக இந்தத்துறைக்காக செலவிடப்படும் பட்ஜெட்டில் அதிக அளவு நிதியானது கல்வி உதவித்தொகையாக அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த இலக்குக்குழுவுக்குள் உதவித்தொகையை வழங்கியதில் குறிப்பிடத்தக்க வெற்றி கிடைத்துள்ளது. மெட்ரிக் படிப்புக்குப் பிறகான உதவித்தொகை என்பது துறையின் முன்னோடித்திட்டமாகும். இந்தத்திட்டம் 1944ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி அதிகாரத்தைக் கொடுப்பதில்



இந்திய அரசு மேற்கொண்ட மிகப்பெரிய ஒற்றை இடையீட்டுச் செயலாக இது உள்ளது. இந்த உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் ஓராண்டில் சுமார் 55 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள். உதவித்தொகை பெற்று இவர்கள் மெட்ரிக்நிலைக்கு மேல் அல்லது செகண்டரி நிலைக்கு மேல் பிஎச்.டி வரை படிக்கின்றார்கள். 2014ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை 2,29,30,654 மாணவர்கள் இந்த கல்வி உதவித்தொகையைப் பெற்றுள்ளனர். இவர்களுக்கு உதவித்தொகையாக இதுவரை ரூ.10,388 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகைகள் இலக்குக்குழுவினரிடம் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. எழுத்தறிவு நிலை, இடைநிற்றல் விகிதம், உயர்கல்வி கற்றல் ஆகியவற்றில் முன்னேற்றம் காணப்படுகிறது. அதுமட்டுமின்றி சிறப்பான தகுதி நிலையையும் அவர்கள் அடைந்து தேசத்தின் சேவைக்குத் தேவைப்படும் மனிதவள மூலதனமாகவும் மாறியுள்ளார்கள். அண்மையில் மத்திய அமைச்சரவை நிலுவையில் உள்ள உதவித்தொகையான ரூ.8737 கோடியை மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு வழங்க அனுமதி அளித்துள்ளது. அதேபோன்று 2018-2019இல் இந்த நோக்கத்துக்காக ரூ.30,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மெட்ரிக் வகுப்புக்கு முன்பான உதவித்தொகை, முன்னணி கல்வி நிலையங்களில் படிப்பதற்கான டாப் கிளாஸ் கல்வித்திட்டம் மற்றும் யூ.ஜி.சியுடன் சேர்ந்து தரப்படும் தேசிய ஃபெல்லோஷிப் திட்டம் போன்றவை தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக உள்ள இதர கல்வி உதவித்திட்டங்கள் ஆகும்.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பாதுகாப்பாகவும் கண்ணியத்துடனும் வாழ உதவுவதற்காக இருக்கும் மிக முக்கியமான சட்டம் என்று "தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989ஐ குறிப்பிடலாம். தற்போதைய அரசாங்கம் இந்தச் சட்டத்தை 14.4.2016 முதல் மேலும் வலுப்படுத்தியுள்ளது. 47 வன்கொடுமைக் குற்றங்களுக்கான நிவாரணத்தொகை, நிவாரணத்தொகை வழங்குவதில் ஏற்படும் இடைவெளியை சீரமைத்தல், குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப நிவாரணத் தொகையை ரூ.85,000 முதல் ரூ.8,25,000 வரை அதிகரித்தல், அனுமதிக்கப்பட்ட நிவாரணத்தொகையை பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏழு நாட்களுக்குள் வழங்குதல், வழக்கு விசாரணை குறிப்பிட்ட காலத்தில் தொடங்கி நடைபெற உதவும் வகையில் புலன் விசாரணையை விரைவில் முடித்து 60 நாட்களுக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தல் ஆகியவை தொடர்பான சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் துறையானது திட்டங்களை நேரடியாக நடைமுறைப்படுத்துவதோடு, எஸ்.சிக்கள் நல்வாழ்வுக்கான ஒதுக்கீடு (AWSC) என்பதைத் தொடர்ந்து கண்காணிக்கவும் செய்கிறது. எஸ்.சி துணைத்திட்டமே இப்போது இந்தப் புதிய பெயரில் அழைக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கான சிறப்புக்கூறு திட்டம் என்பது 1979-80 முதல் செயல்பாட்டில் உள்ளது. இது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் நிதியானது விகிதாச்சாரப்படி செலவிடப்படுவதை உறுதி செய்கிறது. இதற்கு முன்பு இருந்த திட்டக்குழு வழங்கிய தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான துணைத்திட்டத்திற்கு உரிய ஒட்டுமொத்தமான வழிகாட்டுதல்களின்படி,

மாநிலங்கள் / அமைச்சகங்கள் / துறைகள் தங்களது மாநிலங்கள் / நாட்டில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள்தொகை சதவிகிதத்துக்கு ஏற்ற விகிதாச்சாரத்தில் தங்களது திட்ட ஒதுக்கீட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான துணைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கவேண்டும். (2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி நாட்டில் உள்ள மக்கள்தொகையில் 16.62% பேர் தாழ்த்தப்பட்டோர் ஆவர்). இந்தத் துணைத் திட்டத்தின் பெயர் 2017இல் "எஸ்.சிக்கள் நல்வாழ்வுக்கான ஒதுக்கீடு (AWSC) என மாற்றப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் 2015-16ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு ரூ.30,850.88 கோடி ஆகும். இது இப்போது 56618.50 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒதுக்கீடு 83.52% அதிகரித்துள்ளது. துறையானது 2017இல் வலைத்தளம் சார்ந்த நுழைவாயில் (e-utthaan.gov.in) ஒன்றை உருவாக்கியுள்ளது. நிதி ஆயோக் வடிவமைத்து உள்ள ஃபார்மட்டுகளுக்கு ஏற்ப கண்காணிப்பு குறிகாட்டிகளின் அடிப்படையில் பல்வேறு அமைச்சகங்கள் / துறைகளிடம் இருந்து நிதி, எண்ணிக்கை மற்றும் விளைவு விவரங்களை இணையத்தின் மூலம் தொகுப்பதற்கு இந்த நுழைவாயில் உதவும். இந்த நிதிக் கண்காணிப்பானது பொது நிதி நிர்வாக அமைப்போடு (PFMS) இணைக்கப்பட்டுள்ளது. சரியான நேரத்தின் அடிப்படையில் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும். எண்ணிக்கை அடையப்பெற்ற பிறகு, அனைத்து ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கும் உள்நுழைவு கடவுச்சொல் அளிக்கப்படும். அவர்கள் தகவல்களை நேரடியாக நுழைவாயில் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்தத் துறையானது கல்வி தவிர, எஸ்.சி குடியிருப்புகளை மேம்படுத்துவதற்காக பிராந்தியம் சார்ந்த அணுகுமுறையைக் கடைபிடிக்கிறது. இந்த அணுகுமுறை கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து, தூய்மை இந்தியா, வாழ்வாதாரம் மற்றும் திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறது. பிரதம மந்திரி ஆதர்ஷ் கிராமத்திட்டமானது எஸ்.சி மக்கள் பெரும்பான்மையாக உள்ள கிராமங்களை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதை இலக்காக கொண்டுள்ளது. மத்திய, மாநிலத்திட்டங்களை ஒன்றிணைத்து நடைமுறைப்படுத்துவதன் மூலம் மற்றும் பற்றாக்குறையை மத்தியநிதியில் இருந்து நிரப்புவதன் மூலம் இது மேற்கொள்ளப்படுகிறது. இந்தத்திட்டமானது மொத்த மக்கள் தொகையில் 50%க்கும் மேல் எஸ்.சி மக்கள் உள்ள கிராமங்களில் செயல்படுத்தப் படுகிறது. துறைக்குள் கிடைக்கும் அனைத்து வளஆதாரங்களையும் தொகுத்து மற்றும் இதர துறைகள் மற்றும் அமைச்சகங்களின் திட்டங்களோடு இணைந்து இந்தத் துறையானது செயலாற்றிவருகிறது.

## பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மேம்பாடு

மற்றொரு முக்கியமான இலக்குக்குழு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆவர். அவர்களுடைய நல்வாழ்வுக்கான ஒதுக்கீடு 2018-19ஆம் ஆண்டில் 41.03% அதிகரிக்கப்பட்டு உள்ளது. 2017-18இல் ரூ.1237.30 கோடியாக இருந்த ஒதுக்கீடு, 2018-19இல் ரூ.1747.00 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோருக்கான நமது உதவிச்செயலாக கல்வி உதவித்தொகை வழங்குவதே இருக்கிறது. இதில் மெட்ரிக் படிப்புக்கு முன்பு, அதற்குப் பின்பும் தரப்படும் கல்வி உதவித்தொகை மற்றும் தேசிய ஃபெல்லோஷிப் போன்றவை அடங்கும்.

திறன்மேம்பாடு என்பது முக்கியமான உதவி இடையீட்டுச் செயலாகும். தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நிதி மற்றும் அபிவிருத்திக்கழகம் மூலம் இது நடைமுறைப் படுத்தப்படுகிறது. இந்த வகுப்பினரின் தொழில் முனைவுத்திறன்களை மேம்படுத்துவதற்கான அடிப்படைக் கட்டமைப்பிலும் அவற்றை நோக்கி நகர்வதுமே இனிமேல் செய்ய உள்ள முக்கியமான பணி ஆகும். இதனால் வேலைவாய்ப்புகளும் உருவாகும். இந்தத் தேவையை நிறைவு செய்வதற்காக வென்ச்சர் மூலதன நிதியத்தைத் தொடங்க முயற்சி நடக்கிறது.

## சமூகப் பாதுகாப்பு

மூத்த குடிமக்கள் என்ற பிரிவு மிக முக்கியமான இலக்குக்குழு ஆகும். ஆனால் இந்தப் பிரிவினரான மூத்த குடிமக்கள் பொதுவாகப் புறக்கணிக்கப்படுகின்றனர். தற்போது மூத்த குடிமக்கள் எண்ணிக்கையும் வயது முதிர்வினால் பிறரைச் சார்ந்திருக்கும் விகிதமும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. மாறிவரும் குடிமையியல், மூத்த

குடிமக்களின் சமூகப்பொருளாதாரத் தேவைகள், சமூகமதிப்பு அமைப்பு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மூத்த குடிமக்களுக்கான திருத்தப்பட்ட கொள்கையானது உருவாக்கப்பட்டு வருகிறது. தற்போது நடைமுறையில் உள்ள மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் 1-4-2015 தேதி முதல் செலவு வரம்பு 110% என உயர்த்தப்பட்டது. இது 1-4-2018 முதல் 104% வரை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதாவது 1-4-2015க்கு முன்பு இருந்த செலவு வரம்பு 288% வரை (ஒரு முதியோர் இல்லத்துக்கு ரூ.5.42 இலட்சத்தில் இருந்து ரூ.21.6 இலட்சம் வரை) அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டத்தின் கீழ் இயன்முறை சிகிச்சை உதவியாளர் பதவிகளும், யோகா ஆசிரியர்கள் பதவிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. மூத்த குடிமக்களுக்கான இல்லங்களைப் பதிவு செய்யவும், தரப்படுத்தவும், தரவரிசைப்படுத்தவும் ஷரத்துகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய வயோஸ்ரீ திட்டம் என்பது மூத்த குடிமக்களின் வயதான காலத்தில் அவர்களது வாழ்க்கைக்குத் தேவையான உபகரணங்களை வழங்கும் திட்டம் ஆகும். இந்தத் திட்டத்தின் கீழ் 292 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 52 மாவட்டங்களில் மதிப்பீட்டு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. 39 மாவட்டங்களில் உபகரணங்கள் வழங்கும் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 43865 மூத்த குடிமக்கள் பயன்பெற்றுஉள்ளனர்.



வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மூத்த குடிமக்களுக்கு என்று இதுவரை மொத்தமாக 99431 உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மது மற்றும் போதைப் பொருள் பயன்பாட்டைத் தடுக்கும் திட்டத்தின் கீழ் இந்தத் துறையின் உதவியால் இயங்கும் போதை மீட்பு மையங்களின் செலவு வரம்பு 1-4-2018 தேதி முதல் 30% அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த மையங்களில் சமையலர்கள், முழுநேர மருத்துவர்கள் மற்றும் ஒரு கூடுதல் காவலர் ஆகியோரை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

போதைப்பொருளுக்கு அடிமை ஆகி உள்ளவர்களைக் கண்டறிய முதன்முறையாக தேசிய அளவிலான கணக்கெடுப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கணக்கெடுப்பு 185 மாவட்டங்கள், 1.5 இலட்சம் வீடுகள் மற்றும் 6 இலட்சம் தனிநபர்களிடம் எடுக்கப்படுகின்றது. தற்போது நடைபெற்று வரும் கணக்கெடுப்பு விரைவில் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கழிவுகளைக் கைகளால் அகற்றும் துப்புரவாளர்களுக்கான மறுவாழ்வுத்திட்டம் மற்றும் கையால் கழிவுகளை அகற்றும் துப்புரவாளர்கள் குறித்த தேசிய கணக்கெடுப்பு

தேசத்தந்தையான மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்த நாளில் கையால் கழிவுகளை அகற்றும் துப்புரவாளர்கள் அனுபவித்துவரும் வரலாற்று ரீதியான அநீதி மற்றும் அகௌரவம் ஆகியவற்றை நீக்கிச் சீர்செய்யவேண்டும் என்று இந்தத்துறையானது உறுதி எடுத்துள்ளது. இந்தத் துப்புரவாளர்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உறுதி எடுக்கப்பட்டுள்ளது. இதனைச் செயல்படுத்த, 18 மாநிலங்களில் அடையாளம் கண்டறியப்பட்ட 170 மாவட்டங்களில் கையால் கழிவுகளை அகற்றும் துப்புரவாளர்கள் குறித்த தேசிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பை மாநில அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளோடு சேர்ந்து தேசிய துப்புரவாளர்கள்

நிதி மற்றும் அபிவிருத்தி கழகம் (NSKFDC) ஒருங்கிணைத்து நடத்தியது. 125 மாவட்டங்களில் கணக்கெடுப்பு முகாம்கள் நிறைவடைந்துள்ளன. இதுவரை 5365 நபர்கள் கையால் கழிவு அகற்றும் துப்புரவாளர்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த தேசிய கணக்கெடுப்பின் மூலம் கையால் கழிவுகளை அகற்றும் துப்புரவாளர் என அடையாளம் காணப்படும் ஒவ்வொரு நபருக்கும் ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் நிதிஉதவியாக ரூ.40,000 அளிக்கப்படும். இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் மறுவாழ்வு நடவடிக்கைகளின் மூலம் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படும்.

மேலும் தேசிய துப்புரவாளர் நிதி மற்றும் அபிவிருத்திக் கழகமானது பயிற்சி அளித்தல், மறுவாழ்வு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகிய அம்சங்களிலும் கவனம் செலுத்தும். முந்தைய கற்றறிவை அங்கீகரித்தல் (RPL) என்ற திட்டத்தின் கீழ் 10000 துப்புரவுப்பணியாளர்கள் மற்றும் குப்பைபொறுக்குபவர்களுக்கு பாதுகாப்பான, ஆரோக்கியமான, இயந்திர உதவியோடு துப்புரவுப்பணியை மேற்கொள்வதற்கு பயிற்சி அளிக்கப்படும். ''கையால் கழிவு அகற்றுபவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்தல் மற்றும் மறுவாழ்வுச் சட்டம், 2013'' என்ற சட்டத்தின் ஷரத்துகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி பெரிய நகராட்சிகளில் நகராட்சிப்பொறியாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள், ஒப்பந்ததாரர்கள் போன்றவர்களை இணைத்து பயிலரங்குகள் நடத்தவும் முக்கியத்துவம் தரப்படுகிறது.

இந்தத்திட்டத்திற்கு நகராட்சி அமைப்புகளை ஈடுபடுத்துவது என்பது கட்டாயமானது ஆகும். துப்புரவுக்குத் தேவைப்படும் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்காக பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சி அமைப்புகளோடு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு துப்புரவு பணியாளர்கள் அடங்கிய சுயஉதவிக்குழுக்களுக்கு கடன் வசதிகள் ஏற்படுத்தித் தரவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கையால் கழிவுகளை அகற்றுவதில் உள்ள ஆபத்து மற்றும் ஆரோக்கியச் சீர்கேட்டில் இருந்து துப்புரவுப் பணியாளர்களை இத்தகைய நடவடிக்கைகள் காப்பாற்றும்.

## நிதிக்கழகங்கள்

இந்தத்துறையில் மூன்று நிதி அபிவிருத்திக் கழகங்கள் உள்ளன. அவையாவன:

1. தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான நிதி மற்றும் அபிவிருத்திக்கழகம் (NBCFDC)
2. தேசிய தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான நிதி மற்றும் அபிவிருத்திக்கழகம் (NSFDC)
3. தேசிய துப்புரவாளர் நிதி மற்றும் அபிவிருத்திக்கழகம் (NSKFDC)

இந்த நிதிக்கழகங்கள் இலாப நோக்கில் செயல்படும் அமைப்புகள் அல்ல. மாறாக, இவை இலக்குக்குழு மக்கள் பலன் அடைவதற்காக பொருளாதார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தும் குறிக்கோளுடன் செயல்படும் அமைப்புகள் ஆகும். இந்த நிதிக்கழகங்கள் இலக்குக்குழு மக்களின் வாழ்வாதாரம், திறன்மேம்பாடு மற்றும் சுயவேலைவாய்ப்புக்கு உதவுகின்றன. இந்த அணுகுமுறையில் பார்த்தால், நிதிக்கழகங்களின் பணி என்பது அரசாங்கத்தின் நீட்டிக்கப்பட்ட உதவிக்கரம் போன்று இருக்கும்.

இந்த நிதிக்கழகங்களின் நிதி மற்றும் எண்ணிக்கைச் சாதனைகள் கீழே தரப்படுகின்றன:

| வ. எண் | திட்டம் / செயல் திட்டத்தின் பெயர் | 2014-2018 | |
|---|---|---|---|
| | | நிதி (ரூபாய் கோடியில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
| 1 | தேசிய தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான நிதி மற்றும் அபிவிருத்திக் கழகம்: | | |
| | (i) கடன் சார்ந்த திட்டங்கள் | 1729.07 | 333245 |
| | (ii) திறன்மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் | 52.12 | 62159 |
| | மொத்தம்: | 1781.19 | 395404 |
| 2 | தேசிய துப்புரவாளர் நிதி மற்றும் அபிவிருத்திக் கழகம்: | | |
| | (i) பொதுக்கடன் திட்டம் | 440.88 | 41645 |
| | (ii) சிறுகடன் திட்டம் | 176.91 | 42890 |

| | | | |
|---|---|---|---|
| | (iii) திறன்மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் | 50.36 | 35017 |
| | மொத்தம்: | 668.15 | 119552 |
| 3 | தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான நிதி மற்றும் அபிவிருத்திக்கழகம்லி | | |
| | (i) பொதுக்கடன் திட்டம் | 732.58 | 132124 |
| | (ii) சிறுகடன் திட்டம் | 734.50 | 531870 |
| | (iii) திறன் மேம்பாட்டுப்பயிற்சித் திட்டம் | 59.78 | 57274 |
| | மொத்தம்: | 1526.86 | 721268 |

### டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையம் (DAIC)

### டாக்டர் அம்பேத்கர் தேசிய நினைவு இல்லம் (DANM)

டாக்டர் பாபா சாஹேப் அம்பேத்கரின் கருத்துகளை மேலும் மக்களிடையே கொண்டு செல்வதற்காக இந்தத்துறையானது டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தை நிறுவியுள்ளது. புதுதில்லி இந்த மையம் சமூகம் மற்றும் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள் குறித்த ஆராய்ச்சிகளையும் மேற்கொள்வதற்கு ஏற்ற முக்கிய இடமாகவும் திகழும். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் அது தொடர்பான சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான கருத்துக் கருவூலமாகவும் இந்த மையம் திகழும்.



டாக்டர் அம்பேத்கர் தேசிய நினைவு இல்லத்தை புதுதில்லி அலிப்பூர் சாலையில் ஏப்ரல் 12, 2018 அன்று மாண்புமிகு பிரதம மந்திரி திறந்துவைத்தார். இது டாக்டர் அம்பேத்கரின் வாழ்வு மற்றும் அவர் வாழ்ந்த காலம் குறித்த நவீன அருங்காட்சியமாக இருக்கிறது. இந்த அருங்காட்சியகத்துக்கு தினமும் பார்வையாளர்கள் திரளாக வருகின்றனர்.

### முடிவுரை

மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான ஒரு சமூக ஒழுங்கை உறுதிசெய்வதற்கு அரசியல் அமைப்புச்சட்டம் உட்பிரிவு 38இல் கூறப்பட்டுள்ளவற்றை நிறைவேற்றுவதற்கு இந்தத்துறையானது கடமைப்பட்டுள்ளது. “சப்கா சாத் சப்கா விகாஸ்” என்பதில் இந்த அரசு முன்வைத்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளுக்கு ஏற்ப துறையின் செயல்பாடுகளானது அமையும். இந்தத்துறையின் இலக்கு மக்களான விளிம்புநிலை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் முழு தகுதிக்கு ஏற்ப அதிகாரம் அளிக்கப்படும் போதுதான் இதன் குறிக்கோள் நிறைவடையும்.

- **நீலம் சாஹினி,** செயலாளர், சமூகநீதி, அதிகாரமளித்தல் அமைச்சகம், இந்திய அரசு.

# மாற்றுத்திறனாளிகளுக்கு சமூக அதிகாரம் அளித்தல்

- டாக்டர். சந்தியா லிமாயி

புறக்கணிப்பு, வாய்ப்பு இழப்பு, பிரித்துவைத்தல், விலக்கிவைத்தல் உள்ளிட்ட அம்சங்களால் நீண்டகாலமாக பாதிக்கப்பட்டு வரும் இந்தியாவின் மிகப்பெரிய சிறுபான்மைக்குழு என்பது மாற்றுத்திறனாளிகள் குழு ஆகும். இந்தியாவில் மாற்றுத்திறனாளிகள் இன்னமும் ஒடுக்கப்படுகின்றனர், ஒதுக்கப் படுகின்றனர். முழுமையான குடியுரிமைக்கான வாய்ப்பும், பங்களிப்பும் அவர்களுக்கு மறுக்கப்படுகிறது.

நியாயமான, தரமான வாழ்க்கை வாழ்வதிலிருந்து அவர்கள் தடுக்கப்படுகிறார்கள். இதற்குக் காரணம் மாற்றுத்திறனாளிகள் மிகவும் தாழ்ந்தவர்கள், எதையும் செய்வதற்குத் திறனற்றவர்கள், குடும்ப வளத்துக்கும், சமூகத்துக்கும் சுமையாக இருப்பவர்கள் என்று காலகாலமாக கூறப்பட்டு வரும் அடிப்படை ஆதாரமற்ற ஒரு சார்பான எண்ணம் தான். 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப் பின்படி இந்தியாவில் மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை 2.6814 கோடி, அதாவது நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 2.21 சதவிகிதம் ஆகும். இந்திய மாற்றுத்திறனாளிகளில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் நகர்தல் குறைபாடு, செவித்திறன் குறைபாடு, பார்வைக்குறைபாடு ஆகியவற்றால் பாதிக்கப் பட்டவர்கள் ஆவர்.

மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வுக்காக பாடுபட்டு வரும் ஆர்வலர்களின் கவனம் இப்போது மாறி வருகிறது. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள், வாய்ப்புகளை அவர்கள் அனைவருக்கும் சமமாக கிடைக்கச் செய்தல், மாற்றுத்திறன் கொண்ட மக்களை சமூகத்துடன் முழுமையாக இணைத்தல் ஆகியவற்றில் தான் அவர்கள் அண்மைக் காலங்களில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். மாற்றுத்திறனாளிகள் எனப்படுபவர்கள் மற்ற மனிதர்களைப் போலவே பொருளாதாரம், உணர்ச்சிகள், உடல் சார்ந்த, அறிவுசார்ந்த, தெய்வீக, சமூக மற்றும் பொருளாதாரத் தேவைகளைக் கொண்டவர்கள் தான் என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிக்கும் விஷயத்தில் நாம் நீண்ட தூரம் பயணம் செய்துள்ள போதிலும், மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் அவர்கள் அனைவரையும் உள்ளடக்கிய, தடையற்ற, உரிமை சார்ந்த சமூகத்தை அமைத்துத் தருவதற்கு நாம் இன்னும் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டும்.

பல்வேறு சமூகக் கலாச்சார சூழல்கள், அரசியல் சூழல்கள் போன்றவற்றில் சுயவலிமை, கட்டுப்பாடு, உரிமைகளுக்காகப் போராடும் சக்தி, சுதந்திரம், முடிவெடுக்கும் திறன் என மாறுபட்ட பொருள்கள் அதிகாரமளித்தல் எனும் வார்த்தைக்கு உண்டு. தனிநபர் நிலையிலும், கூட்டு நிலையிலும் அதிகாரமளித்தல் என்பது மிகவும் பொருத்தமானதாகும். இந்த அதிகாரமளித்தல் என்பது ஒருவரின் அதிகாரத்தை அதிகரிக்கச் செய்தல், வளங்களின் மீது உரிமை பெறுதல், வாழ்க்கையில் மற்றங்களை ஏற்படுத்தும் வகையிலான முடிவுகளை எடுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடையது. சமூக அதிகாரமளித்தல் எனப்படுவது சமூகப்பணி மற்றும் சமுதாய மேம்பாட்டுக் கொள்கைகளில் இருந்து உருவான மிகப்பெரிய தத்துவம் ஆகும். சமூகப்பணியில் அதிகாரமளித்தல் என்பது வளம் சார்ந்த தலையீட்டின் மூலமான எதார்த்தமான அணுகுமுறையாகும்.


## மாற்றுத்திறனாளிகளுக்கு சமூக அங்கீகாரம் அளிப்பதற்கான அரசின் முயற்சிகள்

மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் அவர்களின் நலனுக்கான கொள்கைகள், அர்த்தமுள்ள நடவடிக்கைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்காக மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தில் இருந்து மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் என்ற துறை

தனியாக பிரித்து அமைக்கப்பட்டது. இந்தத் துறையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான கருவிகளை வாங்குவதற்கான உதவித்திட்டம் (Assistance to Disabled Persons for Purchase / Fitting of Aids and Appliances - ADIP Scheme), மாற்றுத்திறனாளிகள் சமவாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்கேற்புச்சட்டம் செயல்படுத்தப்பட்டதால் உருவான திட்டங்கள் (Schemes arising out of the Implementation of the Persons with Disabilities (Equal Opportunities, Protection of Rights and Full Participation) Act, 1995), தீன்தயாள் உபாத்யாயா மறுவாழ்வுத்திட்டம் மற்றும் பிற திட்டங்கள் உட்பட பல்வேறு அம்சங்களில் மறுவாழ்வு அளிப்பது தான்.

**1. மாற்றுத்திறனாளிகள் அவர்களுக்குத் தேவையான கருவிகளை வாங்குவதற்கான உதவித் திட்டம்:**

இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் (2014-17) நாடு முழுவதும் 5265 முகாம்கள் நடத்தப்பட்டு அவற்றின் மூலம் 7.03 இலட்சம் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக ரூ.430.98 அளவுக்கு மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவில் முதன்முறையாக கருவிகளை வாங்குவதற்கான உதவித்திட்டத்தின் கீழ் காது கேட்கும் கருவிகள் பொருத்தும் திட்டம் கடந்த 2014ஆம் ஆண்டு உலக மாற்றுத்திறனாளிகள் நாளில் தொடங்கப்பட்டது. இந்தத்திட்டத்தில் நாடு முழுவதும் 172 மருத்துவமனைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த காலத்தில் மொத்தம் 794 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. அறுவை சிகிச்சைக்குப் பிறகும் அவர்களுக்கான கவனிப்பும், மறுவாழ்வுச் சேவைகளும் வழங்கப்படுகின்றன. கருவிகளை வாங்குவதற்கான உதவித்திட்டத்தின் கீழ் கடுமையான கால் ஊனம் உள்ளவர்களுக்கு ரூ.37,000 மதிப்புள்ள மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வாகனங்கள் ரூ.25,000 என்ற மானிய விலையில் வழங்கப்படுகின்றன (இதில் மீதமுள்ள ரூ.12,000 எம்.பிக்கள்/எம்.எல்.ஏக்கள் தொகுதி மேம்பாட்டு நிதி அல்லது மாநில அரசின் நிதி உதவி மூலம் வழங்கப்படும்). இந்த வகையில் கடந்த மூன்று ஆண்டுகளில் 3639 பயனாளிகளுக்கு ரூ.9.10 கோடியில் மூன்று சக்கர மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறாக வழங்கப்பட்ட கருவிகள்/ உபகரணங்கள் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு தன்னிச்சையாக செயல்படும் திறனும், மற்றவர்களின் உதவி இல்லாமல் நடமாடும் சக்தியும் கிடைத்துள்ளது. இதன்மூலம் அவர்களின் சமூகப்பங்கேற்பு மற்றும் அவர்களையும் உள்ளடக்கிய சமூக வாழ்க்கைக்கு வகை செய்யப்படுகிறது.



**மின்னல் வேகத்தில் தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டங்கள்:**

தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற கருவிகள் மற்றும் உபகரணங்களை குறைந்தவிலையில் வழங்குதல், அவர்களின் வேலைவாய்ப்புகளை அதிகரித்தல், சமுதாயத்துடன் இணைந்து செயல்படச்செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக இந்தத் திட்டம் 1990-91 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு பயனுள்ள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு,

மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்களைத் தயாரிப்பதற்காக அத்திட்டங்களுக்கு நிதிஉதவி வழங்கப்படுகிறது. இந்தியத் தொழிட்நுட்ப நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி முகமைகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலமாக இந்தத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டங்களுக்கு முழுமையான



நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி நிதியுதவி பெறக்கூடிய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தித் திட்டங்களை தேர்வு செய்வதற்காகவும், எலும்பியல் குறைபாடு, பார்வைக்குறைபாடு, பேச்சுக்குறைபாடு கேட்டல் குறைபாடுகள் மற்றும் மனநலம் சார்ந்த பிரச்சினைகள் ஆகிய குறைபாடுகள் தொடர்பான ஆராய்ச்சிகளின் பல்வேறு நிலைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்வதற்காகவும் நான்கு தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாற்றுத்திறன் குறித்தும் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்களால் பரிந்துரைக்கப்படும் அனைத்துத் திட்டங்களும் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் செயலாளர் தலைமையிலான உயர்நிலைக்குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்படும்.

**2. மாற்றுத்திறனாளிகளுக்கு இடைநிலையில் உள்ளடக்கிய கல்வி:**

14 அல்லது அதற்கும் மேற்பட்ட வயதில் உள்ள மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் 9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையிலான தங்களின் இடைநிலைக்கல்வியை அரசுப்பள்ளிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்க இந்தத்திட்டம் உதவுகிறது. மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள், ஆரம்பக் கல்வியிலிருந்து இடைநிலைக் கல்விக்குச் செல்லும் குழந்தைகளை அடையாளம் காணுதல், அவர்களின் குறைகளை சமாளிப்பதற்கான கருவிகள் மற்றும் உபகரணங்களை வழங்குதல், படிப்புக்குத் தேவையான பொருள்களை வழங்குதல், போக்குவரத்து வசதிகள், விடுதி வசதிகள், கல்வி உதவித்தொகை, புத்தகங்கள், கல்விக்கு உதவுவதற்கான தொழில்நுட்பங்கள், எழுதவும், படிக்கவும் உதவிக்கு ஆட்களை வழங்குதல் ஆகியவற்றுக்கு இந்தத்திட்டம் உதவி வழங்குகிறது. மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் பட்ட மேற்படிப்பை நிறைவு செய்ய பல்வேறு உதவித்தொகைகளைப் பெறுகின்றனர். இத்தகைய உள்ளடக்கிய கல்வி தான் மாற்றுத்திறனாளிகள் மற்ற சாதாரண மக்களுடன் சேர்ந்து பங்கேற்க வகை செய்வதுடன், அவர்களையும் உள்ளடக்கிக் கொள்வதற்கு வழி வகுக்கிறது.

**3. மாற்றுத்திறனாளிகள் அணுகக்கூடிய இந்தியா:**

மாற்றுத்திறனாளிகள் எந்த இடத்திற்கும் சிரமமின்றி செல்வதற்கு ஏற்ற வசதிகள், போக்குவரத்து, தகவல் மற்றும் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பம் ஆகியவை நிறைந்த சூழல் அமைப்பை உருவாக்குவதற்காக மாற்றுத்திறனாளிகள் அணுகக்கூடிய இந்தியா என்ற இயக்கத்தை கடந்த 3.12.2015 அன்று பிரதமர் தொடங்கி வைத்தார். மாற்றுத்திறன் என்பது

தனிமனிதனின் குறைபாடுகள் அல்லது இயலாமைகள் சார்ந்தவை அல்ல; மாறாக ஒரு சமுதாயம் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்தது என்ற சமூக மாதிரி தத்துவத்தின் அடிப்படையில் தான் இந்த இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த விஷயம் தொடர்பாக கட்டுமான நிறுவனங்கள், மாற்றுத்திறனாளிகள் நலனுக்காகப் போராடும் சமூக ஆர்வலர்கள் உட்பட இந்த விஷயத்தில் சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பயிலரங்குகளை நடத்துவதற்காக வல்லுநர்கள் குழு தீவிரமாக பணியாற்றிவருகிறது. இதற்காக தனி இணையதளம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. கட்டடங்களில் ஏறுவதிலும், உள்நுழைவதிலும் பிரச்சினைகள் இருந்தால் அதுகுறித்த படத்தையும், கருத்துகளையும் இந்த இணையதளத்தில் பதிவேற்றம் செய்யமுடியும்.

### 4. மாற்றுத்திறனாளிகள் சமவாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்கேற்புச் சட்டம் செயல்படுத்தப்பட்டதால் உருவான திட்டங்கள்:

இந்த மிகப்பெரியத் திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டுக்காக நிதி உதவி வழங்குதல், தடையற்ற சுதந்திரமான சூழலை உருவாக்குதல், மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக களத்தில் சில நிறுவனங்களை



நடத்துதல் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சமவாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்கேற்புச் சட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான மற்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணமாக மாற்றுத்திறனாளிகள் சட்டத்தின் 46ஆவது பிரிவின்படி முக்கியமான அரசு அலுவலகங்களில் மாற்றுத்திறனாளிகள் சுதந்திரமாக நடமாடுவதற்குரிய சூழலை ஏற்படுத்திக்கொடுக்க இந்தத்திட்டம் வகை செய்கிறது. சுதந்திரமாக நடமாடுவதற்குரிய சூழல்கள் என்பதில் சாய்வுப்பாதை, பிடிமானக் கம்பிகள், மின்தூக்கிகள், சக்கர நாற்காலிகள், சென்று வரும் வசதி கொண்ட கழிப்பறைகள், பிரெய்லி வழிகாட்டிப் பலகைகள், ஒலிவடிவ அறிவிப்புகள், தொட்டுணரக்கூடிய தரைகள் ஆகியவை அடங்கும்.

### 5. தீனதயாள் உபாத்யாயா மறுவாழ்வுத் திட்டங்கள்:

மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு சார்ந்த திட்டங்களுக்காக தொண்டு நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் மூலம் நிதிஉதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் உள்ள 18 வகையான துணைத் திட்டங்களின் மூலம் மாற்றுத்திறனாளிகள் உடல்ரீதியாகவும், உணர்திறன் ரீதியாகவும், அறிவுசார்ந்தும், உளவியல் மற்றும்/ அல்லது சமூக செயல்பாடுகள் சார்ந்த விஷயங்களில் சாதாரண மனிதர்களைப் போன்று இயல்பான நிலையை அடையச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### 6. தகவல், தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்பம்:

ஒரு நகரத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு சாதகமாக உள்ள பொதுப்பயன்பாட்டு இடங்கள் குறித்த தகவல்களை வழங்குவதற்காக ஒரு கைபேசி செயலி விரைவில் தொடங்கப்படவுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு பல புதிய வாய்ப்புகளையும் கைபேசித் தொடர்பு வழங்குகிறது; நமது பேச்சைப் புரிந்துகொண்டு செயல்படுவது போன்ற பல சேவைகள் இப்போது உருவாக்கப்பட்டுள்ளன. ஏடிஎம் மையங்கள், வங்கிகள், வணிகவளாகங்கள், கழிப்பறைகள்

ஆகியவை இருக்கும் இடங்கள் குறித்தும், அவை எந்த அளவுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்றவை என்பது குறித்தும் அந்த செயலி தெரிவிக்கும்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்வையற்றவர்களுக்கு மேலும் பயனுள்ள வகையில் அமைவதை உறுதி செய்வதற்காக புதிய செட்டாப் பாக்ஸ்களை அறிமுகம் செய்ய அரசு திட்டமிட்டு வருகிறது. இப்போது சைகை மொழியுடன் கூடிய செய்தி அறிக்கை ஒரு நாளுக்கு ஒருமுறை மட்டுமே ஒலிபரப்பப்படுகிறது. ஆண்டுக்கு 200 பேர் வீதம் அடுத்த 5 ஆண்டுகளுக்கு 1000 பேருக்கு சைகை மொழி பயிற்சி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற வகையில் மாற்றும் நோக்குடன் முதல்கட்டமாக தூர்தர்ஷனில் 25 சதவிகிதத்திற்கும் கூடுதலான நிகழ்ச்சிகள் சைகை மொழியில் வழங்கப்படவுள்ளன.

அரசு இணையதளங்களில் உள்ள உள்ளடக்கங்கள் அனைத்தும், பார்வைக்குறைபாடு உள்ளவர்களுக்கு உதவும் வகையில் ஸ்கிரீன் ரீடர் சேவை மூலம் எழுத்து வடிவிலிருந்து பேச்சு வடிவில் மாற்றப்படவுள்ளன.

**7. விழிப்புணர்வு உருவாக்கம் மற்றும் விளம்பரத் திட்டம்:**

விழிப்புணர்வு உருவாக்கம் மற்றும் விளம்பரத் திட்டம் 2014ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து மின்னணு ஊடகங்கள், அச்சு ஊடகங்கள், திரைப்படங்கள், மல்டிமீடியா ஊடகங்கள் ஆகியவற்றின் மூலமாக விளம்பரம் செய்வது தான் இந்தத்திட்டத்தின் நோக்கமாகும். மாற்றுத்திறனாளிகளின் சமூக உள்ளடக்கத்துக்கான சூழலை உருவாக்குதல், மாற்றுத்திறனாளிகளின் சட்டப்பூர்வ உரிமைகள் குறித்த தகவல்களைப் பரப்புதல், மாற்றுத்திறன் கொண்ட பணியாளர்களின் சிறப்புத்தேவைகள் குறித்து முதலாளிகளுக்கும், மற்றவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், அழைப்பு மையச் சேவை வழங்குதல் ஆகியவையும் இந்தத் திட்டத்தின் நோக்கம் ஆகும்.

**நிறைவுரை:**

மாற்றுத்திறனாளிகளுக்கு தரமான வாழ்க்கையை அமைத்துத் தர சமூக அதிகாரமளித்தல் தவிர்க்க முடியாதது ஆகும். இது தொடர் நடைமுறை, முடிவு ஆகிய இரண்டாக அமையும். சமூக அதிகாரமளித்தல் எனப்படுவது கீழ்க்கண்ட நான்கு நிலைகளில் வழங்கப்படுகிறது. 1. தனிநபர் நிலை: ஒருவர் தம்மை மதிப்பீடு செய்து வாழ்க்கையில் பங்கேற்க தீவிரமாக விரும்பும் நிலையே தனிநபர் நிலையாகும், 2. குடும்ப நிலை: ஒரு குடும்பத்தினர் தங்கள் குடும்பத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு சமூக மறுவாழ்வு வழங்க ஆதரவும், வழிகாட்டுதலும் கோருவது குடும்ப நிலையாகும், 3. சமூக நிலை: ஒரு மனிதர் தமது தனிநபர் சூழல் மற்றும் உள்ளடக்கிய சூழலுடன் இணைந்து வாழ்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதற்கு ஏற்ற சமூக உள்ளடக்கத்துக்கு வழிவகுக்கும் அரசு கொள்கைகளுடன் சமூக ஆதரவும் வழங்கி, அதன் பயனாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவது தான் சமூக நிலை ஆகும், 4. சமூக கொள்கைகள் நிலை: சமூக சமத்துவம் மற்றும் மாற்றுத்திறன் கொண்ட அனைவருக்கும் உள்ளடக்கத்தை ஊக்குவிக்கக் கூடிய உள்ளூர் மற்றும் தேசிய அளவிலான செயல்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்துவது தான் சமூக கொள்கைகள் நிலையாகும். உள்ளடக்கிய கல்வி மற்றும் சமூகப்பொருளாதார ஒருங்கிணைப்பு போன்ற மற்ற நடைமுறைகளின் மூலமாகவும் சமூக அதிகாரமளிக்க முடியும் என்றாலும் கூட, சமூக அதிகாரம் மற்றும் உள்ளடக்கத்தை ஏற்படுத்துவது என்பது அதற்காகவே உள்ள கருவிகள், வழிமுறைகள் மற்றும் அணுகுமுறைகளைப் பயன்படுத்தக்கூடிய தனிவகையான விஷயம் ஆகும். இவ்வாறாக, மாற்றுத்திறன் கொண்ட மக்களை சமூக அதிகாரத்தைப் பெறும்படி ஊக்குவிப்பதற்கு சமூகக் கொள்கைகளும், வசதிகளும் சிறந்த கருவிகளாகத் திகழ்கின்றன.

- **சந்தியா லிமாயி**, கூடுதல் பேராசிரியர், மாற்றுத் திறனாளிகள் மையம், டாட்டா சமூக அறிவியல் கழகம், மும்பை.

# விளிம்பு நிலை மக்களிடம் தொழில்முனைவை வளர்த்தெடுப்பதற்கான உத்திகள்

- சுனில் சுக்லா

**அறிமுகம்**

தனது திட்டங்களிலும், செயல்களிலும் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் அதிகாரம் அளிக்கவேண்டியது வளர்ந்து வரும் பொருளாதாரத்திற்கு அவசியமானதாகும். கடந்த 70 ஆண்டுகளில், சமூகத்தின் ஒவ்வொரு அடுக்கிலும் திறம் மிக்க தலையீடுகளை செய்து அவை பொருளாதார அதிகாரம் பெறுவதற்கான வாய்ப்புகளை இந்தியா ஏற்படுத்தியிருக்கிறது. இருந்தபோதிலும், சமூகப் பொருளாதார ஏணியில் ஏறிவருவதற்கு அவசியமாகத் தேவைப்படக்கூடியசமூக மூலதனம் இல்லாத, பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய சமூகப்பிரிவினரை உயர்த்துவதற்கான முயற்சிகளுக்கு இன்னமும் இடம் இருக்கவே செய்கிறது. உடல் குறைபாடு உடையவர்களும், பெண்களும், சிறுபான்மை சமூகத்தினரும் சமூகக் களங்கத்தின் காரணமாக பல சமயங்களில் ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். நம்முடைய மாற்றுத்திறனாளிகளும், உடல் குறைபாடு உடையவர்களும் சில சமயங்களில் மிக மோசமான வாழ்க்கைச் சூழலில் வாழ நேரிடுகிறது. பல்வேறுபட்ட சமூக குழுக்களுக்கிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. பல ஆண்டு கால தாராளமயமாக்கல், மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் ஆகியவற்றிற்குப் பிறகும் கூட வளங்களை அணுகுவதிலும், வாய்ப்புகளைப் பெறுவதிலும் அவர்களையும் உள்ளடக்கிகொண்டு வளர்வதிலும் எட்டப்படாத இலக்குகள் அதிகம் உள்ளன.

**சாதகமான சமூக ஞானம்:**

நிதி ஆயோக் நடத்திய பிரதம் என்ற ஒரு ஆய்வில் கலந்துகொண்டு பதில் அளித்தவர்களில் நகர்ப்புறங்களில் இருப்பவர்களைக்காட்டிலும் சிறு நகரங்களிலும், ஊரகப்பகுதிகளிலும் இருப்பவர்களில் சுமார் 70% பேர் சுயதொழில் முனைவோராக வருவதற்கு அதிகமாக விருப்பம் கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கிறது (தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், 2016). கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கள் தங்களின் வறுமையையும், வேலைவாய்ப் பின்மையையும் எதிர்கொண்டு மீள்வதற்கு தொழில்முனைவுக்கு முற்படுகின்றனர் என்பதை இந்த ஆய்வு வலியுறுத்துகிறது. இந்தியா தைரியமும், உற்சாகமும் நிறைந்த இளைஞர்களின் தேசம். இந்தியாவில் பெரும்பாலான இளைஞர்கள் வளங்கள் குறைவாக இருக்கும் சூழலில் இருக்கும் விளிம்பு நிலைக் குடும்பங்களில் இருந்து வருபவர்கள். இருப்பினும், இவர்களிடம் தொழில் முனைவு குணம் இயற்கையாகவே உள்ளார்ந்து இருக்கிறது. வெற்றிகரமான தொழில்முனைவோராக இவர்களை உருவாக்கிட முடியும். இந்த சமூகத்தில் மற்றங்களை உண்டாக்க விரும்புகின்றனர். அவர்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் முறையான வழிகாட்டுதலும், சரியான ஆதரவும் தான். உலக அளவில் தொழில்முனைவின் நிலை பற்றி



ஆராய்ந்திருந்திருக்கும் மிகப்பெரிய ஆய்வு (The Globaleneurship Monitor (GEM Report2016-17) தொழில்முனைவு ஆர்வம் 14.9 சதவிகிதமாக அதிகரித்திருக்கிறது என்று தெரிவிக்கிறது. 2015-16இல் தொழில் முனைவு ஆர்வம் 9 சதவிகிதமாக இருந்தது. தொழிலில் நஷ்டம் ஏற்படுமோ என்ற அச்சம் 2015-16இல் இருந்த 44 சதவிகிதத்திலிருந்து 2016-17இல் 37.5 ஆக குறைந்திருக்கிறது என்றும் இந்த ஆய்வு கூறுகிறது. இந்தியாவில் வயது வந்தோரில் 44% பேர் புதிய தொழில்களைத் தொடங்குவதில் நல்ல வாய்ப்புகளைக் காண்கின்றனர். இன்னொரு 44% பேர் தொழில் தொடங்குவதற்கான திறன்கள் தங்களிடம் இருப்பதாக கருதுகின்றனர் என்று ஜெம் அறிக்கை 2016-17 ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. இதைப்போலவே, ஆம்வே இந்தியத் தொழில்முனைவோர் அறிக்கை 2015 ஆய்வில் கலந்துகொண்டவர்களில் 30% பேர் சொந்தத்தொழில் தொடங்குவது பற்றிய் சிந்தனை கொண்டவர்களாக உள்ளனர். என தெரிவிக்கிறது. (இந்த ஆய்வில் 21 மாநிலங்களில் 10768 பேரிடம் கருத்துக்கள் பெறப்பட்டன. இவர்கள் வெவ்வேறு வருவாய், கல்வித்தகுதி உடைவர்கள். ஆண்களும், பெண்களும் இதில் பங்கேற்று இருந்தனர். இந்த இரண்டு ஆராய்ச்சிகளின் முடிவுகளில் இருந்து எதிர்காலத்தில் தொழில்முனைவுக்கு அதிக அளவில் ஆதரவு இருக்கும் என்பதையும், சமூகத்தின் பார்வை குறிபிடத்தக்க அளவில் மாற்றம் கண்டுள்ளது என்றும் நம்மால் அறியமுடிகிறது. தேசத்தில் தொழில்முனைவு வளர்ச்சியைப் பொறுத்தவரை இது ஒரு ஆரோக்கியமான அறிகுறியாகும்.

**சவால்களும், வாய்ப்புகளும்:**

கல்வி அறிவு குறைவாக இருப்பதும், திறன்கள் போதாமையும் விளிம்பு நிலை மக்களுக்கு இருக்கும் பெரிய தடைகளாகும். இதனால் நம்பிக்கை குறைவு ஏற்பட்டுவிடுகிறது. இத்தகைய நிலை குறிப்பாக பெண்கள் மத்தியில் அதிகமாக இருக்கிறது தொழில் முனைவு ஊக்குவிப்பு, திறன் மேம்பாடு, நேரடி பயிற்சி போன்றவை இந்த குறைபாடுகளை சரி செய்ய உதவிடும். கருத்தரங்கம், பயிற்சிப் பட்டறை ஆகியவை இளைக்னர்களிடம் நம்பிக்கையை வளர்க்கும். தொழில்முனைவுப் பயிற்சிகள், வழிகட்டுதல் போன்றவை மூலம்

**தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இளைஞர்கள், பெண்கள், சுய உதவிக்குழுக்கள் ஆகியோருக்கு தொழில் முனைவுப் பயிற்சி**

**அடையாளம் காணப்பட்ட, பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள இலக்குக் குழுக்களுக்கு தொழில் முனைவு பற்றிய விழிப்புணர்வு, நோக்குநிலை பயிற்சி**

**தொழில் முனைவு மேம்பாட்டு முன் முயற்சிகள் மூலம் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள இலக்குக் குழுக்களுக்கு சமூகப் பொருளாதார முன்னேற்றம்**

**பல்வேறு பங்குதாரர்களும் இணைந்து ஒன்றுபடுதலை உருவாக்கல்: அமைப்பு முறை சார்ந்த நிறுவனத் தொடர்பு**

**பயிற்சிகளை மதிப்பிடுவதற்கும், மேம்படுத்துவதற்கும்**

**ஆராய்ச்சி, பதிவுகள் மூலம் மண்டலப் பட்டியல்**

விளிம்பு நிலை மக்களை சுயதொழில்களை நோக்கி ஈர்க்கமுடியும்.

**பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள இலக்குக்குழுக்களுக்கு தொழில்முனைவு மேம்பாட்டு முன்முயற்சிகள் மூலம் அதிகாரமளிப்பதற்கு நான்கு வழி செயல்திட்டம்:**

நிதிப் பற்றாக்குறை, தொழிலில் ஆபத்து நேரிடக்கூடும் என்ற அச்சம், செயல்படும் அளவிற்கான கல்வியறிவு இன்மை போன்றவை தொழில் தொடங்கவிடாமல் இவர்களைத் தடுத்துவிடுகின்றன. மேலும், இந்தத்துறையில் செய்யப்பட்டுள்ள ஆய்வுகள் மூலப்பொருள்களைப் பெறுவதில் உள்ள சிக்கல்கள், போதுமான மூலதனம் இல்லாமை, விற்பனை சந்தைக் கட்டமைப்புக் குறைபாடு ஆகியவை கிராமப்புற தொழில்முனைவோருக்கிருக்கும் முக்கியமான தடைகள் என்று தெரிவிக்கின்றன. தொழில் தொடங்குவதற்கு என்னென்ன வாய்ப்புகள் உள்ளன என்பதும் இவர்களுக்குத் தெரிவதில்லை. இதனால் அவர்கள் கூலித் தொழிலாளிகளாக சென்று விடுகின்றனர். ஊரகப்பகுதிகளில் தொழில் முனைவிற்கு சவாலாக இருந்துவரும் இவற்றை மனதில் கொண்டு ஊக்கப்படுத்தும் முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்.

1990க்குப் பிந்தைய பொருளாதார சீர்திருத்தங்கள் இந்தியாவில் தலித் தொழில்முனைவோரில் இங்கும் அங்குமாக உருவாயினர். ஆனால், தனியார் தொழில் அமைப்புகளின் சொந்தக்காரர்களாக அவர்கள் அதிகமாக இல்லை. இவர்களது ஒரு சில தொழில் அமைப்புகளின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு



வேலைவாய்ப்பு அளிப்பதும் குறைவாகவே இருக்கிறது. பிற வகுப்பினர் தொழில் தடைகளை மீறி வருவது போல இவர்களால் வரமுடிவதில்லை. விளிம்பு நிலை சமூகத்தில் உள்ள இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் பாரட்டத்தகுந்த பலவகையான முன் முயற்சிகளை தலித் இந்தியன் வர்த்தக சபை (Dalit Indian Chamber of Commerce and Industry - DICCI) எடுத்துள்ளது..

அ. தொழில் தொடங்கும் திட்டம்: தொழில் தொடங்கு இந்தியா திட்டத்திற்கு அரசு ரூ.10ஆயிரம் கோடி தொகுப்பு நிதியை அளித்திருக்கிறது. அடுத்த நான்கு ஆண்டுகளில் புதிதாகத் தொடங்கப்பட இருக்கும் தொழில்களுக்கு இதிலிருந்து நிதி உதவி கிடைக்கும்.புதிதாக உருவாகும் தொழில்களுக்கு இந்த நிதி உயிரூட்டும். இந்தப் பணம் இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கியின் (Small Industries Development Bank of India - SIDBI) மூலம் பகிர்ந்தளிக்கப்படுகிறது.இதுவரை, ரூ.600கோடி அளிக்கப்படிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.605.7 கோடி SIDBI மூலமும், ரூ.90.62 கோடி 17 மாற்று நிதியங்களின் மூலமும் (Alternative Investment funds - AIFs) அளிக்கப்பட்டுள்ளது. 75 புதிய தொழில்களுக்கு இத்தகைய உதவிகள் கிடைத்துள்ளன. தொழில் தொடங்கு இந்தியா திட்டம் இன்னும் வேகம் எடுப்பதற்குக் காத்திருக்கிறது. இந்தத்திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கும், தொழில்முனைவோருக்கும் அதிகாரம் அளிப்பதில் தாக்கம் அதிகரிக்கும். இந்தத்திட்டத்தில் இரண்டு ஆண்டுகளில் மிகக் குறைவான தொகையே செலவிடப்பட்டுள்ளன. தொழில் தொடங்கு இந்தியா இணையதள நுழைவாயிலில் 15 ஆயிரம் பேர் பதிவு செய்துகொண்டுள்ளனர். 75643 சந்தேக வினாக்களுக்கு இதுவரை விளக்கம் தரப்பட்டுள்ளது. கற்றறிந்து தங்களைத் தாங்களே மேம்படுத்திக்கொள்ளும் பாடதின் மூலம் இதுவரை 189000 தனி நபர்கள் பயனடைந்துள்ளனர். இந்த முன்முயற்சி போற்றத்தக்கதுதான் என்றாலும் நம்முடையது போன்ற தேசத்தில் இதன் தாக்கம் மிகவும் குறைவாகவே உள்ளது.

ஆ. எழுந்து நில் இந்தியா முன்முயற்சி: இந்த திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களும், பெண்களும் 2.5 இலட்சம் தொழில்களைப் புதிதாகத் தொடங்குவதற்கு உதவும் விதத்தில் செயல்படுமாறு ஏறத்தாழ 1.25 இலட்சம் வங்கிக் கிளைகள் அறிவுறுத்தபட்டுள்ளன. ஒரு தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினத்தவருக்கும், ஒரு பெண்ணுக்குமாவது ஒவ்வொரு வங்கியும் 10 இலட்சத்திலிருந்து 100 இலட்சம் வரை கடன் தந்து புதிதாக தொழில் தொடங்க உதவிட வேண்டும் என்பது ஒரு யோசனையாகும். 2.5 இலட்ச்ம் பேர் இதன் மூலம் பயனடைவர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதிருக்கும் நிதி கட்டமைப்பிற்கும், கடன் உத்திரவாதக் கட்டமைப்பிற்கும் இது தூண்டுதலை அளிக்கும். பொருளாதார அதிகாரமும், வேலைவாய்ப்பும் விளிம்பு நிலையில் உள்ளவர்களுக்குக் கிடைத்திட உதவும். இதுவரை இந்தத்திட்டத்தின் கீழ் 60795 விண்ணப்பங்கள் பெறப்பட்டு ரூ.13217கோடி நிதி உதவி தரப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் 103 வங்கிகள் அவற்றின் 133236 கிளைகளின் மூலம் இந்த திட்டத்திற்காக மும்முரமாக செயல்பட்டுவருகின்றன. 10084 இணையவழி விண்ணப்பங்கள் பெறப்பட்டு 2908 கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இ. முத்ரா திட்டம் (பிரதம மந்திரியின் முத்ரா யோஜனா PMMY)

நுண் அலகுகள் மேம்பாடு மற்றும் மறுநிதியம் (Micro Units Development and Re-finance Agency -MUDRA) எழுந்து நில் இந்தியா திட்டத்தின் நோக்கங்களைச் செயல்படுத்து வதற்கான நிதி அமைப்பாகும். நுண் அலகுகளுக்கு சிறுகடன்கள் அளித்துவரும் நிதி நிறுவனங்களுக்கு நிதி ஆதரவை முத்ரா அளித்து வருகிறது. கடனை திருப்பிகட்ட இயலாமல் போகும் நுண் அலகுகளுக்கென கடன் உத்திரவாத நிதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நுண் நிறுவனங்களின் வளர்ச்சி நிலையைப் பொறுத்தும், அவற்றின் நிதித்தேவைகளைப் பொறுத்தும் சிஷு, கிஷோர், தருண் என்று இவை வகைப்படுத்தப்பட்டுள்ளன. பிரதம மந்திரியின் முத்ரா யோஜனா திட்டத்தின் கீழ் 12 கோடி பயனாளிகளுக்கு, ரூ.6 டிரில்லியன் தரப்பட்டுள்ளது. இந்த 12 கோடி பயனாளிகளில் 28சதவீதம் பேர் (அதாவது 3.25 கோடி பேர்) முதல் முறையாக தொழில் தொடங்குபவர்கள். இவர்களில் 9 கோடி பேர் பெண்கள். 55% பேர் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினத்தவரும், பெண்களும் ஆவர். இந்தத்திட்டம் சமூகத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு பயனளிக்க மூன்று ஆண்டுகளாக முயற்சிகளை மேற்கொண்டது. ஆயினும் இன்னமும் ஏராளமாக செய்யவேண்டியுள்ளது. பின்தொடரும் செயல்முறை, தொழில் முனைவு அறிவுரை ஆகியவை முத்ரா ஆதரவில் இயங்கும் தொழில்கள் வளரவும், வேலை வாய்ப்பைப் பெருக்கவும் துணை செய்யும்.

கிராமங்களில் தொழில் தொடங்குவதற்கான திட்டம் (Start-up Villageeneurship Programme - SVEP) 2014-15 பட்ஜெட் கூட்டத்தொடரின்போது அறிவிக்கப்பட்டது. மாநிலங்களின் நிதி உதவியோடு ஊரக இளைஞர்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளை வழங்குவது இதன் நோக்கம். நுண் கடன் திட்டங்களின் மூலமும், அறிவுரையும் ஆதரவும் அளித்து ஊரகப் பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பதற்கும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் SVEP திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் ஒரு துணைத்திட்டமாக SVEP திட்டம் இருக்கும். இந்தத் திட்டம் எற்கனவே 24 மாநிலங்களின் 125 வட்டாரங்களில், 1.82 இலட்சம் கிராமப்புற தொழில்களை உருவாக்கவும், வலுப்படுத்தவும் தொடங்கியுள்ளது. இதன் மூலம் 3.78 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும்.

**முடிவுரை:**

நம் நாட்டில் சமூகத்தில் பின் தங்கியுள்ள பிரிவினரிடமும், விளிம்பு நிலையில் உள்ள மக்களிடமும் தொழில்முனைவுத் திறனை உருவாக்கி மேம்படுத்துவது சமூக, பொருளாதாரத் தளங்களில் பல பரிமாணங்களிலான முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். பாகுபாடு காட்டுதல் எனும் சமூக நோயைப் போக்குவதற்கான சக்திவாய்ந்த கருவியாக இது இருக்கும்.

- **டாக்டர்.சுனில் சுக்லா,** இந்திய தொழில்முனைவு வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர்.

# உள்ளாட்சி அமைப்புகளில் விளிம்புநிலை சமுதாயத்தினருக்கு அதிகாரம் அளித்தல்

- டாக்டர் டி.பிரம்மானந்தம்
- டாக்டர் கே.வி.ஸ்ரீநிவாஸ்

அதிகாரம் அளித்தல் என்பது விவாதத்துக்கு உரிய ஒரு கருத்தாக்கமாக உள்ளது. இந்தக் கருத்தாக்கமானது பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு வகையான சமூக, உளவியல் மாற்றங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனுடைய பரந்துபட்ட உள்ளார்ந்த அர்த்தத்தின் அடிப்படையில் பார்த்தோமானால், இந்தக் கருத்தாக்கத்தை ''மக்களுடைய திறமைகள் மற்றும் வாய்ப்புகளை விரிவாக்குதல்; பசி, ஆசை மற்றும் இழப்பு ஆகியவற்றில் இருந்து அவர்கள் விடுபடுவதற்குத் தேவையான வாய்ப்புகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தும் திறமை; தங்கள் வாழ்வைப் பாதிக்கக்கூடிய முடிவுகளை எடுக்கும் செயலில் பங்கேற்க அல்லது அதை ஆமோதிக்கக்கூடிய வாய்ப்புகளைத் தருதல்'' என வரையறை செய்யலாம். மனித உரிமைகள், பொருளாதார நிச்சயமின்மை நிலை மற்றும் அனுகூலம் இல்லாத குழுக்கள் போன்ற பல சூழ்நிலைகளில் அதிகாரமளித்தல் என்ற கருத்தாக்கம் பயன்படுத்தப்படுகிறது. விளிம்பு நிலை மக்களின் திறன் கட்டமைப்பு மற்றும் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்ளுதல் ஆகிய சூழல்களிலும் அதிகாரமளித்தல் என்ற கருத்தாக்கம் பயன்படுத்தப் படுகிறது. அதிகாரம் அளித்தல் என்பதில் இரண்டு முக்கியமான கூறுகள் உள்ளன. அவை:

1. மக்களுடைய திறமைகள், பேச்சு வார்த்தை நடத்துவதற்கான ஆற்றல் மற்றும் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவது.
2. மக்கள் தங்களுடைய வாழ்க்கை குறித்த முடிவுகளை எடுக்கக்கூடிய அதிகாரம் அல்லது அத்தகைய முடிவுகளை எடுக்கக்கூடிய செயல்முறையில் பங்கேற்றல்.

கோட்பாட்டு ரீதியில் சொல்வதென்றால் அதிகாரம் அளித்தல் என்பது ஒரு செயல்முறை ஆகும். விழிப்புணர்வு ஏற்படுத்துதல், நடவடிக்கை எடுக்கும் ஆற்றலையும், கட்டுப்படுத்தும் ஆற்றலையும் அதிக அளவில் பிரயோகிக்கும் வகையில் செயலாற்றுதல் ஆகியவற்றின் மூலமாக மக்கள் தங்கள் வாழ்வின் மீதான கட்டுப்பாட்டு அதிகாரத்தைப் பெறும் செயல்முறையே அதிகாரம் அளித்தல் என்பதாகும்.

முடிவு எடுக்கக்கூடிய நிறுவன அமைப்புகளில் அரசியல்ரீதியாக அனைவரையும் உள்ளடக்குதல் என்பது அதிகாரம் அளித்தலுக்கு அவசியமாகும். மேலும் தற்போது உள்ள அதிகார உறவுகளில் மாற்றத்தையும் அது கோருகிறது. ஏனெனில் சமூகத்தின் சில குறிப்பிட்ட பிரிவினர் தங்களது வரலாற்று ரீதியான சமூக கலாச்சார நிலைமையின் காரணமாக முடிவு எடுக்கும் செயல்களில் ஈடுபட முடியாமல் இருக்கிறார்கள். எனவே ஜனநாயக அரசியல் அமைப்பில், அரசாட்சி செய்யும் நிறுவன அமைப்புகளில் முறையான மற்றும் திறனுடைய பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும் என்பது அதிகாரம் அளித்தல் என்ற செயல்பாட்டுக்கு அவசியமாகிறது. அப்போதுதான் மக்கள் தங்கள் தரப்பின் குரலை ஒலிக்கச் செய்யமுடியும். தங்களது வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய விஷயங்கள் மீது முடிவு எடுக்கும் செயல்முறையில் பங்கேற்கமுடியும். அரசாட்சி செய்யும் நிறுவன அமைப்புகளில் விளிம்புநிலை அல்லது ஒதுக்கப்பட்ட குழுக்கள் அரசியல் பிரதிநிதித்துவம் பெறும்போது அவர்களுக்கு ஆட்டத்தின் விதிகளை மாற்றும் அதிகாரம் கிடைக்கும். சமூகத்தின் முன்னுரிமை பெற்ற மேலாதிக்கப் பிரிவினரோடு அதிகார உறவுகளைப் பகிர்ந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடமுடியும். அரசியலில் அதிகாரம் அளித்தல் என்பது அரசியல் ரீதியாக அனைவரையும் உள்ளடக்குதலாக இருக்கும். அதாவது இதன் அர்த்தம் என்னவென்றால் ஒரு குழுவானது குறிப்பிடத்தக்க பிரதிநிதித்துவம் பெறுதல் மற்றும் அரசியல் ரீதியாக முடிவு எடுத்தலில் செல்வாக்கு செலுத்துதல் என்பதாகும்.

### விளிம்புநிலை சமுதாயப்பிரிவினர்

இந்தியாவின் மக்கள் தொகை 1.3 பில்லியன் ஆகும்.

நாட்டின் சராசரி பொருளாதார வளர்ச்சிவிகிதம் ஆண்டுக்கு 67 சதவிகிதமாக இருந்தாலும்கூட, நாட்டில் உள்ள மக்கள் தொகையில் ஏறத்தாழ கால் பங்கு நபர்கள் இன்னமும் வறுமையில்தான் உள்ளனர். பத்து இந்தியர்களில் ஏழு பேர் இப்பொழுதும் கிராமப்பகுதிகளில்தான் வசிக்கின்றனர். ஒரு ஏழையின் பொருளாதார நிலைமையானது அவரது நல்வாழ்வின் சமூகப்பரிமாணங்களோடும் சமூகத்தில் சமத்துவநிலை, சமூக உரிமைகள் ஆகியவற்றோடும் பின்னிப்பிணைந்துள்ளது. இந்தியாவில் பாதிப்புக்கு ஆளாகும் மற்றும் விளிம்புநிலை குழுக்கள் தனித்து இருப்பதில்லை. மேலும் அக்குழுக்களை எளிதில் அடையாளம் காணவும் முடியாது. சமூகப்பின்னல் என்பது இனரீதியாக வேறுபட்டது, சமூக ரீதியாக பல அடுக்குகளைக் கொண்டது, சேர்க்கையில் பன்முகத்தன்மை கொண்டது ஆகும். குறைவான எழுத்தறிவு விகிதம், பரிதாபகரமான வறுமை, சிக்கலான சமூகஇனச்சூழல் ஆகியவற்றுடன் ஏழைகளும் பாதிப்புக்கு ஆளாகக் கூடியவர்களும் பல தலைமுறைகளாக வரலாற்று ரீதியான ஒடுக்குதலுக்கும் அடக்கு முறைகளுக்கும் ஆட்பட்டு வந்துள்ளனர்.

அரசியல் அமைப்புச் சட்டமானது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் பழங்குடியின மக்களுக்கும் பாதுகாப்பும் முன்னுரிமைகளும் வழங்குகிறது. அவர்கள் சமமாக நடத்தப்படுவதற்கான உரிமையை வழங்குவதோடு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசுத்துறைகளில் இடஒதுக்கீடு என்பதன் மூலம் சாதகமான நடவடிக்கைகளையும் வழங்குகிறது. மேலும் சமூக உறவாடல்களில், பொது இடங்களில் தனிநபரை ஒதுக்குவது அல்லது விலக்குவது போன்ற நடைமுறைகளையும் இந்தச்சட்டம் தடை செய்கிறது. இதனோடு இந்தக்குழுவினர் மீதான தீண்டாமையையும் தடை செய்கிறது. தாக்குதல் குறைவாக இருக்கின்ற பொருளாதார மற்றும் சமூக வாழ்விலும்கூட, விளிம்புநிலை குழுவினர் உள்ளாட்சி அமைப்புகளில் பங்கேற்பது சிரமமான நிலையிலேயே இருக்கிறது. மற்றவர்களுடைய வற்புறுத்தல் மற்றும் கட்டுப்பாடுகளால் இந்தக்குழுவினர் உள்ளாட்சி அமைப்புகளில் எளிதில் பங்கேற்க முடிவது இல்லை. இவர்கள் அரசியல் தளத்தில் பங்கேற்பது என்பதுகூட ஆதிக்கம் செலுத்தும் சமூக வகுப்பினருடன் இவர்களுக்கு இருக்கும் பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளை வைத்தே நிர்ணயம் செய்யப்படுகிறது.

## வரலாற்றுப் பின்னணி

உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்த வேண்டிய பொறுப்பு சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய அரசின் பொறுப்பாக மாறியது. ஜனநாயகத்தை வலுப்படுத்த கிராமங்களும் வலுவடைய வேண்டும். ஏனெனில் இந்தியா கிராமப் பஞ்சாயத்துகளின் நாடாக இருப்பதே காரணம் ஆகும். மகாத்மா காந்தி கிராம சுயராஜ்ஜியம் என்பதில் தீவிரமான நம்பிக்கை கொண்டிருந்தார். அவருடைய கருத்துக்கு ஏற்ப, கிராமங்கள் தன்னிறைவு பெற்றவையாக மாறவேண்டும் என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து அமைப்புகளின் மூலம் கிராமங்கள் ஆளப்படவேண்டும். ஆனால் ஆச்சரியப்படத்தக்க வகையில் இந்த அம்சம் அரசியல் சாசன வரைவில் இடம் பெறவில்லை. காந்திஜியின் வற்புறுத்தலுக்குப் பிறகு இது அரசியல் சாசனத்தில் அரசுக் கொள்கையின்கீழ் அரசு நெறிமுறைகளின் 40ஆம் உட்பிரிவின் கீழ் சேர்க்கப்பட்டது.

தொடக்கத்தில் தலைவர்கள் பொது ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் உருவாக்கத் தவறிவிட்டனர். பஞ்சாயத்துகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவதை ஊக்குவிக்க, நிதிக் குழு 1956ஆம் ஆண்டில் பல்வந்த்ராய் மேத்தா தலைமையில் ஒரு ஆய்வுக்குழுவை நியமித்தது. அடிமட்ட நிலையில் உள்ள ஒரு அமைப்புதான் உள்ளூர் தலைமைக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தமுடியும் என இந்தக் குழுவானது பரிந்துரை செய்தது. மேலும் இந்தக் குழுவானது நாட்டில் மூன்று அடுக்கு உள்ளாட்சி அமைப்பு முறையையும் பரிந்துரை செய்தது.

1960களின் மத்தியில் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் பஞ்சாயத்து ராஜ் சென்றடைந்தது. உள்ளூர் அளவில் தங்களுடைய பிரச்சினைகளைக் கவனிக்கக் கூடிய ஒரு அமைப்பு இருக்கிறது என மக்கள் உணர ஆரம்பித்தனர். இது மக்களிடையே சென்று சேர்ந்த இரண்டு ஆண்டுகளிலேயே இதனை மேலும் வலுப்படுத்தும் முயற்சிகள் தோல்வி அடைந்தன. ஏனெனில், இவற்றுக்கு அரசியல் அமைப்பு சார்ந்த அங்கீகாரமும், தெளிவும் இல்லை என நிபுணர்கள் தெரிவித்தனர். பெரும்பாலான உள்ளாட்சி அமைப்புகள் சுயாட்சி அமைப்புகளாக செயல்படாமல் அரசாங்கத்தின் ஏஜென்ட்டுகளாகவே செயல்பட்டன. மாத்தூர் என்பவர்

சொல்வதற்கு ஏற்ப, ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றக்கூடிய மக்கள் பங்கேற்பு அமைப்புகளாக உள்ளாட்சி அமைப்புகள் பார்க்கப்படவில்லை. மாறாக தேசிய அளவிலான கொள்கைகளை செயல்படுத்துவதற்கு உதவக்கூடிய அமைப்புகளாக மட்டுமே இவை பார்க்கப்பட்டன.

### 73ஆவது அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம்

செப்டம்பர் 1991இல் பஞ் சாயத்து ராஜ் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. பிறகு அது சில திருத்தங்களுடன் 1992இல் 73ஆவது அரசியல் சாசன சட்டத்திருத்தமாக நிறைவேற்றப்பட்டு 24 ஏப்ரல் 1993இல் அமலுக்கு வந்தது. இந்த சட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் இது பஞ் சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு அதாவது உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசியல் சாசன அந்தஸ்தை வழங்கியது என்பதே ஆகும். இதன்படி அனைத்து மாநில அரசுகளும் இந்த சட்டத்தை அமல்படுத்த வேண்டிய கட்டாயம் உருவானது. இந்த அரசியல் சாசனத் திருத்தமானது உள்ளாட்சி அமைப்புகளின் அமைப்பு முறை, கட்டமைப்பு, அதிகாரம் மற்றும் செயல்பாடுகளில் நாடு முழுவதும் ஒரே மாதிரியான ஒத்திசைவைக் கொண்டுவந்தது. கிராமப்புற இந்தியாவின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துதல், சமூகபொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துதல் ஆகியவற்றை செயல்படுத்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் உத்வேகம் அளித்தது. அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதில் சாதாரண குடிமக்களும் பங்கேற்க முடியும் என்பதை உண்மையாக்கும் வகையிலும் ஜனநாயக இந்தியாவில் மிகச் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளாட்சி அமைப்புகளின் உருவாக்கம் இருந்தது.

இந்த சட்டமானது கிராம நிலை, அதற்கு மேற்பட்ட இடைநிலை, மாவட்ட நிலை என்ற மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்பு முறையை வழங்குவதாக இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் கிராமசபை இருக்கவேண்டும் என்று சட்டம் சொல்கிறது. இந்த சட்டத்தின் குறிப்பிடத்தக்க மைல்கல் எதுவென்றால் அனைத்து பஞ் சாயத்துகளிலும் அங்கு வசிக்கும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதாச்சாரத்தில் அவர்களுக்கு பதவிகளில் இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதாகும். மொத்த பதவிகளில் மூன்றில் ஒரு பங்கு பதவிகள் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டாக வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு தலைவர் பொறுப்புகளில் மற்றும் உறுப்பினர் நிலைகளில் அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப ஒதுக்கீடு செய்தது என்பது நம் நாட்டின் சமூக அரசியல் கட்டமைப்பின் புரட்சிகரமான மாறுதலைக் கொண்டு வருவதற்கான வாய்ப்பை உண்டாக்கியுள்ளது. இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையானது நாட்டில் உள்ள 2,39,582 பஞ் சாயத்துகளில் தாழ்த்தப் பட்டோருக்கு 18.51 சதவிகிதமும் பழங்குடியினருக்கு 11.26 சதவிகிதமும் பெண்களுக்கு 36.87 சதவிகிதமும் ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்தது.



### உள்ளாட்சி அமைப்புகளில் விளிம்புநிலை மக்கள் பிரிவினர்

தற்போதைய நிலையில் 17 மாநிலங்கள் உள்ளாட்சி அமைப்பின் அனைத்து அடுக்குகளிலும் 50 சதவிகிதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்து நடைமுறைப்படுத்தி வருகின்றன.

அலோக் என்பவரின் (2013 2014) கூற்றின்படி நாடு முழுவதும் உள்ள 2,770,755 கிராமப் பஞ்சாயத்துகளில் கட்டாய இட ஒதுக்கீட்டில் 15 சதவிகிதம் தாழ்த்தப்பட்டோர், 19.28 சதவிகிதம் பழங்குடியினர் மற்றும் 43 சதவிகிதம் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு ஐந்தாண்டிலும் உள்ளூர் அளவில் 50 இலட்சம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் ஒரு ஜனநாயகப் புரட்சி ஏற்பட்டுள்ளது. இதில் 13 இலட்சம் பிரதிநிதிகள் பெண்கள் ஆவர். 5.5 இலட்சத்திற்கும் அதிகமானோர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆவார்கள். இந்த 5.5 இலட்சம் என்ற எண்ணிக்கைக்குள் தாழ்த்தப்பட் வகுப்புப் பெண்கள் தலைவர்களாகவும் வார்டு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

குறிப்பாக சமூகத்தில் இருந்து அவர்களை தூரத்தில் ஒதுக்கிவைத்தல் என நமது சமுதாயத்தில் நிலவும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மீதான மரபார்ந்த உணர்வுகளைக் குறைப்பதற்கான மிக முக்கியமான திட்டமிடல் அணுகுமுறையாக இது உள்ளது. புதிய தலைமுறை பஞ்சாயத்துகள் செயல்படத் தொடங்கிய போது மனித உரிமைகள் சார்ந்த பல பிரச்சினைகள் கவனத்துக்கு வந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பிரதிநிதிகள் முடிவு எடுக்கும் செயல்களில் ஆக்கப்பூர்வமாக ஈடுபட்டதோடு பஞ்சாயத்து அளவில் ஏழைகள் சார்பான பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் செய்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட இனப்பிரதிநிதிகள் வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்பு சார்ந்த வேலைகளுக்கு கடன் கிடைப்பதற்கு முக்கியத்துவம் அளித்தனர். அதே அளவிலான முக்கியத்துவத்தை அவர்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளுக்கு சாலை வசதிகள், குடிநீர் மற்றும் தெருவிளக்குகள் அமைப்பதில் காட்டினர். தாழ்த்தப்பட்ட இனத்தலைவர்கள் தங்களது சமுதாயத்திற்கு பயன்அளிக்கும் வகையிலான வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்தனர்.

அரசியல் சாசன உட்பிரிவு 243டி என்பது சுழற்சி முறையைக் கட்டாயமாக்கி உள்ளது. அதாவது மூன்றுஅடுக்கு பஞ்சாயத்து ராஜ் அமைப்பில் ஒரு தேர்தலில் இருந்து அடுத்த தேர்தலில் தொகுதிகளுக்கு இடையில் இட ஒதுக்கீடு செய்வதில் சுழற்சி முறை மேற்கொள்ளப்படுகிறது. ஒரே தொகுதியில் இரண்டாம் முறையாக அதே வேட்பாளர்கள் போட்டியிடும் வாய்ப்பை இது வழங்குவது இல்லை. ஆனால் அதே குழுவினர் / சமுதாயத்தினர் இடஒதுக்கீட்டின் கீழ் அருகில் உள்ள தொகுதியில் போட்டியிடுவதற்கு இது வாய்ப்பு அளிக்கிறது. இந்த நடைமுறையானது சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள பிரிவினர்களுக்கான பங்கேற்பு ஜனநாயகத்தை உண்மையில் மாற்றித் தருகிறது.

கர்நாடகம், கேரளா, தமிழ்நாடு, இராஜஸ்தான் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களில் உள்ள கிராமமக்களிடம் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு நிலையானது கிராமசபை செயல்படும் விதத்திலும் அதனுடைய முடிவுகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் கிராமசபையின் முடிவுகளை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்துகின்றனர். துவாரகாநாத் என்பவர் தமிழ்நாடு அரசின் ஆணைகளை உதாரணமாக எடுத்துக்காட்டுகிறார். தமிழக அரசானது ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 26, ஆகஸ்ட் 15, மே 1 மற்றும் அக்டோபர் 2 ஆகிய தேதிகளில் கிராமசபைக் கூட்டத்தைக் கட்டாயமாக நடத்த வேண்டும் என ஆணைகள் பிறப்பித்துள்ளது. மத்தியப்பிரதேச பஞ்சாயத்து ராஜ் சட்டத்தில் உள்ள மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் எதுவெனில் அவர்கள் ஆண்டுதோறும் பதினாறு முறைக்கும் மேல் கிராமசபைக் கூட்டங்களை நடத்தியாக வேண்டும் என்பதாகும். இது அடிமட்ட நிலையில் சுயாட்சிக்கான சிறந்த வழியாக உள்ளது.

பஞ்சாயத்து அமைப்புகளில் பெண்கள் பங்கேற்பதில் உள்ள ஆர்வமூட்டும் விஷயம் என்னவென்றால் அரசியல் அதிகாரம் அவர்களது சமூக அந்தஸ்தை மேம்படுத்தியுள்ளது என்பதாகும். பயன்பாட்டு அடிப்படையில் சமூகத்தின் அனைத்து விஷயங்களிலும் அவர்கள் பங்கேற்க இது உதவியுள்ளது. பஞ்சாயத்து உறுப்பினராக இருப்பது என்பது பெண்களுக்குப் பொதுவாழ்வில் சிறப்பான அந்தஸ்தையும் வழங்கியுள்ளது. பெண்கள் தாங்கள் உறுப்பினர்களாக உள்ள பஞ்சாயத்துப் பகுதிகளில் நடக்கும் சமூக விழாக்கள் அனைத்திலும் பங்கேற்க அழைக்கப்படுகின்றனர் என்ற இந்தக் கருத்தானது உடுப்பி மாவட்டம் குறித்து பத்மநாபா பட் செய்த ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகள் கடந்த இரண்டு பத்தாண்டுகளாகச் செயல்பட்டு வருவதில் கிடைத்த அனுபவமானது நிலைத்த தன்மை

மற்றும் தொடர்ச்சி அடையப்பட்டு வருவதை குறிப்பால் உணர்த்துகிறது. சிவில் சமூக செயல்பாடுகளை மேற்கொள்வதும் இதில் அடங்கும். எனினும், உள்ளாட்சி அமைப்புகளில் பல தலைவர்களும் உறுப்பினர்களும் தங்களது நேரடி அல்லது மறைமுகத் தேர்தல்கள் குறித்து வருத்தப்படுவதில்லை. மாறாக, உள்ளாட்சி நிர்வாகத்தில் அர்த்தமுள்ள பங்கேற்பு இருப்பதில்லை என வருத்தப்படுகின்றனர்.

**விளிம்புநிலை பிரிவினருக்கு எதிரான காரணிகள்**

ஆந்திரப்பிரதேசம், ஹரியானா, இமாச்சலப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், ஒடிசா, சட்டீஸ்கர், மகாராஷ்டிரம் மற்றும் இராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேண்டிய தகுதியாக, போட்டியிட விரும்பும் நபருக்கு இரு குழந்தைகள் மட்டுமே இருக்கவேண்டும் என்ற நிபந்தனையை அறிமுகப் படுத்தியுள்ளன. இந்த நிபந்தனையானது ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்குமே எதிரானதாக இருந்தாலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பெண்களுக்கு இது மிகவும் பிரச்சினை வாய்ந்ததாக உள்ளது. ஏனெனில் பெரும்பாலான குடும்பங்கள் பெரிய குடும்பம் மற்றும் கூட்டுக்குடும்ப நியதியையே தற்போதும் கடைபிடித்து வருகின்றன.

இந்தியாவின் கிராமப்பகுதிகளில் இன்னமும் மரபார்ந்த / ஆதிக்கக்குழுக்கள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருவதும் அரசியல் சாசன 73ஆவது திருத்த ஷரத்துகளும் எதிர்ப்பை அல்லது முரண்பாடு கொண்ட கிராமச்சூழலை மேலும் தீவிர நிலைக்கு ஆளாக்கியுள்ளன. இதனால் அதிக எண்ணிக்கையில் மக்கள் திரளின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. வன்முறை, இரத்தம் சிந்துதல், மரணம் ஆகியவையும் இந்த மனித உரிமைகள் மீறலில் உள்ளடங்கும். பல மாநிலங்களில் பஞ்சாயத்துத் தேர்தல்களுக்கு முன்னும் பின்னும் பரவலான வன்முறைகள் வெடிக்கின்றன. பல பதவிகளுக்கு போட்டி இல்லாமலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அரசுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் இடையில் இருக்கின்ற அதிகாரப் போட்டியாக மட்டும் இவை இல்லை, மாறாக மரபான வழியில் ஆதிக்கம் செலுத்தும் அதிகார அமைப்புக்கும் அடிமட்ட நிலையில் விளிம்புநிலை குழுக்களிடம் இருந்து உருவாகும் புதிய தலைமைக்கும் இடையில் ஏற்படும் அதிகாரப் போட்டியாகவே இது உள்ளது. ஆதிக்கம் செலுத்தும் குழுக்கள் நலிவடைந்த பிரிவினர்களைத் தீவிரமாக எதிர்க்கின்றனர். அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட இனத்தவரையும் பழங்குடி இனத்தவரையும் எதிர்க்கிறார்கள். நலிவடைந்த பிரிவினர் வாக்களித்தல், பிரச்சாரம் செய்தல், கூட்டத்தில் கலந்து கொள்ளுதல், தங்களைச் சார்ந்தவர்களுக்கு ஆதரவு கோருதல் முதலான செயல்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் தங்களது அரசியல் சாசன உரிமைகளை அவர்கள் அனுபவிப்பதற்கு ஆதிக்கம் செலுத்தும் குழுக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது.

**முடிவுரை**

சமூகத்தின் விளிம்புநிலை பிரிவினர்களுக்கு அதிகாரம் அளிப்பதை 73ஆவது அரசியல் சாசன திருத்தச் சட்டமானது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆனால் இந்த சட்டத்தின் தொடக்கநிலையில் எதிர்பார்த்த அளவுக்கு மாற்றம் ஏற்படவில்லை. சமூகத்தின் அதிகாரப்படிநிலை வரிசை, பாரம்பரிய நிறுவனங்கள், போலிகள் ஈடுபடுதல், விளிம்புநிலை சமுதாயத்தினரின் மோசமான பொருளாதார நிலைமை போன்ற பல்வேறு காரணிகளால் எதிர்பார்த்த மாற்றம் ஏற்படவில்லை. காலம் செல்லச்செல்ல, விளிம்பு நிலை சமுதாயத்தினர் முடிவு எடுக்கும் செயல்முறைகளில் மற்றும் செயல்முறையை அமல்படுத்துவதில் தாங்களாகவே ஆக்கப்பூர்வமாக ஈடுபட்டனர். குறிப்பாக தங்களது சமுதாயத்தையும் தாங்கள் வசிக்கும் இடங்களையும் மேம்படுத்துவதில் கவனம் செலுத்தினர். இவை எல்லாம் நடந்தாலும்கூட இன்னமும் நாம் எதிர்கொள்ளவேண்டிய சில பிரச்சினைகள் தொடர்ந்து இருந்து கொண்டுதான் உள்ளன. உதாரணமாக பெண்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து அளித்தல் போன்ற விஷயங்களில் பிரச்சினைகள் தொடர்கின்றன. இந்தத் திசையில் அனுகூலமான நடவடிக்கை என்பது உள்ளாட்சி அமைப்புகள் பெண்களுக்கு அதிகாரம் வழங்குவதில் உத்வேகம் கொள்வதே ஆகும். அதிலும் குறிப்பாக விளம்புநிலை சமுதாயத்தினருக்கு உத்வேகம் தரும் அதிகாரத்தை அளிக்கவேண்டும்.

---

**- டாக்டர் டி.பிரம்மானந்தம்** கர்நாடகாவின் தார்வாடில் உள்ள பல்துறைசார் அபிவிருத்தி ஆராய்ச்சி மையத்தில் இணைப்பேராசிரியர்.

**- டாக்டர் கே.வி.ஸ்ரீநிவாஸ்** ஆந்திரப்பிரதேசத்தில் குண்டூரில் உள்ள ஆச்சார்யா நாகார்ஜுனா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்குப் பிறகான மேலாய்வு செய்பவர்.

# உயர்கல்வி மூலம் அதிகாரம் அளித்தல்: பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினரிடையே சமூகமாற்றம்

- எஸ்.சீனிவாசராவ்,
- டி.எஸ்.சுந்தரேஷா

நமது சமுதாயத்தில் சில சாதியினரும் சில மரபினரும், மற்ற சாதிகளுடன் ஒப்பிடும்போது கூடுதல் வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த சமூக உண்மையாகும். அதே அடிப்படையில் பார்க்கும்போது வேறுசில சாதியினரும், மரபினரும் மற்ற சாதியினர் மற்றும் மரபினருடன் ஒப்பிடும்போது, குறைந்த வசதிகளும் சலுகைகளும் பெற்றவர்களாக உள்ளனர் என்பதும் உண்மையாகும். இந்த சமூக உண்மையைக் கருத்தில்கொண்டுதான் குறைந்த அளவில் சலுகைகளும், அதிக அளவில் நலிவடைந்த தன்மையும் கொண்ட குழுக்களுக்கு (பட்டியலினத்தவர்கள் மற்றவர்களுக்கான சடங்குகளை செய்பவர்களாக கருதப்படுவதால், அவர்களும் பூகோள அடிப்படையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதுடன், நலிவடைந்த நிலையில் இருப்பதால் பழங்குடியினரும் மிகவும் நலிவடைந்த பிரிவினராக கருதப்படுகின்றனர்) சில சிறப்பு சமூகப்பாதுகாப்பு வசதிகளும், பாகுபாடுகள் காட்டப்படுதல், அட்டூழியம் இழைத்தல் ஆகியவற்றுக்கு எதிரான பாதுகாப்பு அம்சங்களும் வழங்கப்பட வேண்டியது அவசியம் என்று இந்திய அரசியலமைப்புச்சட்டம் அங்கீகரித்திருக்கிறது. இதுதவிர, பட்டியலினத்தவருக்கு ஆதரவாக தீண்டாமை தடுப்புச்சட்டம், பழங்குடியின நிலம் மற்றும் வாழ்விட உரிமைப் பாதுகாப்புச்சட்டம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு மற்றும் உதவித்தொகை வழங்குதல் உள்ளிட்ட ஆக்கபூர்வ வசதிகளும் செய்துதரப்பட்டுள்ளன. அண்மைக்காலத்தில் பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காக மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கப்படும் நிதியில் துணைத்திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் துணைத்திட்டம் காரணமாக கடந்த 10 ஆண்டுகள் அல்லது அதற்கும் கூடுதலான காலத்தில் பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினத்தில் தொழில்முனைவோர் மற்றும் வணிகப்பிரிவினர் உருவாகும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

புதிய வணிக சமுதாயமாக உருவாகவேண்டும் என்ற இலட்சியங்களையும், ஆசைகளையும் அடைவதற்கு முன்னோட்டமாக பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களிடையே படித்த நடுத்தர வர்க்கத்தினர் என்ற புதிய தலைமுறை உருவாகி வருவதை இந்தியா பார்த்துக் கொண்டிருக்கிறது. கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் கடைபிடிக்கப்பட்டு வரும் சமூக நீதிக் கொள்கைகள்தான் கடினமான தன்மை கொண்ட சமூக அமைப்பில் இத்தகைய மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றன என்று இதுதொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. சுதந்திர இந்தியாவில் பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினரிடையே படித்த நடுத்த வர்க்கத்தினர் என்ற புதிய பிரிவு உருவாவதற்கு உயர்கல்வியில் வழங்கப்படும் இடஒதுக்கீடும், அரசு வேலைவாய்ப்பும்தான் காரணம் என்று எந்த ஐயமும் இன்றி கூறமுடியும். உயர்கல்வித் துறையிலும், வேலைவாய்ப்பிலும் இடஒதுக்கீடு மிகவும் கடினமான முறையில் செயல்படுத்தப்பட்டு வருவதால்தான் பட்டியலின மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை மாணவர்கள் சமூகத்தடையைத் தகர்த்து சமூகம், அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்துத்துறைகளிலும் பட்டியலின மற்றும் பழங்குடியின முதல் தலைமுறையினர் அதிகாரம் பெற முடிகிறது.

இத்தகைய அதிகாரம் அளித்தலின் விளைவுகள் சமூக மற்றும் கல்வி சார்ந்த விசயங்களில் தெளிவாகத் தெரிகிறது. இதனால் ஏற்படும் தாக்கங்கள் சுழற்சிமுறை கொண்டவையாக உள்ளன. மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தி வரும் கொள்கைகள்தான் பட்டியலினத்த

வரும், பழங்குடியினரும் கல்வியைப் பெறுவதற்கு அதிகாரம் அளிக்கின்றன. அதன் தொடர்ச்சியாக சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்ள பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு கல்வி உதவி செய்கிறது. சமூக மற்றும் பொருளாதார நிலை உயர்ந்ததன் காரணமாக சிறப்பான, பரவலான உயர்கல்வி வாய்ப்புகளுக்கான புதிய கதவுகள் அவர்களுக்குத் திறந்துவிடப் பட்டிருக்கின்றன.

முதலாவதாக நலிவடைந்த பிரிவினருக்கான சமூக அதிகாரம் அளித்தலின் முதல் நன்மை என்னவென்றால், வேலைவாய்ப்பு பெறுவதற்கு ஏற்ற தரமான கல்வியைப் பெறவேண்டும் என்ற அவர்களின் விருப்பம் அதிகரித்திருக்கிறது. பிராந்தியம், மாநிலம் ஆகிய எல்லைகளைக் கடந்து பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினரின் எழுத்தறிவு விகிதம் அதிகரித்திருக்கிறது. தொடக்கநிலைக் கல்வியில் அவர்கள் சேரும் விகிதம் அதிகரித்திருக்கிறது. பள்ளிகளிலிருந்து அவர்களின் இடைநிற்றல் விகிதம் கணிசமான அளவில் குறைந்திருக்கிறது. அவர்கள் தொடர்ந்து கல்வி கற்கும் விகிதம் கவலை அளிக்கும் வகையிலேயே நீடிக்கிறது என்ற போதிலும், முந்தைய அளவுடன் ஒப்பிடும்போது பல்வேறு நிலைகளில் முன்னேற்றம் காணப்படுகிறது. பட்டியலினத்தவர்களும், பழங்குடியினரும் தொடக்கநிலை கல்வியிலிருந்து இடைநிலை வகுப்புகளுக்கும், இடைநிலை வகுப்புகளிலிருந்து மேல்நிலை வகுப்புகளுக்கும் முன்னேறும் விகிதம் ஓரளவு மேம்பட்டுள்ளது. இந்த விஷயத்தில் செய்யப்படவேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கும் போதிலும், இப்போது எட்டப்பட்டுள்ள முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாகும்.

### உயர் கல்வியில் பங்கேற்பு மற்றும் அதிகாரம் அளித்தல்:

பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினருக்கு சமூக மற்றும் பொருளாதார அதிகாரம் அளித்தல் காரணமாக உயர் கல்வியில் அவர்களின் பங்கேற்பு அதிகரித்திருக்கிறது. உயர்கல்விதான் பட்டியலின மக்களின் மேம்பட்ட வாழ்க்கைத்தரம், சமூக அந்தஸ்து, பொருளாதார வாய்ப்புகள் ஆகியவற்றை அடைவதற்கான கருவி என்பதால் இது முக்கியத்துவம் பெறுகிறது. கடந்த 15 ஆண்டுகளில் பட்டியலின மற்றும் பழங்குடியின மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கை விகிதம் பிரம்மாண்டமான அளவில் அதிகரித்திருக்கிறது. உதாரணமாக 2005-06 ஆம் ஆண்டில் 8.4% ஆக இருந்த பட்டியலின மாணவர்களின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் 2014-15ஆம் ஆண்டில் 19.1% ஆக அதிகரித்திருக்கிறது (அட்டவணை-1). இதேகாலக் கட்டத்தில் பழங்குடியின மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கை விகிதம் 6.66% லிருந்து, 13.7% ஆக அதிகரித்திருக்கிறது.

உண்மையில் மத்திய, மாநில அரசுகளின் கொள்கை அழுத்தம் மற்றும் புத்தாயிரமாண்டில் முதல் 10 ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களைத் தொடங்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் ஆகியவற்றின் காரணமாக 1999-2000ஆவது ஆண்டிலிருந்தே பட்டியலின மற்றும் பழங்குடியின மாணவர்களின் உயர்கல்விச் சேர்க்கை விகிதம் படிப்படியாக அதிகரித்து வந்தது. 1999-2000ஆவது ஆண்டில் 5.09% ஆக இருந்த பட்டியலின மக்களின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை



அட்டவணை 1: உயர் கல்வி மாணவர் சேர்க்கை விகிதங்கள் (2005-06 முதல் 2014-15 வரை)

| ஆண்டு | அனைத்துப் பிரிவுகள் | | | பட்டியலினத்தவர்கள் | | | பழங்குடியினத்தவர்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 2005-06 | 13.5 | 9.4 | 11.6 | 10.1 | 6.4 | 8.4 | 8.6 | 4.7 | 6.6 |
| 2014-15 | 25.3 | 23.2 | 24.3 | 20.0 | 18.2 | 19.1 | 15.2 | 12.3 | 13.7 |

ஆதாரம்: இந்திய அரசு, 2016.

விகிதம், 2014-15ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 4 மடங்காக அதிகரித்தது. அதே நேரத்தில் பழங்குடியின மாணவர்களின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் இதே காலத்தில் 6.43%லிருந்து, 13.70% ஆக இருமடங்கு மட்டுமே அதிகரித்தது. இதற்கு முற்றிலும் மாறுபட்ட வகையில், இடஒதுக்கீடு பெறாத பிரிவினர் உள்ளிட்ட அனைத்துப் பிரிவினருக்குமான உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் இதேகாலத்தில் 11.60%லிருந்து 24.3%ஆக அதிகரித்தது.

மேற்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து சில முடிவுகளுக்கு நம்மால் வரமுடியும். 2000ஆவது ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் அனைத்துப் பிரிவினரின் பங்கேற்பு விகிதமும் உயர்கல்வியில் மிக அதிகளவில் அதிகரித்திருக்கிறது. குறிப்பாக பட்டியலினத்தவரின் உயர்கல்வி பங்கேற்பு இன்னும் கூடுதலாக அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சியின் காரணமாக பட்டியலினம் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த பெண்கள் மிகப்பெரிய அளவில் பயனடைந்திருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, 2005-06ஆம் ஆண்டில் பட்டியலினப்பெண்களின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் 6.4% ஆகவும், பழங்குடியினப் பெண்களின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் 4.7% ஆகவும் மட்டுமே இருந்தது. இது 2014-15ஆம் ஆண்டில் முறையே 18.2% ஆகவும், 12.3% ஆகவும் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சமூக மற்றும் பொருளாதார அதிகாரம் பெறவேண்டுமானால், அதற்கு கல்வி மிகவும் அவசியம் என்ற உண்மையை பட்டியலினம் மற்றும் பழங்குடியின மாணவர்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையே அவர்களின் உயர்கல்வி பங்கேற்பு விகிதம் மிகப்பெரிய அளவில் அதிகரித்திருப்பது காட்டுகிறது. உயர்கல்வியில் பட்டியலினம் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை மாணவர்கள் மிக அதிக அளவில் சேர்ந்திருக்கிறார்கள் என்பதையும் மேற்கண்ட புள்ளிவிவரங்கள் விளக்குகின்றன. பட்டியலினம் மற்றும் பழங்குடியின மாணவர்களால் குடிமைப் பணிகளிலும் சேரமுடிகிறது. ஒரு காலத்தில் மிக உயர்ந்த தொழில் படிப்புகளாகக் கருதப்பட்ட பொறியியல், மருத்துவம், சட்டம் மற்றும் பல்கலைக் கழகப் பேராசிரியர் பணி ஆகியவற்றில் அவர்களால் சேர முடிகிறது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இத்தகைய



முன்னேற்றங்களின் காரணமாக இந்தப் பிரிவினரின் தொழிற்பிரிவு வரையறையும், நடுத்தர வர்க்கத்தினருக்கான வரையறையும் மாற்றியமைக்கப் பட்டுள்ளன. அதே நேரத்தில் அரசுத் துறைகளில் நான்காம் தொகுதி பணிகள், தனியார்துறை பணிகள் ஆகியவற்றில் பட்டியலினம் மற்றும் பழங்குடியின மக்கள்தான் அதிக எண்ணிக்கையில் உள்ளனர் என்பது பழங்கால அதிகாரப் படிவரிசை மீண்டும் உருவாக்கப்படுவதைக் காட்டுகிறது. பள்ளிப்படிப்பைப் பாதியில் முடித்து வெளியேறுபவர்கள், முறைசார்ந்த வேலைவாய்ப்பு அமைப்பில் கடைநிலைப் பணிகளில் சேர்வதன் காரணமாகவே இத்தகைய நிலை உருவாகிறது. இத்தகைய போக்கு ஒருபுறம் இருக்க சாதாரண நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு முன்னேறுதல், நவீன வேலைகளில் சேருதல் ஆகியவற்றின் காரணமாக பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களிடையே குறிப்பிடத்தக்க வகையில் சமூக மாற்றம் ஏற்பட்டிருப்பதுடன், கண்ணியமும் சேர்ந்திருக்கிறது. தாராளமயமாக்களுக்குப் பிந்தைய காலத்தில் ஏற்பட்டுள்ள மற்றொரு முக்கிய முன்னேற்றம் என்னவென்றால், பட்டியலினம் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் உயர்கல்விக்காகவும், வேலைவாய்ப்புகளுக்காகவும் வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். பணிக்குச் சென்ற இடத்தில் தங்களுக்கான குழுக்களை ஏற்படுத்திக்கொள்கின்றனர். ஒருகாலத்தில் நலிவடைந்த நிலையில் இருந்த பட்டியலினம் மற்றும் பழங்குடியின மாணவர்கள், இப்போது எந்த அளவுக்கு சமூக, பொருளாதார அதிகாரம் பெற்றுள்ளனர் என்பதை இது காட்டுகிறது. அதே நேரத்தில், உள்நாட்டில் பட்டியலின மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளும், பாகுபாடும் தொடர்ந்து நடைபெற்று வருவது தெரியவருகிறது. பட்டியலின மற்றும் பழங்குடியின மக்கள் அண்மைக்காலத்தில் அடைந்துள்ள முன்னேற்றம் மிகவும் சிறியதுதானோ என்ற எண்ணத்தை இது ஏற்படுத்துகிறது.

### சில கவலைகள்:

பட்டியலினம் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றம் ஒருபுறம் மனநிறைவு அளித்தாலும், சில கவலைகளும் இருக்கத்தான் செய்கின்றன. உயர்கல்வி நிறுவனங்கள் தனியார்மயமாகி வருவதால், சமூக அடிப்படையில் நலிவடைந்த நிலையில் உள்ள பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் உயர்கல்வி வாய்ப்புகள் தடைபடுகின்றன. இதனால் ஏற்படும் இரு தாக்கங்கள் குறித்து பார்ப்போம். முதலாவதாக, 2000ஆவது ஆண்டுக்குப்பின் தொழிற்கல்வித்துறையில் அதிக எண்ணிக்கையில் தொடங்கப்பட்டவை தனியார் கல்வி நிறுவனங்கள் என்பதாலும், அக்கல்வி நிறுவனங்களில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி வழங்கப்படவேண்டிய இடஒதுக்கீடு வழங்கப்படுவதில்லை என்பதாலும், பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களால் உயர் தொழிற்கல்வியில் சேரமுடிவதில்லை. இதனால், இச்சமுதாயப் பிரிவினர் பொதுவான உயர்கல்வியில்தான் சேரமுடிகிறது. இத்தகைய கல்வி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு மிகவும் குறைவாகவே உள்ளது.

இரண்டாவதாக, தற்போதைய நிலையில் அதிக வேலைவாய்ப்புகளை வழங்கும் தனியார் நிறுவனங்களில் இடஒதுக்கீடு நடைமுறையில் இல்லை என்பதால், பட்டியலின மற்றும் பழங்குடியின மக்கள் படித்து விட்டு வேலையில்லாதவர்களாக உள்ளனர். இந்திய விடுதலைக்குப் பிறகு, நலிவடைந்த பிரிவினரின் சமூக மாற்றத்தை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளுக்கு இந்த இரு அம்சங்களும் முட்டுக்கட்டையாக உள்ளன.

இதுமட்டுமின்றி, அனைத்து சமுதாயப் பிரிவுகளிலும், குறிப்பாக பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களிடையே பாலின சமத்துவம் என்பது தொடர்ந்து மிகப்பெரிய பிரச்சினையாக இருந்துவருகிறது. உயர்கல்வியில் பெண்கள் பங்கேற்கும் விகிதம் அதிகரித்திருக்கும் போதிலும், ஆண்களைவிட குறைந்த எண்ணிக்கையில்தான் பெண்கள் உயர்கல்வி கற்கின்றனர். அதைவிட முக்கியமாக நகர்ப்புறங்களைச் சேர்ந்த பட்டியலின மற்றும் பழங்குடியினப் பெண்கள், கிராமப்புறங்களைச் சேர்ந்த பட்டியலின மற்றும் பழங்குடியினப் பெண்களைவிட சிறப்பாகக் கல்வி கற்கின்றனர். அதாவது, உயர்கல்வி வாய்ப்புகள் பரவலாக்கப்பட்டதன் பயனாக ஏற்பட்டு வரும் சமூக மாற்றத்தால் பெருமளவிலான பெண்கள் பயனடையவில்லை என்பதைய இந்தப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. உயர்கல்வியில் சேரும் நகர்ப்புற பட்டியலின மற்றும் பழங்குடியினப் பெண்களில்

பெரும்பான்மையினர் இடஒதுக்கீட்டுக் கொள்கையால் பயனடைந்த இரண்டாம் தலைமுறையினர் ஆவர். அதாவது பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் முதல் தலைமுறையைச் சேர்ந்த மாணவர்களில் பெரும்பான்மையினர் சமூக மற்றும் பொருளாதார அதிகாரம் அளித்தலுக்கான வாய்ப்புகள் மற்றும் கொள்கை நடைமுறையால் இன்னும் பயனடையவில்லை. இதுகுறித்து விரிவாக அறிய முறைசார்ந்த வேலைவாய்ப்புத் துறைகளில் ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த பட்டியலின மற்றும் பழங்குடியின குடும்பங்களின் நிலை குறித்து பார்ப்போம்.

ஊரகப்பகுதிகளைச் சேர்ந்த பட்டியலின மற்றும் பழங்குடியின குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், குறைந்த அளவு கல்வித்தகுதி தேவைப்படும் முறைசார்ந்த வேலைவாய்ப்புகளில் அதிக அளவில் சேரவில்லை என்பதை இரண்டாவது அட்டவணை காட்டுகிறது. பட்டியலினம் மற்றும் பழங்குடியினரில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களின் வளர்ச்சி மற்றும் அதிகாரப் பெறுதலுக்காக சமூக நீதிக்கொள்கைகள் பெரிய அளவில் பங்களிக்கவில்லை என்பதையும் இது காட்டுகிறது.

படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது அரிதாகிவரும் சூழலில், கவலையளிக்கும் மற்றொரு அம்சம் என்னவென்றால், அரசுத்துறைகளில் வேலைவாய்ப்பு குறைந்து வருவதும், தாராளமயமாக்கல் கொள்கை நடைமுறைபடுத்தப்பட்ட பிறகு தனியார்துறை வேகமாக வளர்ந்து வருவதால், அரசு வேலைவாய்ப்புகள் அதிகரிக்காததுமாகும். தனியார்துறை வேலைவாய்ப்புகளைப் பொறுத்தவரை, இடஒதுக்கீடு இல்லை என்பதால் பட்டியலின மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு அங்கீகாரம் அளிப்பது மிகவும் மந்தமாகவோ அல்லது தடைபட்ட நிலையிலோ உள்ளது. படித்த பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காததால், அச்சமுதாயப் பிரிவைச் சேர்ந்த மற்றவர்களுக்கு படிப்பின் மீதான ஆர்வம் மேலும் குறையக்கூடும்.

அட்டவணை 2: பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பு பெற்றுள்ள பட்டியலின மற்றும் பழங்குடியின குடும்பங்களின் ஒட்டுமொத்த விகிதாச்சாரம்

| | பட்டியலினத்தவர் | பழங்குடியினர் |
|---|---|---|
| கிராமப்புற குடும்பங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை | 33164085 | 19737399 |
| அரசுத்துறை | 3.95% | 4.36% |
| பொதுத்துறை | 0.93% | 0.58% |
| தனியார்துறை | 2.42% | 1.48% |

குறிப்பு: இதில் குறிப்பிடப்பட்டுள்ள விழுக்காடு என்பது ஒவ்வொரு பிரிவிலும் வேலைவாய்ப்பு பெற்றுள்ள குடும்பங்களில் ஊரகக் குடும்பங்களின் அளவு ஆகும்.

ஆதாரம்: ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகம் 2011

எனவே, பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் நிலைமை கடந்த சில பத்தாண்டுகளில் கணிசமான அளவுக்கு முன்னேறியிருக்கும் போதிலும், அது மேலும் மேம்படுத்தப்பட வேண்டும். அதே நேரத்தில், பட்டியலின மற்றும் பழங்குடியினரின் சமூக மாற்றத்திற்கான தளம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டது. அதுமட்டுமின்றி, பட்டியலின மற்றும் பழங்குடியின மக்கள் கல்வியின் முக்கியத்துவம் குறித்து தெளிவுபெற்று வருகின்றனர். சமச்சீரான உயர்கல்வி அமைப்பு மற்றும் சமச்சீரான சமுதாயத்தை உருவாக்க அது உதவுகிறது என்பதையும் அவர்கள் அறிந்துள்ளனர். தரமான உயர்கல்வியில் சேர்ந்து தொடர்ந்து படித்தல், படித்து முடித்தபின்னர் வேலைபெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருதல் ஆகியவைதான் காலம் காலமாக புறக்கணிக்கப்பட்டுவரும் பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் சமூக அதிகாரம் அளித்தலுக்கான தீர்வு என்பதில் சந்தேகமில்லை.

- **எஸ்.சீனிவாசராவ்,** இணைப்பேராசிரியர், சமூகவியல் கல்வித்துறை, ஜாகீர்உசேன் கல்வியியல் ஆராய்ச்சி மையம், சமூக அறிவியல் பள்ளி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி.

- **டி.ஏ.சுந்தரேசா,** முனைவர் பட்ட ஆய்வு மாணவர், ஜாகீர்உசேன் கல்வியியல் ஆராய்ச்சி மையம், சமூக அறிவியல் பள்ளி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி.

# தமிழ்நாட்டில் பெண் குழந்தைகளுக்கான திட்டங்கள்

- செனிட்டா ரோசலின்

**அறிமுகம்**

பெண்களுக்கு அதிகாரமளித்தல் எனும் கருத்து ஏராளமான விவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. தங்களின் தெரிவுகளை விரிவுபடுத்திக் கொள்ளும் வழிமுறையின் மூலம் பெண்கள் தங்கள் வாழ்க்கையின் மீது பொறுப்பையும், கட்டுப்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்வதே அதிகாரம் பெறுதல் என்று வரையறுக்கப்படுகிறது. தெரிவுகளை செய்வதற்கான திறமைகளை வளர்த்துக்கொள்ளும் வழிமுறையே அதிகாரம் பெறுதலாகும். இலக்குகள், பாலின அதிகாரக் கட்டமைப்புகளைப் பற்றிய விழிப்புணர்வு, சுயமரியாதை, தன்னம்பிக்கை, ஆகியவை அதிகாரம் பெறுதலின் முக்கியமான கூறுகளாகும். அதிகாரம் பெறுதல் என்பது தனி நபர் நிலை, குடும்ப நிலை, கூட்டு நிலை, சமூக நிலை என பல்வேறு படிநிலைகளில் ஏற்படும். புதிய செயல்பாடுகளுக்கு திறந்த மனதுடன் முன்வருதல், வளங்கள், திறன்கள் போன்ற கட்டுப்படுத்தும் காரணிகளை சரிசெய்தல் ஆகியவை அதிகாரம் பெறுதலை உற்சாகப்படுத்தும் கூறுகளாகும். இந்தக்கட்டுரை தமிழ்நாட்டில் பெண் குழந்தைகளுக்கென நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் திட்டங்களைப் பற்றி விவரிக்கிறது.

**ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவைகள் திட்டம் (Integrated Child Development Services Scheme - ICDS):**

குழந்தைகளின் முழுமையான ஆரம்பகால வளர்ச்சியின் மீது கவனம் செலுத்தும் திட்டம் இதுவாகும். சமூகத்தை எட்டிப்பிடித்து நேரடியாகச் சென்று செயல்படுத்தப்படும் திட்டம். இதில்முக்கியமான ஆரம்ப சுகாதாரம், தொடக்கக்கல்வி ஆகியவற்றில் பின்தங்கிய நிலையில் உள்ள சமூகங்களின் மீது இது முக்கியமான கவனத்தை செலுத்துகிறது. தாய்மார்கள், குழந்தைகள் இருவரின் நலத்தின் மீதும் அக்கறை காட்டும் திட்டமே ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவைகள் திட்டம் ஆகும். இந்தத் திட்டம் பற்றிய தரவுகள் ICDS அமைப்பினால் மண்டலவாரியாக தரப்படுவதில்லை. மாறாக, திட்டம் செயல்படும் பகுதிகள் வாரியாகவே தரப்படுகின்றன. திட்டவாரியான தரவுகள் ஊட்டச்சத்துக் குறைபாடு கொண்டிருக்கும் ஐந்து வயதுக்கும் குறைவான குழந்தைகள் பற்றிய தரவுகளைத் தருகிறது. 2001இல் 11.15 சதவிகிதமாக இருந்த ஊட்டச்சத்துக் குறைபாடு கொண்டிருக்கும் ஐந்து வயதுக்கும்



குறைவான குழந்தைகளின் எண்ணிக்கை 2011இல் 7.76 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. 2013 இல் இந்த விகிதம் 1% க்கும் குறைவாகிவிட்டது. இந்த சாதனை மிகப்பெரியது. இதற்காக ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவைகள் திட்டத்தையும், தமிழக அரசையும் வெகுவாகப் பாராட்ட வேண்டும்.

அமிலேஸ் செயல்பாடு கொண்ட இணை உணவு தமிழ்நாட்டில் ஆறு மாதம் முதல் மூன்று வயதுவரையுள்ள குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்டிர், பால்கொடுக்கும் தாய்மார்கள் ஆகியோருக்கு ஆண்டில் 300 நாள்களுக்குத் தரப்படுகிறது. இதனோடு கூட, பதின் பருவப் பெண்களுக்கும் இந்த இணை உணவு 9 மாவட்டங்களின் ராஜீவ் காந்தி பதின்பண்களுக்கு ஆக்கமலிக்கும் திட்டத்தின் கீழ் (Rajiv Gandhi scheme of Empowerment of Adolescent Girls - SABLA) ஆண்டிற்கு 300 நாள்களுக்குத்தரப்படுகிறது. முதியோர் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு ஒவ்வொரு நாளும் மதிய வேளைகளில் அங்கன்வாடி மையங்களில் சத்துணவு வழங்கப்படுகிறது. இதில் ஒவ்வொருவரின் உணவிலும் 200கிராம் சாதம், 15 கிராம் பருப்பு, 1 கிராம் எண்ணெய், 1.9 கிராம் காய்கறிகள் அடங்கியிருக்கும்.

### சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டம்

சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டம் தமிழக அரசின் சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறையால் செயல்படுத்தப்படுகிறது. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண் குழந்தைகளுக்கு இதன் மூலம் நிதி உதவி தரப்படுகிறது.

### திட்டத்தின் நோக்கங்கள்

குடும்பக்கட்டுப்பாடை ஊக்குவிப்பது பெண் சிசுக்கொலையை ஒழிப்பது

ஏழைப் பெண் குழந்தைகளின் நலங்களையும், தகுதி நிலையையும் உயர்த்துவது.

### இந்த திட்டத்தின் நன்மைகள்

**திட்டம் 1 :** ஒரே ஒரு பெண் குழந்தைக்கான திட்டம் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டுமே உள்ள குடும்பத்திற்கு ரூ.22000/- வைப்புநிதியாக போடப்பட்டு அதற்கான ரசீது தரப்படும்.

**திட்டம் 2 :** இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே உள்ள குடும்பங்களுக்கு ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் ரூ.15200/- வைப்பு நிதியில் முதலீடு செய்யப்பட்டு ரசீது தரப்படும்.

பெண் குழந்தையின் ஐந்து வயது முடிவடைந்தது முதற்கொண்டு 20 வயது வரை மாதம் ரூ.150/- கல்வி ஊக்கத்தொகையாக தரப்படும்.

### முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டம்

இந்தத்திட்டம் தமிழ்நாடு முதலமைச்சரால் 1992 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஒரு புதுமையான முன்னோடித் திட்டம் ஆகும். பாலினப் பாகுபாடு காட்டப்படுவதிலிருந்து பெண் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு இந்தத் திட்டம் உதவுகிறது. பெண் குழந்தைகளின் பெயரில் அரசாங்கத்தால் நேரடி முதலீடு செய்யப்படுகிறது.

### இந்தத் திட்டத்தின் நோக்கங்கள்

பெண்குழந்தைகளை பள்ளிகளில் சேர்த்து அவர்கள் இடைநிலைக் கல்வி வரையிலுமாவது தொடர்ந்து படிப்பதை ஊக்குவிப்பது.

18 வயதிற்குப் பிறகே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துவது.

இரண்டு பெண் குழந்தைகளுக்குப் பிறகு குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள தாய்மார்களை வலியுறுத்துவது.

பெண் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது. அவர்களை சமூகப் பொருளாதார அதிகாரம் பெறச் செய்வது.

பெண் குழந்தைகளின் நிலையை உயர்த்திட குடும்பத்தின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்வது.

### இந்தத் திட்டத்தின் கீழ் நிதி முதலீடு

#### திட்டம் 1

1.8.2011 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பிறந்த பெண் குழந்தையின் பெயரில் ரூ.50000 வைப்பு நிதியாக தமிழ்நாடு ஆற்றல் நிதி உள்கட்டமைப்புக் கழகம் லிமிடெட் அமைப்பில் முதலீடு செய்யப்படும். ஒரே ஒரு பெண் குழந்தை உள்ள குடும்பங்களுக்கு மட்டுமே இது பொருந்தும். முதலீட்டு ரசீது குடும்பத்தினரிடம் தரப்படும்.

#### திட்டம் 2

1.8.2011 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பிறந்த



ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் ரூ.25000 வைப்பு நிதியாக தமிழ்நாடு ஆற்றல் நிதி உள்கட்டமைப்புக் கழகம் லிமிடெட் அமைப்பில் முதலீடு செய்யப்படும். இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே உள்ள குடும்பங்களுக்கு இது பொருந்தும். முதலீட்டு ரசீது குடும்பத்தினரிடம் தர்ப்படும்.

இத்தகைய முதலீடுகள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படும். பெண் குழந்தைகளின் 18 வயது முடிந்ததும் இந்ததொகை வட்டியுடன் அவர்களுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் பயனைப் பெறுவதற்கு 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வை எழுதியிருக்கவேண்டும். முதிர்வுத்தொகை மேற்கல்விக்கு உதவும்.

**இந்தத் திட்டத்தின் தாக்கம்**

தமிழ்நாட்டில் 2001ஆம் ஆண்டில் 64.55% ஆக இருந்த கல்வியறிவு பெற்ற பெண் குழந்தைகளின் சதவிகிதம் 2011இல் 73.44% ஆக அதிகரித்துள்ளது. பெண் குழந்தைகள் கல்வியைக் கைவிட்டு இடையிலேயே நின்றுவிடுவது குறைந்திருப்பது இந்தத் திட்டத்தினால் தான். 1997 முதல் 2017 வரை இதுவரை 868077 பயனாளிகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.


- **டாக்டர்.செனிட்டா ரோசலின்,** பேராசிரியர் மற்றும் இயக்குநர், பெண்கள் பற்றிய கல்வி மையம், பாரதியார் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்.


●

அடுத்த இதழ் சிறப்பிதழ். இதில்,

## "வேலைவாய்ப்பும் சுயவேலைவாய்ப்பும்"

பற்றிய கட்டுரைகள் இடம்பெறும்.

# பிளாஸ்டிக் மாசு - ஒரு பார்வை

- ந.கோதண்டராமன்

உலகில் நமக்குத் தேவையான உணவு, தண்ணீர், உடை, இருப்பிடம் உள்ளிட்ட அனைத்தையும் நமக்கு வழங்குவது நமது பூமித்தாய் தான். மனித குலத்தின் அனைத்து உறுப்பினர்களும் நலமாகவும், நல்லிணக்கத்துடனும் வாழ வகை செய்யப்பட்டிருப்பது பூமித்தாய் நமக்கு அளித்த மிகப்பெரிய வெகுமதியாகும். ஆனால், பூமித்தாயின் பங்களிப்பை நாம் ஒருபோதும் மதிப்பதில்லை. மாறாக, மக்கள் தொகை அதிகரித்து வருவதாலும், அதை சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளாலும் பூமியின் வளங்களை நாம் அளவுக்கு அதிகமாக சுரண்டுவதுடன் பாதிப்புகளையும் ஏற்படுத்துகிறோம். சுற்றுச்சூழலை பாதிக்கும் செயல்கள், மனிதகுலத்தின் நடவடிக்கைகள் ஆகியவற்றால் பூமியின் சூழல் அமைப்புகள் இப்போது மிகவும் மோசமாக சீரழிந்தும், மாசுபட்டும் போயிருக்கின்றன.

நமது நாகரிக வாழ்க்கை முறையில் பிளாஸ்டிக் (நெகிழி என்பது பிளாஸ்டிக்கின் தமிழ்ப் பெயர்) முக்கிய பங்கு வகிக்கிறது. நமது அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் அனைத்துப்பொருள்களும் பிளாஸ்டிக்கால் ஆனவையாகும். பிளாஸ்டிக் பொருட்கள் மிகவும் விலை குறைவாக இருப்பது, காகிதப்பொருள்களை விட இதை தயாரிக்க குறைந்த வளங்களே தேவைப்படுவது, குறைவான எடை கொண்டது என்பதால் எளிதில் எடுத்துச்செல்ல வசதியாக இருப்பது போன்றவையே பிளாஸ்டிக் பயன்பாட்டுக்கான காரணங்களாகும். பிளாஸ்டிக் அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் வசதியாக இருந்தாலும் அது சுற்றுச்சூழலுக்கு மிகவும் அதிகமான பாதிப்பை ஏற்படுத்துவதுடன், மனிதர்களின் ஆரோக்கியத்துக்கும் கேடு விளைவிக்கிறது. சுற்றுச்சூழல் அமைப்பில் நாம் வீசி எறியும் அனைத்துப்பொருள்களையும் இயற்கையால் ஜீரணித்துக் கொள்ளமுடியாது.

பொதுவாகப் பார்த்தால் இயற்கையை மாசுபடுத்தும் பொருள்களில் நச்சுப்பொருள்கள் மற்றும் நச்சு இல்லாத பொருள்கள் கலந்துள்ளன. அவை பூமிக்கும், பல்லுயிர்களின் வாழ்க்கைச் சூழலுக்கும், மனித குலத்துக்கும் பலவகையான பாதிப்புகளை ஏற்படுத்தும். பிளாஸ்டிக்கில் உள்ள மூலக்கூறுகளில் நச்சுத்தன்மை கொண்ட, மனித ஹார்மோன்களை பாதிக்கக்கூடிய வேதிப்பொருள்கள் உள்ளன. அதுமட்டுமின்றி, பிளாஸ்டிக்கில் உள்ள மூலக்கூறுகள் டயாக்சின், உலோகம், பூச்சிக்கொல்லிகள் போன்ற நச்சுப்பொருள்களைக் கவர்ந்து இழுக்கும் காந்தமாகவும் திகழ்கின்றன. பிளாஸ்டிக் குறைந்த விலை கொண்டது, நீண்டகாலம் உழைக்கக்கூடியது, நீடித்த சக்தி கொண்டது என்பதால் இப்போது பிளாஸ்டிக் பயன்பாடு பலமடங்கு அதிகரித்துள்ளது. இதனால் பிளாஸ்டிக் மாசு மிகவும் அதிகமாக உள்ளது.

பிளாஸ்டிக் மாசுபாட்டின் தாக்கங்கள் நிலம், நீர்நிலைகள் மற்றும் கடல் பகுதிகளுக்கு ஏற்றவாறு மாறுபடும். பிளாஸ்டிக் பொருள்களால் உயிரினங்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக, கடலில் வாழும் உயிரினங்கள் பிளாஸ்டிக் பொருட்களில் சிக்கியோ அல்லது பிளாஸ்டிக் கழிவுகளை உட்கொண்டு அதை செரிமானம் செய்ய முடியாமலோ அல்லது பிளாஸ்டிக்கின் இரசாயனங்கள் உடலியல் அம்சங்களுடன் கலந்தோ பாதிப்புக்குள்ளாகின்றன. மனிதர்களும் ஹார்மோன் அமைப்புகள் சார்ந்த பல்வேறு பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர். பிளாஸ்டிக் பொருட்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுவதாலும், அன்றாட வாழ்க்கையில் பிளாஸ்டிக் பயன்பாடு அதிகரித்திருப்பதாலும் இரசாயனப் பொருட்களின் தீய விளைவுகளுக்கு இலக்காகின்றனர். இதனால் கருவுறுதல், இனப்பெருக்கம், பாலியல் நிறைவு மற்றும் பிற உடல்நலக் குறைபாடுகளுக்கு ஆளாகின்றனர்.

பிளாஸ்டிக்கில் சிக்கிக்கொண்டோ அல்லது பிளாஸ்டிக் பொருள்களை உட்கொண்டோ வனவிலங்குகள் உயிரிழப்பது அதிகரித்து வருவதாக உலகம் முழுவதும் உள்ள ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். உதாரணமாக, உயிரிழந்த கடல்சார் பறவைகளில் 90% பறவைகளின் வயிற்றில் பிளாஸ்டிக் இருந்தது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறதே தவிர, குறைந்தபாடில்லை. ஒவ்வொரு ஆண்டும் கடலில் கலக்கும் பிளாஸ்டிக் கழிவுகளின் எடை இப்போதுள்ள 1900 கோடி பவுண்ட் என்ற அளவிலிருந்து 2025ஆம் ஆண்டில் இருமடங்காக அதிகரிக்கும். இந்த பிளாஸ்டிக் கழிவுகள் அதிக எண்ணிக்கையிலான விலங்குகளைக் கொல்வது மட்டுமின்றி பவளப் பாறைகளையும் சேதப்படுத்துகின்றன. அதுமட்டுமின்றி, பிளாஸ்டிக் துகள்கள் உணவுச் சங்கிலியில் கலப்பதால் மனிதர்களின் உடல்நலத்தையும் கடுமையாக பாதிக்கிறது. பிளாஸ்டிக்கால் ஏற்படும் கடுமையான பாதிப்பு காரணமாக, அதனால் பாதிப்புக்கு உள்ளாகும் எந்த உயிரினமும் வாழமுடியாது. அதுமட்டுமின்றி, பிளாஸ்டிக்கால் பல்லுயிர் வாழிடங்கள் பாதிக்கப்படுவதுடன், சூழல் அமைப்புகளையும் மாற்றுகின்றன.

உலக அளவில் பிளாஸ்டிக் உற்பத்தி ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. மனிதர்களால் உருவாக்கப்படும் ஒட்டுமொத்தக் கழிவுகளில் பிளாஸ்டிக்கின் பங்கு மட்டும் 10% ஆகும். உலகில் ஒவ்வொரு ஆண்டும் 38 கோடி டன் பிளாஸ்டிக் உற்பத்தி செய்யப்படுகிறது. 1950ஆம் ஆண்டுகளில் இருந்து 2018ஆம் ஆண்டு வரை மொத்தம் 630 கோடி டன் பிளாஸ்டிக் உலகம் முழுவதும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அவற்றில் 9% மட்டுமே மறுசுழற்சிக்கு உள்ளாக்கப்படுகின்றன; 12% எரித்து சாம்பலாக்கப் பட்டிருக்கின்றன. 2050ஆம் ஆண்டுக்குள் கடலில் உள்ள மீன்களின் எடையை விட பிளாஸ்டிக் கழிவுகளின் எடை அதிகமாக இருக்கும் என்று சில ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

உலகின் ஒட்டுமொத்த பிளாஸ்டிக் கழிவுகளில் மூன்றில் ஒரு பங்கு மண்ணிலோ அல்லது தூய்மையான நீராதாரங்களிலோ கலக்கின்றன. உலகில் உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்டிக்கில் 50 விழுக்காடு ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. பிளாஸ்டிக் பைகள் மற்றும் தண்ணீர் பாட்டில்கள் இதற்கு சிறந்த உதாரணமாகும். உலக அளவில் ஆண்டுதோறும் 50,000 கோடி பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆண்டுக்கு 80 இலட்சம் பிளாஸ்டிக் கழிவுகள் கடலில் கலக்கின்றன. இது ஒவ்வொரு நிமிடமும் ஒரு லாரி பிளாஸ்டிக் குப்பைகளை கடலில் கொட்டுவதற்கு சமமானதாகும். இது நமது கடலையும், கடற்கரையையும் அழிக்கிறது. உலக அளவில் கடலில் கலக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளில் 60% சீனா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம், இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து கொட்டப்படுபவை ஆகும்.

இன்றைய நிலையில் உலகில் 40க்கும் மேற்பட்ட நாடுகளும், நகரங்களும் பிளாஸ்டிக் பைகளுக்கு தடை விதித்துள்ளன. உலக அளவில் அனைத்து வகையான பிளாஸ்டிக் பைகளையும் தடை செய்யவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் செயலகம் பரிந்துரைத்துள்ளது. சீனா உள்ளிட்ட சில நாடுகள் உலகின் குப்பை மேடாக இருக்க விரும்பவில்லை என்று கூறி, உலக அளவில் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை மறுசுழற்சி செய்யப்போவதாக கடந்த ஆண்டு அறிவித்துள்ளன. உலக அளவில் பிளாஸ்டிக் பொருள்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதையும், கடல்களைத் தூய்மையாக வைத்திருக்கவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ள ஐரோப்பிய ஒன்றியம், பிளாஸ்டிக் பைகள் மற்றும் பேக்கேஜிங்குகளுக்கு வரி விதிக்க முடிவு செய்துள்ளது. இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூயார்க் நகரம் உள்ளிட்ட மேலும் பல நாடுகளும், நகரங்களும் இத்தகைய வரியை விதிப்பது குறித்து பரிசீலித்துவருகின்றன.

## பிளாஸ்டிக் மாசுவைக் கட்டுப்படுத்துவதில் இந்தியாவின் பங்கு

2018ஆம் ஆண்டின் உலக சுற்றுச்சூழல் நாள் பிளாஸ்டிக் மாசுவை வீழ்த்துவோம் என்ற முழக்கத்துடன் கொண்டாடப்பட்டது. தூய்மையான, நீடித்த பிரபஞ் சத்துக்கான உறுதிப்பாட்டை மறு உறுதி செய்வதற்காகவும், பிளாஸ்டிக் மாசுவை வீழ்த்த உறுதியேற்பதற்காகவும் இந்தக் கொண்டாட்டத்தை இந்தியா நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிட்ட மதிப்பீட்டு அறிக்கையின்படி இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 15,000 டன் பிளாஸ்டிக் கழிவுகள் உருவாகின்றன. அவற்றில் 9000டன் சேகரிக்கப்பட்டு, மறுசுழற்சி செய்யப்படுகிறது. மீதமுள்ள 6000டன் பிளாஸ்டிக் குப்பைகள் சேகரிக்கப்படாமல் குப்பையாகவே கிடக்கின்றன. பிளாஸ்டிக் கழிவுகளில் 66% உணவுகளை, குறிப்பாக வீட்டு உணவுகளை பொட்டலம் கட்ட பயன்படுத்தப்படுபவையாகும்.

பிளாஸ்டிக் கழிவுகளை உட்கொண்டு செரிமானம் செய்ய முடியாமலோ, நைலான் மீன்பிடி வலைகள், ஆறு மடிப்பு பிளாஸ்டிக் கேன் வைக்கும் அமைப்பு, பிளாஸ்டிக் கயிறுகள் போன்றவற்றில் சிக்கியோ ஒவ்வொரு ஆண்டும் 10இலட்சம் கடல் பறவைகளும், ஒரு இலட்சம் கடல் பாலூட்டிகளும் இறக்கின்றன.

சுற்றுச்சூழல் அமைப்பில் பிளாஸ்டிக் பயன்பாட்டுக்கு, உடனடியாக முழுமையான தடை விதிக்கப்படாமல், இப்போதைய வேகத்தில் தொடர்ந்தால், அடுத்த தலைமுறை அணுகுண்டை விட மிக மோசமான ஆபத்தை எதிர்கொள்ளும் என்று கடந்த 2012ஆம் ஆண்டு இந்திய உச்சநீதிமன்றம் எச்சரிக்கை விடுத்தது.

2017ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வின்படி, இந்தியா ஒவ்வொரு ஆண்டும் 56 இலட்சம் டன் பிளாஸ்டிக் கழிவுகளை உருவாக்குவதாகவும், இது ஒவ்வொரு ஆண்டும் கடலில் கொட்டப்படும் பிளாஸ்டிக் கழிவுகளில் 60% என்றும் தெரியவந்துள்ளது. உலகில் உள்ள கடல்களில் கலக்கும் பிளாஸ்டிக் கழிவுகளில் 90% கழிவுகளைக் கொண்டு செல்லும் 10 ஆறுகளில் சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா ஆகிய 3 ஆறுகள் இந்தியாவில் ஓடுகின்றன.

பிளாஸ்டிக் கழிவுகளுக்கு எதிராக மிகப்பெரிய அளவிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும், தூய்மைப் பிரச்சாரத்தையும் இந்திய அரசு மேற்கொண்டு வருகிறது. 2018ஆம் ஆண்டு உலகச்சுற்றுச்சூழல் நாள் பிரகடனத்தைத் தொடர்ந்து பிளாஸ்டிக் பைகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாட்டுக்கு 25 மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் முழுமையானத் தடை விதித்துள்ளன. நிலம் மற்றும் கடலில் பிளாஸ்டிக் மாசுவை முழுமையாக ஒழிக்கவேண்டியதன் அவ்சியம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்த இந்த அரசுகள் முடிவு செய்துள்ளன. மற்ற மாநிலங்களைத் தொடர்ந்து தமிழக அரசும், பிளாஸ்டிக் இல்லாத மாநிலத்தை உருவாக்குவதற்காக, மக்காத தன்மை கொண்ட பிளாஸ்டிக் பொருட்களை 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தடை செய்வதாக அறிவித்திருக்கிறது

மீதமுள்ள மாநிலங்களும் அனைத்து வகையான ஒருமுறை பயன்பாட்டு பிளாஸ்டிக் பொருட்களையும் 2022ஆம் ஆண்டுக்குள் ஒழிக்கும் நோக்குடன் எந்த வடிவிலான பிளாஸ்டிக் தயாரிப்புகள்/பொருள்களைத் தடை செய்வது என்பது குறித்து பரிசீலித்து வருகின்றன.

''சுற்றுச்சூழல் சீரழிவு ஏழைகளையும், நலிவடைந்த மக்களையும் தான் அதிகம் பாதிக்கிறது.'' என்ற மாண்புமிகு இந்தியப்பிரதமர் நரேந்திரமோதி அவர்களின் கருத்துடன் இந்தக் கட்டுரையை நிறைவு செய்யலாம் பொருளாதார வளத்தைப் பெருக்கிக்கொள்வதற்கான நமது முயற்சிகள் சுற்றுச்சூழலை சமரசம் செய்து கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்யவேண்டியது நம் அனைவரின் கடமையும் ஆகும்.

---

- **முனைவர் ந.கோதண்டராமன்,**
தலைவர், சுற்றுச்சூழல் அறிவியல் மையம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

# மாற்றுத்திறனாளிகள் மையம்

- ஹிமாங்ஷுதாஸ்

பல்வேறு உடல் குறைபாடுகள் கொண்டுள்ளவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான தேசியக் கழகம் - National Institute for empowerment of Persons with Multiple Disabilities (Divyangjan) (NIEPMD) மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் துறையின் கீழ் செயல்படும் ஒரு சுயாட்சி அமைப்பாகும். கிழக்குக் கடற்கரைச் சாலையில் சென்னை அருகே முட்டுக்காடு என்ற இடத்தில் 2005ஆம் ஆண்டில் இருந்து இந்த அமைப்பு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உடல் குறைபாடுகள் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான தேசிய வள ஆதார மையமாக இது இருக்கிறது.

ஆண்டுதோறும், நாடு முழுவதும் 2,50,000 பயனாளிகளுக்கு இது சேவை புரிந்து வருகிறது. பட்டயப்படிப்பு (Diploma) முதல் ஆய்வியல் நிறைஞர் (M.Phil) படிப்பு வரை 20 நீண்ட காலப் பயிற்சித்திட்டங்களும், 250 குறுகியகாலப் பயிற்சித் திட்டங்களும் இங்கு நடத்தப்படுகின்றன. தேசிய அளவில் ஒரு முக்கியமான அமைப்பாக இது திகழ்கிறது. தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கும், வடகிழக்கு மாநில மக்களுக்குமான சிறப்பு சேவைகளும் இங்கு உள்ளன. நரம்பு மண்டல வளர்ச்சிக்குறைபாடு, பெருமூளைவாதம், பார்வைத்திறனும் கேட்கும்திறனும் அற்றவர்கள், அறிவாற்றல் குறைபாடு, மனநல பாதிப்பு போன்ற பல வகையான குறைகள் உடைய மாற்றுத்திறனாளிகளின் தேவைகளை நிறைவு செய்வதற்கான திறன்களை உருவாக்கிக் கொண்டிருப்பதால் சிறப்புத் தகுதிநிலையை இந்த அமைப்பு பெற்றுள்ளது.

இந்தக்கழகத்தின் முதன்மையான நோக்கம் மனிதவளத்தை மேம்படுத்தி நிர்வாகம், பயிற்சி, மறுவாழ்வு, கல்வி, வேலைவாய்ப்பு, சமூகமேம்பாடு, ஆராய்ச்சி ஆகியவற்றை மேற்கொள்வதாகும். இவை தவிர சேவைகள் புரிவதும், மாற்றுத்திறனாளிகளை நேரடியாக சென்று அடைவதும் இதன் நோக்கமாகும்.

பலவிதமான உடல் குறைபாடு உடையவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் இந்தக்கழகம் தேசிய அளவில் புகழையும், மதிப்பையும் பெற்றுள்ளது. ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவைகளை இது வழங்குகிறது. மருந்துகள் வழங்குதல், சிறப்பு மருத்துவ வசதிகள், இயன்முறைப் பயிற்சிகள், தொழில் சிகிச்சை, புலன் ஒருங்கிணைப்பு, முன் கூட்டிய தலையீட்டுச் சேவைகள், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், சிறப்புப்பள்ளிகள், பெற்றோருக்கு அதிகாரமளித்தல், தொழிற்பயிற்சி, விரிவாக்கச் சேவைகள், புறநோயாளி ஹோமியோபதி மருத்துவமனை போன்ற பலவிதமான சேவைகளும் இவற்றுள் அடங்கும்.

### பல்வேறு உடல் குறைபாடுகள் கொண்டுள்ளவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான தேசியக் கழகம்

மாற்றுத்திறனாளி மறுவாழ்வு தொடர்பான பல்வேறு குறுகிய கால, நீண்ட காலப் பயிற்சிகளையும் NIEPMD வழங்குகிறது. பல்வேறு பிரிவுகளில் சிறப்புப் படிப்புகளையும் அளிக்கிறது. பார்வையற்ற காதுகேளாத தன்மைகள், நரம்பு மண்டல வளர்ச்சிக்குறைபாடு, பெருமூளைவாதம், அறிவாற்றல் குறைபாடு ஆகியவை பற்றிய சான்றிதழ், பட்டயம், முதுநிலைப் பட்டயம், பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, , D.Ed. Special Education (ASD, CP, MD, Deafblindness), சிறப்புக்கல்வியில் B.Ed., M.Ed. படிப்புகள், இயன்முறைப் பயிற்சியில் இளநிலைப்பட்டம் (BPT), தொழில்மருத்துவத்தில் இளநிலைப் பட்டம் (BOT),

கேட்டல், பேசுதல் திறன் பற்றிய இளநிலைப் பட்டப்படிப்பு (Bachelors in Audiology, Speech and Language Pathology - BASLP), M.Phil (மருத்துவ உளவியல்) போன்ற பலவிதமான படிப்புகளுக்கு தேசம் முழுவதும் இந்த அமைப்பினால் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரியும் வழிமுறைகள் பற்றியும், புதிய அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பற்றியும் அறிந்துகொள்ளும் விதத்தில் ஆராய்ச்சி மேம்பாடுகளைச் செய்வது இந்தக்கழகத்தின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும். இந்த கணக்கிடுவது, உபகரணங்களை வழங்கும் முகாம்களை நடத்துவது ஆகியவற்றையும் இந்த நிறுவனம் செய்கிறது.

பயனாளிகள், அவர்களின் குடும்பத்தினர், தொழில்முறைப் பணியாளர்கள், தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாற்றுத்திறனாளிகள்




**சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறைக்கான மத்திய அமைச்சர் டாக்டர்.தாவார்சந்த் ஜெஹ்லாட் மாற்றுத்திறனாளிக்கு ஆர்தோசிஸ் கருவியை வழங்குகிறார்.**

மேலும், NIEPMD அமைப்பு இந்தியா முழுவதும் குறுகிய கால பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்து நடத்தி சிறந்த சேவைகள் செய்வதற்கு உதவுகிறது. நவீன முன்னேற்றங்கள், மாற்றம் கண்டுள்ள முறைகள், தொழில்நுட்பங்கள் போன்றவை பயிற்சியில் இடம் பெறச் செய்யப்படுகின்றன. இத்தகைய பயிற்சித்திட்டங்களில் பல மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டவை. அரசுதனியார் பங்களிப்புடன் நாடு முழுவதும் நடத்தப்படுபவை. சிறுப்புக் குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றும் விதத்தில் பெற்றோருக்கு பயிற்சிகள் தரப்படுகின்றன.

நிறுவனம் பன்னாட்டு அளவிலும், தேசிய அளவிலும் வேறு பல கல்வி நிறுவனங்களுடன் இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

மத்திய அரசின் திட்டத்தின் மூலம் (ADIP scheme) மாற்றுத்திறனாளிகள் பொருத்திக்கொள்வதற்குத் தேவைப்படும் கருவிகளையும், உபகரணங்களையும் வாங்குவதற்கான உதவிகளை NIEPMD தேசிய அளவில் செய்கிறது. மாற்றுத்திறனாளிகளை அடையாளம் காண்பது, குறைபாட்டின் அளவைக்

ஆகியோருக்கு குறுகியகால பயிற்சிகள், விளையாட்டு, பொழுதுபோக்குக் கலைநிகழ்ச்சிகள், கண்காட்சிகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்துவதன் மூலம் உடல் குறைபாடுகள் ஏற்படாமல் தவிர்த்தல், குறைபாடுகளை முன்கூட்டியே கண்டறிதல், மறுவாழ்வு, மாற்றுத்திறனாளிகளுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் ஆகியவற்றிற்கு இத்தகைய முயற்சிகள் உதவும்.

வடகிழக்கு மாநிலங்களில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும், அவர்களது



குடும்பத்தினருக்கும் விழிப்புணர்வு தரும் வகையிலும், சக்தி அளிக்கும் வகையிலும் பல்வேறு பயிற்சிகளையும், கருத்தரங்குகளையும், பயிற்சிப்பட்டறைகளையும் NIEPMD நடத்துகிறது.

மாற்றுத்திறனாளிகள் சட்டத்தின்படி செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு திறன் பயிற்சிகளை இந்த நிறுவனம் வழங்குகிறது. மாற்றுத்திறனாளிகள் வேலைகளில் அமர்வதற்கேற்ற திறன்களைப் பெற இது உதவும்.

எளிதில் அணுகக்கூடிய இந்தியா என்பது அலுவலகங்கள், போக்குவரத்துகள், தகவல் தொடர்பு சேவைகள் ஆகியவற்றில் மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகக்கூடிய வசதிகள் கிடைக்கச் செய்யப்படுகின்றன. இத்தகைய வசதிகளை செய்து தருவதற்கு NIEPMD ஆதரவு அளிக்கிறது. மாற்றுத்திறனாளிகள் எளிதில் பயன்படுத்தக்கூடிய இணைய தளத்தை உருவாக்கியதற்காக தேசிய விருதினை 2011ஆண்டு NIEPMD பெற்றுள்ளது. இந்த நிறுவனத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த அணுகல் வசதிகள் தேசிய விருதினைப் பெற்றன. இந்த வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகக்கூடிய போக்குவரத்து வசதிகளும் உள்ளன.

**NIEPMDஇல் எளிதில் அணுகக்கூடிய பேருந்து வசதி**

தேர்தல் நடைமுறைகளில் மாற்றுத்திறனாளிகள் எளிதில் பங்கேற்பதற்கு துணைபுரியும் உதவிகளை செய்துவருகிறது. அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கான அடையாள அட்டைகளை (Unique Disability Identity Card - UDID) வழங்குகிறது.

எதிர்காலத்தில் மாற்றுத்திறன் தொடர்புடைய பல்வேறு புலங்களில் முதுகலை, ஆராய்ச்சிப் படிப்புகளை ஆரம்பிக்கும் திட்டம் இருக்கிறது. பல்வேறு குறைபாடுகள் தொடர்பான உயர் சிறப்பு மையங்களையும் NIEPMD அமைக்க இருக்கிறது

மேலும் விவரங்கள் அறிய தொலைபேசி எண்கள்: 044-27472104, 27472113

மின்னஞ்சல் முகவரி: niepmd@gmail.com

இணையதளம் : www.niepmd.tn.nic.in

- டாக்டர். ஹிமாங்ஷுதாஸ், இயக்குநர், NIEPMD சென்னை.

**திட்டம் இதழுக்கு சந்தா செலுத்தி அஞ்சல் மூலம் செலுத்துங்கள்**

# சரக்கு மற்றும் சேவை வரி ஒரு மீள் பார்வை

- அ. கோவிந்தராஜ்

சரக்கு மற்றும் சேவை வரி இந்தியாவில் அமலுக்கு வந்து ஓராண்டு நிறைவு பெற்ற தருவாயில், அது பற்றிய ஒரு மீள்பார்வை அவசியமாகிறது. மத்திய அரசு இவ்வரியை அமல்படுத்த முயன்ற போது இவ்வரி விதிப்பு தொடர்பாக பல்வேறு சந்தேகங்களும், கண்டனக் குரல்களும் எழுப்பப்பட்டன. குறிப்பாக தமிழ்நாடு, மகாராஷ்டிரா போன்ற மாநில அரசுகளும் இவ்வரியை கடுமையாக எதிர்த்தன. இன்று, சரக்கு மற்றும் சேவை வரி அமலுக்கு வந்து ஓராண்டான நிலையில், அந்த சந்தேகங்களும், கண்டனக் குரல்களும் என்னவாயின, இவ்வரி விதிப்பினை எதிர்த்த தமிழ் நாடு உள்ளிட்ட மாநிலங்களின் இன்றைய நிலைப்பாடு என்னவாக இருக்கிறது என்பது பற்றி விரிவாக அலசுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கல்தோன்றி மண் தோன்றா காலம் தொட்டே நாட்டு மக்களின் நலனுக்காக வரி வசூல் செய்யும் பழக்கம் உலகளவில் நடைமுறையில் இருந்துள்ளது. தமிழ்நாட்டின் முதுமை இலக்கியமான சங்க இலக்கியத்தில், ஒரு அரசன் எவ்வாறு வரி வசூல் செய்ய வேண்டும் என்பது பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (பாடல் எண். 184, புறநானூறு). அன்று தொடங்கி இன்று வரை வரிவிதிப்பு வழிமுறைகள் பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளன. அவ்வளர்ச்சியின் ஓர் அங்கம் தான் சரக்கு மற்றும் சேவை வரி (GST). இவ்வரியை இன்று 150க்கும் மேற்பட்ட நாடுகள் அமல்படுத்தியுள்ளனர். இந்திய அரசும் சா்வதேச அளவில் மாறிவரும் பொருளாதாரச் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், மக்களின் வரிச்சுமையை குறைப்பதற்காகவும் சரக்கு மற்றும் சேவை வரியை ஜீலை 1, 2017 முதல் அமல்படுத்தியுள்ளது.

## சரக்கு மற்றும் சேவை வரி இந்தியாவிற்கு அவசியமா?

சரக்கு மற்றும் சேவை வரி என்பது நாட்டின் ஏற்கனவே அமலில் இருந்த உற்பத்தி வரி, விற்பனை வரி, கேளிக்கை வரி, நுழைவு வரி உள்ளிட்ட 17 முக்கிய மறைமுக வரிகளை சீா்படுத்தி நாடு முழுவதும் ஒரே மாதிரியான வரி விதிப்பு முறையை அமல்படுத்துவதேயாகும்.

சரக்கு மற்றும் சேவை வரிக்கு முந்தைய நடைமுறைப்படி ஒரு பொருள் உற்பத்தி செய்யப்பட்டு தொழிற்சாலையில் இருந்து வெளியே அனுப்பும் போது உற்பத்தி வரி, பொருளை வாங்கும் போது விற்பனை வரி, பொருள் ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு செல்லும் போது மத்திய விற்பனை வரி, சேவை அளிக்கும் போது சேவை வரி என பல நிலைகளில் வரி விதிப்பு நிகழ்ந்தது.

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பைப் பொறுத்த வரை ஒரு பொருள், சேவை அல்லது இரண்டும் இணைந்து வினியோகம் (Supply) செய்யும் போது வரிவிதிப்பு நிகழ்கிறது. இவ்வரிவிதிப்பு மிகவும் எளிமையாகவும், பல்வேறு நடைமுறை சிக்கல்களுக்கு தீர்வு காண்பதாகவும் இருப்பதால் உலகளவில் பிரசித்தி பெற்று வருகிறது.

இந்தியாவைப் பொறுத்த வரை சரக்கு மற்றும் சேவை வரியை அமல்படுத்தியது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகவே கருதப்படுகிறது. ஏனென்றால் இவ்வரி விதிப்பு ஏற்கனவே இந்தியாவில் இருந்த மறைமுக வரிவிதிப்பில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. அதனோடு இந்திய சமூக பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பிலும் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

1947ம் ஆண்டு இந்தியா விடுதலை அடைந்த போது சுமார் 500க்கும் மேற்பட்ட மாகாணங்களாக சிதறுண்டு கிடந்தது. சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் முயற்சியால் இந்தியா ஒரு ஒருங்கிணைந்த மாநிலமாக (Union of States) அரசியல் பிரவேசம் எடுத்தது. அன்றிலிருந்து புகோள ரீதியிலும், அரசியல் ரீதியிலும் இந்தியா ஒரே நாடாக (one nation) திகழ்கிறது. ஆனால் பொருளாதாரச் சந்தை ரீதியில் ஒவ்வொரு மாநிலமும் பல்வேறு விதமான வரி விதிப்பு முறைகளை பின்பற்றுவதால் பொருளாதார சந்தை ரீதியில் இந்தியாவை ஒரே நாடாகக் (one nation, Many markets) கருத முடியவில்லை. ஒரு பொருளை புதுதில்லியில் வாங்கினால் அதற்கு வேறு விலை, அதே பொருளை மும்பையில் வாங்கினால் ஒரு விலை, சென்னையில் அதே பொருளை வாங்கினால் அதற்கு இன்னொரு விலை, இந்தியா ஒரே நாடு ஆனால் பல்வேறு சந்தை.

இந்நிலையை மாற்றி இந்தியா முழுவதையும் ஒரே சந்தையாக (One

Nation, One Tax,One Market) மாற்றியது சரக்கு மற்றும் சேவை வரி தான். இந்தியாவில் அரசியல் ஒருங்கிணைப்பு 1947ஆம் வருடம் நிகழந்திருந்தாலும், உண்மையான பொருளாதார ஒருங்கிணைவு ஜூலை 1, 2017இல் தான் நிகழ்ந்தது என்றால் அது மிகையாகாது.

இந்த வரிவிதிப்பு முறையானது மத்திய - மாநில அரசுகளுக்கு இடையிலான (Center – State Relationship) உறவில் ஒரு மைல்கல் என்றே சொல்ல வேண்டும். மத்திய அரசும், மாநில அரசும் கலந்து ஆலோசித்து இவ்வரி சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கு "GST Council" என்ற அமைப்பினை சரக்கு மற்றும் சேவை வரி சட்டமானது முன் மொழிந்துள்ளது. இந்த கவுன்சிலில் மத்திய நிதியமைச்சரும், அனைத்து மாநில நிதியமைசர்களும் இடம் பெற்று உள்ளனர். முடிவுகள் அனைத்தும் ஓட்டெடுப்பின் அடிப்படையிலும் ஒருமித்த கருத்தின் அடிப்படையிலும் எடுக்கப்படுவதால் மத்திய - மாநில அரசின் நலன் முறையாக காக்கப்படுகிறது. இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் அடிப்படை கூறான கூட்டாட்சி தத்துவம் (federalism) இவ்வரி விதிப்பின் மூலம் வலுப்பெறுகிறது.

இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள மத்திய பட்ஜெட் 2018-19 ஒரு மதிப்பீடு என்ற அறிக் கையில் 2017-18 ஆம் ஆண்டுக்கான மறைமுக வரி வசூல் 2016-17ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8.7% உயர்ந்திருப்பதாகவும், அது 2018-19ம் நிதியாண்டில் 19.1% உயர் வதற்கு சாத்தியக்கூறு உள்ளதாகவும் அதற்கு மிகமுக்கிய காரணியாக சரக்கு மற்றும் சேவை வரி இருப்பதாகவும் அவ்வறிக்கை குறிப்பிடுகிறது. மேலும் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை மேலும் சீர் செய்யப்படும் நிலையில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) யானது மேலும் 2% அளவிற்கு வளரும் என்பதையும் அவ் வறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. இவ் வரி விதிப்பால் இந்தியப் பொருளாதாரத்தின் தரம் மேலும் உறுதியாகும் என்பது தெளிவு.

ஒரு நாட்டின் வரி வருவாய் அதிகரிக்கும் போது, அந்நாட்டு அரசு சமூக நலத்திட்டங்களுக்கு செலவிடும் தொகையும் அதிகரிக்கும். இதனால் நாட்டின் சமூக கட்டமைப்பு வலுப்பெறும் ரிசர்வ் வங்கி குறிப்பிட்டது போல சரக்கு மற்றும் சேவை வரியால் இந்தியாவின் GDP 2% அளவிற்கு வளர்ச்சி பெற்றால் அதன் மூலம் கிடைக்கும் வருவாய் பல்வேறு சமூக நலத் திட்டங்களுக்கு மத்திய, மாநில அரசுகள் செலவிடும். இதனால் இந்தியாவில் நல்ல சமூக மாற்றமும், முன்னேற்றமும் ஏற்படும் என்பது உறுதி.

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறையால் இந்தியா பல் வேறு அரசியல், சமூக, பொருளாதார ரீதியான பலன்களையும் பெற்றுக் கொண்டிருந்தாலும், இவ்வரி விதிப்புகளுக்கு எதிராக பல்வேறு கண்டனக் குரல்களும் எழுந்து கொண்டே தான் இருக்கிறது.

**கண்டனக் குரல்களும் - கள நிலவரமும்**

சரக்கு மற்றும் சேவை வரி விகிதம் 0%, 5%, 12%, 18%, 28% என ஐந்து விதமான (Five slabs)உள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி வரிவிதிப் புக்கு கண்டன குரல் எழுப்புபவர்கள் ஏன் இந்த 5 அடுக்கு வரிவிதிப்பு? அதற்கு பதில் ஒரே ஒரு வரி விகிதமாக (Single slab)ஏன் மாற்றக் கூடாது? என்கின்றனர்.

இதற்கு விளக்கம் கொடுக்க வேண்டுமெனில் முதலில் இந்தியாவில் நடைமுறையில் உள்ள முறைமுக வரி விதிப்பு முறையின் முக்கிய அம்சமான Regressive Taxation யைப் பற்றி தெரிந்து கொள்வது அவசியமாகிறது. இந்த Regressive Taxation படி பணக்காரரும், ஏழையும் தாங்கள் வாங்கும் ஒரு பொருளுக்கு ஒரே அளவில் வரி செலுத்துவர். உதாரணத்திற்கு ஏழை ஒருவர் ஒரு கிலோ நயம் கோதுமை மாவு வாங்குகிறார் என்றால் அதற்கு அவர் 5% சரக்கு மற்றும் சேவை வரி செலுத் துவார், அது போலவே பணக்காரரும் ஒரு கிலோ நயம் கோதுமை மாவுக்கு 5% மட்டுமே செலுத்துவது இந்த வரிவிதிப்பு முறையில் ஏழை, பணக்காரர் என்று பாகுபடுத்தி பார்க் க முடியாது.

இந்நிலையில் அனைத்து பொருளுக்கும் ஒரே அளவில் (Single rate of GST) சரக்கு மற்றும் சேவை வரி விதித்தால் ஏழை வாங்கும் ஒரு ஜோடி செருப்புக்கும், பணக்காரர் வாங்கும் ஒரு ஆடம்பர வாகனத் திற்கும் ஒரே விகிதத்தில் வரி விதிப்பு நிகழும். இதனால் ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இதனைக் கருத்தில் கொண்டு தான் இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரியானது ஐந்தடுக்கு படிநிலையாக கட்டமைக்கப்பட்டுள்ளது. ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் பொருட்கள் பெரும்பாலும் 0%,5%,12% வரிவிதிப்புக்குள்ளும், பணக்காரர்கள் பயன்படுத்தும் ஆடம் பர பொருட்கள் 18, 28% வரிவிதிப் புக்குள்ளும் வருகின்றன. ஆகவே (Single rate) ஒரு வரிவிகிதம் என்பது இந்தியாவில் அவ்வளவு எளிதில் நடைமுறைப்படுத்த முடியாது.

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்புக்கு எதிரான கண்டனக் குரல் களில் மிகவும் முக்கியமான ஒன்று பல பொருட்களுக்கும், சேவைகளுக்குமான வரி உயர்ந்து

உள்ளது என்பதாகும். சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்புக்கு முன்னால் ஒரு பொருள் வாங்கும் போது அதன் அட்டையில் அல்லது பொருள் வாங்கும் போது வழங்கப்படும் ரசீதில் விற்பனை வரி மட்டுமே இருக்கும். பொருளின் உற்பத்தி வரியானது (excise duty) அதில் இடம் பெறாது. ஆனால் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பானது விநியோகத்தின் அடிப்படையில் நிகழ்வதால் அப்பொருள் வாங்கும் போது முன்பு செலுத்திய வரிக்கு மிகையாக தற்பொழுது செலுத்துவது போன்று தோன்றும். ஆனால் அது உண்மையில்லை. சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்பில் ஒரு பொருள்,சேவைக்கான வரியானது "Revenue Neutral Rate" (RNR) என்ற கொள்கையின் அடிப்படையிலேயே நிர்ணயம் செய்யப்படுகிறது. அதாவது ஒரு பொருளுக்கு சரக்கு மற்றும் சேவை வரி விதிப்புக்கு முன் என்ன வரி (கலால் வரி, விற்பனை வரி, சேவை வரி என அனைத்தும் சேர்த்து) நிர்ணயம் செய்யப்பட்டு இருந்ததோ தோராயமாக அதே அளவு தான் சரக்கு மற்றும் சேவை வரியிலும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பெட்ரோல், டீசல் மற்றும் அது சார்ந்த பொருட்களும், பத்திரப் பதிவு வரியும் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்புக்குள் உட்படுத்த வேண்டும் என்பது ஒரு கோரிக்கையாகவே உள்ளது. ஒரு பொருளை சரக்கு மற்றும் சேவை வரி விதிப்புக்கு கொண்டுவர வேண்டுமா, வேண்டாமா என்பதனை முடிவு செய்யும் அதிகாரம் மத்திய மாநில அரசு பிரதிநிதிகள் அடங்கிய GSTகவுன்சிலுக்கு தான் உண்டு.

மாநில அரசுக்கு பெரும் வரி வருவாய் ஈட்டித்தரக்கூடிய பொருட்களில் மிகவும் முக்கியமான ஒன்று பெட்ரோல் மற்றும் டீசல். இந்த பொருட்களை சரக்கு மற்றும் சேவை வரி விதிப்புக்குள் கொண்டு வந்தால் தங்கள் மாநிலத்தின் வரி வருவாய் வெகுவாக குறைந்து விடும் என்ற கருத்தினை அடிப்படையாக கொண்டு தான் பல மாநிலங்கள் இப்பொருட்களை சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்புக்குள் கொண்டு வரத் தயங்குகின்றன. இதே போல் தான் பத்திரப் பதிவுக்கான வரி (stamp duty) யையும் மாநில அரசுகள் தங்களது வரி வருவாயை இழக்க நேரிடும் என்ற காரணத்தினால் சரக்கு மற்றும் சேவை வரிக்குள் பத்திர பதிவு வரியை கொண்டு வர எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். நிலைமை இவ்வாறு இருக்க மத்திய நிதியமைச்சர் திரு.அருண் ஜெட்லி அவர்கள் இவ்விரண்டு விநியோகங்களையும் விரைவில் சரக்கு மற்றும் சேவை வரிக்குள் கொண்டு வந்து விடுவதாக உறுதியளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பை ஆரம்ப காலம் தொட்டே எதிர்த்து வந்த மாநிலம் தமிழ்நாடு. தமிழ்நாடு ஒரு உற்பத்தி சார்ந்த மாநிலம் (manufacturing state) சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறையோ நுகர்வு சார்ந்தது (consumption based tax system). சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பின் படி எந்த மாநில மக்கள் அதிகமாக பொருட்கள், சேவைகளை நுகர்கின்றார்களோ அம்மாநிலத்திற்கே அதிகமான வரிவருவாய் கிடைக்கும். தமிழ்நாடு போன்ற உற்பத்தி சார்ந்த மாநிலமானது தன்னுடைய மாநிலத்தில் உள்ள கட்டமைப்பைப் பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்தாலும், உற்பத்தியின் பயனானது அப்பொருளை நுகரும் மாநிலத்திற்கு சென்று விடுவதால் வரிவசூல் குறையும் என்ற காரணத்தினால் உற்பத்தி சார்ந்த தமிழகம் இவ்வரி விதிப்பை எதிர்த்தது.

ஆனால் தமிழ்நாடு பயந்தது போல் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பால் இம் மாநிலத்தின் வரி வருவாய் குறையாமல் கூடிக் கொண்டு தான் செல்கிறது. ஜூலை 2017 முதல் டிசம்பர் 2017க்கு இடைப்பட்ட கால கட்டத்தில் தமிழ்நாட்டு அரசிற்கு சரக்கு மற்றும் சேவை வரியின் மூலம் ரூ.23317.76 கோடி வருவாய் கிடைத்துள்ளது. அதற்கு முந்தைய ஆண்டு இதே கால கட்டத்தில் மதிப்பு கூட்டு வரியின் (VAT) மூலம் தமிழக அரசிற்கு கிடைத்த வருவாய் ரூ.15008.10 கோடியாகும். 2018-19ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த மாநில நிதியமைச்சர் திரு.பன்னீர் செல்வம் சரக்கு மற்றும் சேவை வரியால் தமிழகத்தின் மறைமுக வரி வருவாய் உயர்ந்துள்ளதாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியா போன்ற பன்முகத் தன்மை கொண்ட ஒரு நாட்டை ஒரு வரிவிதிப்பிற்கு கீழ் கொண்டு வருவது அவ்வளவு எளிதல்ல. அத்தகைய சிக்கலான காரியத்தை பல்வேறு எதிர்ப்புகளுக்கு இடையிலும், இதன் மேன்மையை புரிந்து கொண்டு மத்திய அரசும், மாநில அரசுகளும் முனைப்புடன் இவ்வரியை அமுல்ப்படுத்தி வருவது உலகளவில் இந்தியாவின் மீதான பொருளாதார கட்டமைப்பு சார்ந்த பார்வையை மாற்றியமைத்துள்ளது.

- **அ.கோவிந்தராஜ்,** இந்திய வருவாய்த்துறை, நிதி அமைச்சகம்.

# செய்தித்துளிகள்

பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவை (University Grants Commission – UGC) நீக்கிவிட்டு அதற்கு பதிலாக உயர் கல்வி ஆணையத்தை அமைப்பதற்கு மத்திய அரசு கருதியுள்ளது. உயர் கல்வி சீர்திருத்தத்திற்கு இந்த அமைப்பு உதவும். இந்திய உயர்கல்வி ஆணையம் 2018 என்ற பெயரிலான ஒரு ஒழுங்குமுறை வரைவு (பல்கலைகழக நிதிநல்கைக் குழு நீக்கம்) மத்திய மனிதவள அமைச்சகத்தால் பொதுமக்களின் கருத்து கேட்டும், ஆலோசனைக்காகவும் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வரைவு மசோதாவின்படி உயர் கல்வி கற்பிப்புத்தரத்தை மேம்படுத்தவும், உயர்கல்வியின் தரத்தை பேணவும் உயர் கல்வி ஆணையம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். குறைந்த பட்ச அரசாங்கம், அதிகபட்சமான ஆட்சி, நிதி நல்கும் செயல்களைத் தனியாக பிரித்தல், ஆய்வு ராஜ்யத்தை முடிவுக்குக் கொண்டுவருதல், கல்வித்தரத்தில் கவனம் செலுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் உயர் கல்வி ஒழுங்குமுறை அமைப்பில் இத்தகைய மாற்றம் கொண்டுவரப்படுவதாக மத்திய மனிதவளத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் தெரிவித்துள்ளார்.

❁✧❁

பிளாஸ்டிக் பயன்படுத்துவதற்கு விதித்திருந்த கடுமையான தடையை மகாராஷ்டிரா அரசாங்கம் தளர்த்தியுள்ளது. 50 மைக்ரானுக்கும் மேலுள்ள பைகளை மட்டும் அடுத்த மூன்று மாதங்களுக்கு பிளாஸ்டிக் பைகளை சிறு வியாபாரிகள் பயன்படுத்தலாம்.

❁✧❁

தொழில் முனைவை மேற்கொள்ளும் பெண்களுக்கான நிதி ஆயோக்கின் அமைப்பு நிதிக் கழகங்கள், சமூக நிறுவனங்கள் ஆகியவற்றுடன் நோக்கு அறிக்கைகள் (Statements of intent) ஐந்தில் கையெழுத்திட்டுள்ளது. ஷ்ரி மகிளா சேவா சஹாகரி பாங்க் லிமிடெட் (Shree Mahila Sewa Sahakari Bank Limited), இந்தியா புல்ஸ் வீட்டு வசதி நிதி லிமிடெட் (India Bulls Housing Finance Limited), SREI உள்கட்டமைப்பு நிதி லிமிடெட் (SREI Infrastructure Finance Limited), ஸ்ரீமந்தா சங்கர் மிஷன் (sreemanta Sankar Mission), சுயவேலை செய்யும் பெண்கள் கழகம் (Self Employed Women's Association – SEWA) ஆகியவற்றுடன் இணைந்து தொழில் முனையும் பெண்களுக்கு உதவி செய்யவும், நிதி பெறுவதில் அவர்களுக்கு இருக்கும் சவால்களில் துணை நிற்கவும் இந்த அறிக்கைகள் உதவிடும்.

❁✧❁

6.5 மில்லியன் மெட்ரிக் டன் பெட்ரோலியத்தை அவசரக் கையிருப்பில் வைத்திருக்கும் வசதியை ஒடிசாவில் சண்டிகோலிலும், கர்நாடகத்தில் படுரிலும் ஏற்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

❁✧❁

தேசிய ஏற்றுமதி காப்பீட்டுக் கணக்கு அறக்கட்டளைக்கு (National Export Insurance Account Trust) ரூ.1400 கோடி தொகுப்பு நிதியை வழங்க பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு (The Cabinet Committee on Economic Affairs - CCEA) அனுமதி தந்துள்ளது. 2017-18 முதல் 2019-20 வரையிலான மூன்று நிதியாண்டுகளுக்கு இந்த நிதி பயன்படுத்திக்கொள்ளப்படும். இந்தத் தொகுப்பு நிதி தேசிய முக்கியத்துவமுள்ள ஏற்றுமதித் திட்டங்களுக்கு ஆதரவு அளிப்பதற்கு உதவும்.

❁✧❁

இந்தியாவும், அமெரிக்காவும் பயங்கரவாத எதிர்ப்பிலும், பலதரப்பு மன்றங்களிலும் தங்களது ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் பற்றி விவாதித்தன. ஐ.நாவில் உள்ள அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி நிக்கிஹாலே இந்தியப் பிரதமரை புதுதில்லியில் சந்தித்தார். அப்போது, வலுவான இந்திய அமெரிக்க கூட்டு ஒத்துழைப்பு உலக அமைதிக்கும், செழிப்பிற்கும் ஒரு முக்கியமான காரணியாகும் என்று இருவரும் நம்பிக்கை தெரிவித்தனர். அமெரிக்க அதிபர் டிரம்ப் தெற்கு ஆசியாவிலும், இந்தோ பசிபிக் பிராந்தியத்திலும் எடுத்திருக்கும் யுக்தி நிறைந்த முன்முயற்சிகளைப் இந்த சந்திப்பின் போது பிரதமர் மோதி பாராட்டினார். கொரிய தீபகற்பத்தை அணு அயுதங்கள் இல்லாத பகுதியாக ஆக்குவதற்கு ட்ரம்ப் எடுத்திருக்கும் நடவடிக்கைகளையும் பிரதமர் மெச்சினார்.

❁✧❁

உலக அளவில் கார் உற்பத்தியில் ஐந்தாம் இடத்தில் உள்ள இந்தியா, வர்த்தக வாகன உற்பத்தியில் ஏழாம் இடத்திலும், இருசக்கர வாகன உற்பத்தியில் முதலிடத்திலும் உள்ளது. வாகனம், வாகன உதிரிபாக உற்பத்தியில், உலகளாவிய வாகன தொழில்நுட்பங்களைப் பின்பற்றி வரும் இந்திய வாகனத் தொழில்துறை, பயனாளிகள் நலன் சார்ந்த புதுமையான உற்பத்தி முறைகளையும் பயன்படுத்தி வருகிறது. உலகின் பிற நாடுகளில் தயாரிக்கப்படும் வாகனங்களின் தரத்திற்கேற்ப இந்தியாவிலும் வாகனங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

வாகனத் தொழில்துறையில் வேகமாக மாறிவரும் தொழில்நுட்பம், குறைவான பெட்ரோலிய எரிபொருள் வளம், எரிபொருள் இறக்குமதி அளவு அதிகரிப்பு, சுற்றுச்சூழல் சீர்கேடு, பருவநிலை மாற்றம் போன்றவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, இந்தியாவிலும்

புதுமையான தொழில்நுட்பங்களைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகிறது.

வாகன உற்பத்தி, தரப் பரிசோதனைக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு வாகனம், வாகனம் சார்ந்த தொழில் வளர்ச்சிக் கவுன்சில் நிதியை, புனேயில் உள்ள இந்திய வாகன ஆராய்ச்சி சங்கத்திற்கும், கல்வி நிறுவனங்களுக்கும் வழங்குவதன் மூலம், வாகனத் தொழில்துறையில் காலத்திற்கேற்ற தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள மத்திய அரசின் கனரக தொழில்துறை ஆதரவளிக்கும்.

மத்திய கனரகத் தொழில்கள், பொதுநிறுவனங்கள் துறை இணையமைச்சர் பாபுல் சுப்ரியோ இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

❁✦❁

ருவாண்டா அரசின் கிரின்கா திட்டத்தின் கீழ் இதுவரை சொந்தமாக பசுமாடு இல்லாத கிராம மக்களுக்கு 200 பசுமாடுகளை பிரதமர் நரேந்திர மோடி வழங்கினார். ருவேரு மாதிரி கிராமத்தில் ருவாண்டா அதிபர் பால் ககாமே முன்னிலையில் பசுமாடுகளை வழங்கும் விழா 2018, ஜூலை24 அன்று நடைபெற்றது. கிரின்கா என்ற சொல்லுக்கு நீங்களும் ஒரு பசுவை வைத்துக்கொள்ளலாம் எனப் பொருள். விழாவில் பேசிய பிரதமர் மோதி, கிரின்கா திட்டத்தையும் இது தொடர்பாக அதிபர் பால் ககாமேயின் முயற்சியையும் பாராட்டினார். வெகுதொலைவில் உள்ள ருவாண்டாவின் கிராமங்களில் பொருளாதார அதிகாரமளித்தலுக்காக வேண்டி பசுக்கள் அளிக்கப்படுவதைப் பார்த்து இந்தியாவில் உள்ள மக்கள் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைவார்கள் என அவர் கூறினார். இருநாடுகளிலும் கிராமப்புற வாழ்க்கையில் உள்ள ஒற்றுமைகள் குறித்து அவர் பேசினார். கிரின்கா திட்டம் ருவாண்டாவில் உள்ள கிராமங்களின் முன்னேற்றத்திற்கு உதவும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

குழந்தைகளிடையே அதிக அளவில் காணப்படும் ஊட்டச்சத்தின்மையைப் போக்கும் வகையிலும் வறுமை ஒழிப்பை வேகப்படுத்தும் வகையிலும், கால்நடை, பயிரிடுதல் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் வகையிலும் கிரின்கா திட்டம் அதிபர் பால் ககாமே அவர்களால் தொடங்கப்பட்டது. ஏழை ஒருவருக்கு பால் கொடுக்கும் பசு அளிக்கும் கிரின்கா திட்டம் வாழ்வாதாரத்தைப் பெருக்கி, பசுமாட்டின் சாணத்தை உரமாகப் பயன்படுத்தி, வேளாண் உற்பத்தியைப் பெருக்கி, அதன் மூலம் மண்ணின் தரத்தை மேம்படுத்தி, புற்களையும், மரங்களையும் கொண்டு மண்அரிப்பு குறைப்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2006ம் ஆண்டு தொடங்கப்பட்டது முதல் ஆயிரக்கணக்கானவர்கள் கிரின்கா திட்டத்தின் கீழ் பசுமாடுகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர். 2016 ஜூன் மாதம் வரை மொத்தம் 2,48,566 பசுக்கள் ஆயிரக்கணக்கான ஏழைக் குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. ஒருவர் மற்றவருக்கு ஒரு பசுமாட்டை அளிக்கும்போது, அளிப்பவர் மற்றும் பெறுபவர் இடையே நம்பிக்கையையும் மரியாதையையும் ஏற்படுத்துகிறது என்ற ருவாண்டா நாட்டின் கலாச்சாரக் கொள்கையின் அடிப்படையில் இது அமைந்துள்ளது. சொந்தமாக பசு மாடு இல்லாத, ஆனால் புல்லை வளர்ப்பதற்குத் தேவையான நிலப்பரப்பு இருக்கும் பகுதிகளில் வசிக்கும் ஏழைகள் பயனாளிகளாக தேர்வு செய்யப்படுவதாக ருவாண்டா அரசு அதிகாரி ஒருவர் குறிப்பிடுகிறார். பயனாளி மாடு கட்டுவதற்கான கொட்டகை ஒன்றை அமைக்கும் நிலையில் இருக்க வேண்டும் அல்லது மற்றவரின் பசுமாட்டையும் சேர்த்து பராமரிக்கும் வகையில் சமூகக் கொட்டகை ஒன்றை அமைக்க முன்வரவேண்டும்.

❁✦❁

பினாமி சொத்து பரிவர்த்தனைகள் தடுப்புச்சட்டம் 1988 பினாமி பரிவர்த்தனை (தடுப்பு) திருத்தச்சட்டம் 2016 என திருத்தம் செய்யப்பட்டு பினாமி பரிவர்த்தனைகளுக்கு தடை விதிக்கிறது. 30.06.2018 வரை ரூ. 4300 கோடிக்கும் அதிகமாக மதிப்பிடப்படும் பினாமி சொத்துக்களை உள்ளடக்கிய 1600 பினாமி பரிவர்த்தனைகள் தற்காலிக முடக்கம் செய்யப்பட்டுள்ளன.

பினாமி சொத்துக்களை அடையாளம் காண இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்தியா முழுவதும் 24 அர்ப்பணிக்கப்பட்ட பினாமி தடுப்பு பிரிவுகளை வருமான வரித்துறை அமைத்துள்ளது என்று நிதித்துறை இணையமைச்சர் திரு சிவ பிரதாப் சுக்லா இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

❁✦❁

2018-19 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டபடி, 12 தொகுப்புகளில் அடங்கிய 17 இடங்கள், தனிச் சிறப்பு வாய்ந்த சுற்றுலாத் தலங்களாக மேம்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்த 17 இடங்கள் வருமாறு: தாஜ்மஹால், பதேபூர்சிக்ரி (உத்தரபிரதேசம்); அஜந்தா, எல்லோரா (மகாராஷ்ட்ரா); ஹுமாயூன் நினைவிடம், செங்கோட்டை, குதுப்மினார் (தில்லி); கோல்வா கடற்கரை (கோவா); அஜ்மீர் கோட்டை (இராஜஸ்தான்); சோம்நாத், தோலாவிரா (குஜராத்); கஜுரஹோ (மத்தியபிரதேசம்); ஹம்பி (கர்நாடகா) மாமல்லபுரம் (தமிழ்நாடு); காஸிரங்கா (அஸ்ஸாம்); குமரகம் (கேரளா); மஹாபோதி (பீகார்).

இந்த இடங்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள், சுற்றுலாப் பயணிகளுக்கு கூடுதல் வசதிகள், உள்ளூர் மக்களையும் சுற்றுலாப்பணிகளில் ஈடுபடுத்துதல், தனியார் முதலீடுகள் மூலம் ஊக்குவிப்பு, விளம்பரத்தூதர்களை ஏற்பாடு செய்தல் போன்ற பணிகளை இந்தத் தலங்கள் அனைத்திலும் மத்திய சுற்றலாத் துறையே முழுமையாக மேற்கொள்ளும். மத்திய சுற்றுலாத் துறை இணையமைச்சர் (தனிப்பொறுப்பு) திரு. கே.ஜே. அல்ஃபோன்ஸ் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

❁✦❁

# உங்களுக்குத் தெரியுமா?

### திஷா

திஷா என்பது 0 முதல் 10 வயது வரையுள்ள குறைபாடுடைய குழந்தைகளுக்கு பள்ளிக்குச் செல்லும் பக்குவத்தை ஏற்படுத்துவதற்காக முன்கூட்டியே செய்யப்படும் தலையீடு ஆகும். தேசிய அறக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வரக்கூடிய நான்கு குறைபாடுகளான நரம்பு மண்டல வளர்ச்சிக் குறைபாடு (Autism), பெருமூளைவாதம் (Cerebral palsy), மன வளர்ச்சிக் குறைவு (Mental Retardation), பலவிதமான பிற குறைபாடுகள் ஆகிய நான்கு குறைபாடுகளும் இதில் அடங்கும். குறைபாடு உடையவர்களுக்கு சிகிச்சை, பயிற்சி, குடும்ப உறுப்பினர்களுக்கு ஆதரவு தருதல் ஆகியசெயல்கள் மூலம் முன்கூட்டிய உதவி கிடைப்பதற்கு என திஷா மையங்களை தேசிய அறக்கட்டளைச் சட்டம் ஏற்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் குறைபாடு உடையவர்களைக் கொண்டிருக்கும் எந்த அமைப்பும், குறைபாடுடைய குழந்தைகளை உடைய பெற்றோர் நடத்தும் எந்த ஒரு அமைப்பும், தன்னார்வ நிறுவனங்களும் தேசிய அறக்கட்டளையில் பதிவு செய்து கொள்ளலாம். இவை பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் என்று அறியப்படும்.

திஷா மையங்களை அமைப்பதற்கும், வாழ்வாதாரச் செலவுக்கும், தொடர் செலவுகளுக்கும் தேசிய அறக்கட்டளை நிதி உதவியை அளிக்கிறது.

### மாதந்திரத் தொடர் செலவு

தேசிய அறக்கட்டளையில் பதிவு செய்துகொண்டுள்ள அமைப்புகள் பின்வரும் குறைந்தபட்ச வசதிகளைப் பெறும்:

### நாள் பராமரிப்பு

குறைபாடுடையவர்களுக்கு தினமும் குறைந்தபட்சம் நான்கு மணி நேர நாள் பராமரிப்பு வழங்கப்படவேண்டும் (காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை). வயதுக்குப் பொருத்தமான செயல்பாடுகள் இருக்கவேண்டும். மாதத்தில் குறைந்தது 21 நாள்களுக்காவது நாள் பராமரிப்பு தரப்படவேண்டும். மாதத்தில் குறைந்தது 15 நாள்களுக்காவது மையத்திற்கு வருபவர்களுக்கு மட்டுமே தேசிய அறக்கட்டளையின் நிதி உதவி கிடைக்கும்.

திஷாவில் ஒரு தொகுப்பில் 20 பேராவது இருக்கவேண்டும். அதிகபட்சம் 26 பேர் இருப்பதற்கு அனுமதிக்கப்படும். இதற்கு மேல் அதிகமான நபர்களை வைத்துக் கொள்ளமுடியாது.

குறைபாடுடையவர்கள் அதிகமாக போதுமான எண்ணிக்கையில் இருப்பார்களானால் புதிய திஷா மையங்களுக்கு விண்ணப்பிக்கலாம். குறைந்த வருமானம் உடைய (வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் உட்பட) , நடுத்தர வருவாய்க்கும் அதிகமான வருவாய் உள்ள குறைபாடுடையவர்களுக்கும் இடையே 1:1 என்ற விகிதத்தைப் பேண வேண்டும். நடுத்தர வருவாய்க்கும் அதிகமாக உள்ளவர்கள் பணம் செலுத்தி மையத்தினைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பதிவு செய்துகொண்டுள்ள மையங்கள் இந்தத் தொகையை குறைபாடு உடையவர்களின் பெற்றோர், பாதுகாவலர், குடும்ப உறுப்பினர்கள் அல்லது மையத்திற்கும், பெற்றோர், பாதுகாவலர், குடும்ப உறுப்பினர்கள்ளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பரஸ்பர ஒப்பந்தத்தில் பட்டுள்ளவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.



குழந்தை நல மருத்துவர் அல்லது துறை நிபுணர்களின் உதவியை நாடி குறைபாடு உடையவர்களைக் கண்டறிந்து திஷா மையங்கள் சேர்த்துக் கொள்ளலாம்.

### பணியாளர்கள்

குறைபாடு உடையவர் களுக்கான சிறப்புக் கல்வியாளர் அல்லது முன்கூட்டிய தலையீட்டு சிகிச்சையாளர், இயன்முறை பயிற்சியாளர், தொழில்முறை சிகிச்சையாளர், மன நல ஆலோசகர் போன்றோருக்கான முன் ஏற்பாடு இருக்கவேண்டும். இவர்களுடன் பராமரிப்பு வழங்குபவர், ஆயாக்கள் ஆகியோரும் இருக்கவேண்டும். உடற்பயிற்சி தருபவர், பேச்சுப் பயிற்சியாளர் ஆகியோரும் இருத்தல் நலம்.

### கட்டமைப்பு வசதிகள்

திஷா மையத்தில் ஒரு மருத்துவ / மதிப்பீட்டு அறை அவசியம். (மருத்துவ உதவிப்பொருள்கள், உபகரணங்களோடு) தேசிய அறக்கட்டளைக்கு அறிக்கைகள் அனுப்பவும், பெறவும் தனிப்பட்ட கணினி, ஸ்கேனர், இணைய வசதியோடு இருக்கவேண்டும்.

### ஆலோசனையும் வழிகாட்டுதலும்

குறைபாடு உடையவர்களின் பெற்றோர், பாதுகாவலர் போன்றோருக்கு தினசரி நடவடிக்கைகளுக்கும், தொடர் நடவடிக்கைகளுக்கும் ஆலோசனையும் வழிகாட்டுதலும் தரப்படவேண்டும். இவர்கள் குறைந்தபட்ச அளவிலாவது இத்தகைய ஆலோசனைகளில் பங்கேற்றிருக்கவேண்டும். திஷா மையங்கள் முதன்மை நீரோட்டப்பள்ளிகளில் குறைபாடு உடைய குழந்தைகளைச் சேர்ப்பது பற்றிய ஆலோசனைகளை வழங்கவேண்டும்.

### போக்குவரத்து வசதிகள்

இரு தரப்பினருக்கும் பொருத்தமான வகையில் போக்குவரத்து வசதிகளை திஷா மையங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும். ●

---

**வளர்ச்சிப்பாதை**

### புது தில்லி, அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் முக்கியமான நலத்திட்டங்களை பிரதமர் தொடங்கிவைத்தார்

புது தில்லி, அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் (All India Institute of Medical Sciences - AIIMS) பல்வேறு உடல்நலத்திட்டங்களை 2018 ஜூன் 29 அன்று பிரதமர் திரு.நரேந்திரமோதி தொடங்கிவைத்தார். மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா, மத்திய சுகாதாரம், குடும்பநலத்துறை இணை அமைச்சர் திரு.அஸ்வின்குமார் சௌபே, திருமதி. அனு பிரியா படேல் உடன் மற்ற பிரமுகர்களும் படத்தில் உள்ளனர்.

பல்வேறு நலத்திட்டங்களை குறிப்பாக மூத்த குடிமக்களுடன் தொடர்புடைய நலத்திட்டங்களை அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் பிரதமர் அண்மையில் தொடங்கிவைத்தார். அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் வயது மூப்பு தொடர்பான தேசிய மையத்திற்கு அவர் அடிக்கல் நாட்டினார். சப்தர்ஜங் மருத்துவமனையில் 555 படுக்கைகள் கொண்ட சிறப்பு உயர் மருத்துவ வளாகத்தையும் அவர் தொடங்கி வைத்தார். அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் 300 படுக்கைகள் கொண்ட விஷ்ரம் சதனையும், அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் இருந்து அன்சாரி நகருக்கும், அவசர சிகிச்சைப் பிரிவிற்கும் வாகனத்தில் செல்லக்கூடிய சுரங்கப்பாதையையும் பிரதமர் தொடங்கிவைத்தார்.

தற்போதிருக்கும் மருத்துவமனைகளை அனைத்து நவீன வசதிகளுடனும் ஆயத்தப்படுத்தும் பணியை அரசு மேற்கொள்ளும் என்றும், அதே சமயத்தில் தொலை தூரங்களில் உள்ள கிராமங்களையும் சுகாதாரவசதிகள் சென்று அடைவதற்கு வழிவகை செய்யப்படும் என்றும் இந்த விழாவில் பேசும்போது பிரதமர் கூறினார்.

வயது மூப்பு பற்றிய தேசிய ஆய்வு மையம் மூத்த குடிமக்களுக்கு உலகத்தரமான சிகிச்சை வசதிகளை அளிக்கும். மூத்தோருக்கான மருந்துகள் பற்றியும், அவர்களுக்கான பிற சிறப்பு சிகிச்சைத்துறைகள் பற்றியும் ஆராய்ச்சிகள் மேற்கொள்வதிலும் முக்கியமான பங்குப்பணியை ஆற்றும். இந்த மையம் பல்துறை சிறப்பு மருத்துவ வசதிகளை வழங்கும். 200 பொது வார்டு படுக்கைகளும், 20 தீவிர சிகிச்சைப்பிரிவு படுக்கைகளும் இதில் இருக்கும்.

அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்திற்கும், JPNA அவசர சிகிச்சைப் பிரிவிற்கும் இடையில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதை இவ்விரு இடங்களுக்கும் செல்வதற்கு ஆகக்கூடிய பயண நேரத்தைக் குறைக்கும். 200 படுக்கைகள் கொண்ட விஷ்ரம் சதன் வசதி அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்திற்கும், JPNA அவசர சிகிச்சை பிரிவிற்கும் வரக்கூடிய நோயாளிகளின் உறவினர்கள் தங்குவதற்கான வசதியை அளிக்கும்.

சப்தர்ஜங் மருத்துவமனையில் உள்ள புதிய அவசரசிகிச்சைப்பிரிவில் 64 முதலுதவி படுக்கைகளும், ஆபத்தில் இருக்கும் குழந்தைகள், வயதுவந்தோருக்கான பகுதிகளும், சாலை விபத்தில் சிக்கிக்கொள்வோர், வீட்டில் அல்லது பணியிடத்தில் காயம்பட்டோர், அவசர மருத்துவ சிகிச்சை, அறுவைசிகிச்சை தேவைப்படுவோர், கடுமையான விஷத்தினால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான 90 தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகளும், இங்கு இருக்கும். சப்தர்ஜங் மருத்துவமனையில் உள்ள சிறப்பு மருத்துவப்பிரிவில் இதயம், இரத்தக்குழாய், நரம்பு, நுரையீரல், சிறுநீரகம், நாளமில்லா சுரப்பிகள் ஆகியவை தொடர்பான மூன்றாம் நிலை சிகிச்சை வசதிகள் இங்கு உள்ளன. 24x7 இரத்த சுத்திகரிப்பு அலகும், மூளைக்கான MRI பட வசதிகளும் இங்கு இருக்கும். ●